

கல்கி
KALKI 25.4.93 ரூ. 3.00
தொகுதிக்கு உழைக்கும்
அதிசய எம்.பி.!


வியர்வை...
வியர்வையினால் உருவாகிறது
வேர்க்குரு. எனவே
வியர்வையை வெறுப்பதைவிட,
ஷவர் டு ஷவர் கொண்டு
வேர்க்குருவை எதிர்த்திடுங்கள்.
நறுமணமுள்ள, வியர்வையின்
எதிரி இது. இதன் செயல்
பிரமிக்க வைக்கும் உங்களை.
எனவே, வியர்வையை ஒழித்து,
வேர்க்குருவையும் ஒழிப்பீர் —
ஷவர் டு ஷவர் கொண்டு.
இலவசம்
ஷவர் டு ஷவர்-கோலோன்
கூல் சாம்பிள் பேக் ஒன்று
அடுத்த இதழுடன்.
MEDICATED
Shower to Shower
PRICKLY HEAT POWDER
COLOGNE COOL
விந்தையூட்டும் வியர்வையின் எதிரி.



'சர்கம்' என்கிற மலையாளத் திரைப்படத்துக்கு, சிறந்த தேசிய விருதான 'ஸ்வர்ண கமல்' வழங்கப் பட்டுள்ளது. அதன் தயாரிப்பாளரும் இயக்குனருமான ஹரிஹரன் இப் படத்தைப் பற்றி என்ன சொல்கிறார்?

சர்கம்:

தேசிய விருது: வசூலிலும் வெற்றி!

"இசைக்கு முக்கியத்துவம் கொடுத்து எத்தனையோ படங்கள் வெளி வந்துள்ளன. ஆனால் இசையையே ஒரு பாத்திரமாகப் படைத்துப் படங்கள் வந்ததில்லை. இந்தப் படத்தின் வித்தியாசமான அணுகுமுறையே அதுதான். இசையின் ஆற்றலைப் பற்றி நிறையக் கட்டுரைகள் படித்திருக்கிறோம். இசையினால் செடிகள் வளருகின்றன. சில நோய்கள் குணமாகின்றன என்றெல்லாம் படிக்கிறோம். இதனால் எல்லாம் தூண்டப்பட்டுத்தான் இந்தக் கதையை நான் எழுதினேன்.''

இசைக்கு முக்கியத்துவம் என்று முடிவு செய்து விட்ட பிறகு, இந்தப் படத்துக்கு இவர் மேற்கொண்ட அணுகுமுறை ஒரு கலைப்படம் என்கிற அடிப்படையிலா அல்லது கமர்ஷியல் படம் என்கிற அடிப்படையிலா?

''ஆர்ட் ஃபிலிம் என்றோ, கமர்ஷியல் படம் என்றோ இந்தக் கதையை நான் அணுகவில்லை. அந்தக் கருப்பொருளுக்கு என்ன தேவை என்று தான் பார்த்தேன். கமர்ஷியலாக வெற்றி பெற வேண்டும் என்பதற்காகத் தேவையில்லாத அடிதடி, சண்டை எதையும் சேர்க்கவில்லை. என்றாலும் வியாபார ரீதியிலும் இந்தப் படம் வெற்றி பெற்றது. கமர்ஷியலாக வெற்றி பெறுவதற்கென்று தனியாக எந்தவொரு ஃபார்முலாவும் இருப்பதாக நான் எண்ணவில்லை. படம் பார்ப்பவர்களின் நெஞ்சங்களைத் தொடும் அம்சம் ஏதுவொன்று இருந்தாலும் போதும். அந்தப் படம் வெற்றி பெற்று விடும். இதுவரை 65 படங்கள் டைரக்ட் செய்திருக்கிறேன். முக்கால்வாசிப் படங்களில் இதுதான் என் அணுகு முறை.''

குட்டன் தம்புரான் வலிப்பு நோயாளி. தெக்காடம் என்ற மருத்துவர், 'குட்டனைக் குணப்படுத்தத் திருமணம் உதவும்' என்று கூறுகிறார். விளைவு, தங்கமணி என்ற பாடகி அவன் மனைவியாகிறாள். ஆனால் தங்கமணி, குட்டனின் ஆருயிர் நண்பன் ஹரிதாஸைப் பெரிதும் விரும்பியவள். சிறந்த பாடகனாகிய ஹரிதாஸ், தன் காதலைத் தியாகம் செய்கிறான். தங்கமணி, கைகால் சுவாதீனமிழந்து, பேச்சிழந்து முடிவில் இசையின் மூலம் புது வாழ்வு பெறுகிறாள். குட்டனின் முடிவு சோகமான ஒன்று.

இந்தக் கதைக்கு ஏற்ப நடிகர்களை எவ்வாறு தேர்ந்தெடுத்தார்?

''ஒரு கதையில் ஒரு பாத்திரத்தை உருவாக்கும் போது, அந்தப் பாத்திரம் இப்படித்தான் இருக்கும் என்று நம் மனத்தில் ஒரு தோற்றம் எழும். அதற்குப் பொருத்தமாக யார் கிடைக்கிறார்களோ அவர்களைத்தான் போடுகிறேன். அது யாராக இருந்தாலும் பரவாயில்லை. நமக்கு என்ன தேவையோ அதை அவர்களைச் செய்ய வைத்து விட முடியும். ஓர் இயக்குனரின் பணியே அதுதானே!''

'இவ்வாறு செய்தால்தான் பாத்திரங்கள் நிற்கும். கதைக்கு வெற்றி. அப்படிச் செய்யாவிட்டால் நடிகர்கள்தான் நிற்பார்கள். பாத்திரங்கள் அடிபட்டு விடும்' என்பது இவருடைய உறுதியான நம்பிக்கை. 'படம் பார்ப்பவர்கள் நடிகர்களை மறந்து பாத்திரங்களைப் பின் பற்றும் போதுதான் வெற்றி கிட்டுகிறது' என்கிறார் இவர்.



★ ஹரிஹரன்

– சி.ஆர்.கே.

படங்கள் உதவி :
ஃபிலிம் நியூஸ் ஆனந்தன்

திரிபுரா தசரதன்

முதல் மலைஜாதி முதல்வர்!



நான்கு சகோதர சகோதரிகளுடன் பெரிய குடும்பத்தில் மூத்த மகனாகப் பிறந்த அந்தச் சிறுவனுக்குப் படிக்க வேண்டும் என்று கொள்ளை ஆசை. ஆனால் அவன் வசித்த இடமோ ராமச்சந்திரகாட் என்கிற குக்கிராமம். ஐந்தாவது வரை உள்ள பள்ளிக்குச் செல்வதென்றால் கூட நான்கு கி.மீ. நடக்க வேண்டும். காட்டைத் திருத்தி கழனியாக்கும் மலைஜாதி குடும்பம் அது. நேரம் கிடைக்கும்போதெல்லாம் வயல் வெளியில் மணலில் எதையாவது கிறுக்கிக் கொண்டு உட்கார்ந்து கொண்டிருப்பான் அவன்.

பார்த்தார் அப்பா. சிறுவனின் ஆர்வத் திற்குத் தடை போடாமல் பள்ளியில் சேர்த்து விட்டார். தனியாகக் காடு, மலை கடந்து சென்று ஐந்தாவது வரை படித்து முடித்தான். தொடர்ந்து படிக்கப் பள்ளியில்லா ததால் இருபத்தேழு வயதில்தான் மெட்ரி குலேஷன் பரீட்சை எழுத முடிந்தது!

அந்தச் சிறுவன்தான் இன்று திரிபுரா மாநிலத்தின் முதல்வராகப் பொறுப்பேற் றுள்ள தசரத் தேவ். மலை ஜாதியைச் சேர்ந்த ஒருவர் முதல்வராகப் பொறுப்பேற்றிருப் பது இதுவே முதல் முறை.

தசரத் இளைஞராக இருந்த போது, அப்போது திரிபுராவை ஆண்டு கொண் டிருந்த அரசனால், பழங்குடிகள் மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டனர். இதனால் வேதனையுற்ற அவர், மலைஜாதி மக்களை ஒருங்கிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். மூடநம்பிக்கைகளை ஒழிக்கவும் படிப் பறிவு ஊட்டவும் அரும்பாடுபட்டார். இரண்டே வருடங்களில் 488 தனியார் பள்ளி களை உருவாக்கிய பெருமை இவருக்கு உண்டு. இதனாலெல்லாம் அவர் அடைந்த துன்பங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அரசனின் கண்ணில் சிக்காமல் தலைமறைவு வாழ்க்கை வாழ வேண்டியிருந்தது. அரசப் படைகளை எதிர்த்து ஆயுதமேந்திய இளை ஞர்களையும் தயார் செய்தார் தேவ். இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு வல்லப பாய் படேல் சமஸ்தானங்களை இந்தியா வுடன் இணைத்த போதுதான் திரிபுரா மக்களுக்கும் கொடுங்கோல் ஆட்சியில் இருந்து விடுதலை கிடைத்தது.

உலகப் போரின் போது ராணுவத்தில் சேர்ந்தும் பர்மா பகுதியில் பணியாற்றி யிருக்கிறார் தேவ். தேசபக்தி, சமுதாய உணர் வுடன் பாடுபட்டதில் தசரத்தின் படிப்பு தடைப்பட்டாலும், பின்னர் கல்கத்தா பல்கலைக் கழகத்தில் பண்டைச் சரித்திரத் தைப் படிக்க பட்டமேற்படிப்பில் சேர்ந்தார் தசரத். ஆனால் அவரால் தொடர்ந்து படிக்க முடியவில்லை. காரணம், கம்யூனிஸ்ட் இயக்கம் அவரைக் கவர்ந்ததுதான். மறுபடி யும் சிறிது காலம் தலைமறைவு வாழ்க்கை!

பத்து வருடங்கள் திரிபுரா மாநிலத்தில் துணை முதலமைச்சராக இருந்திருக்கிறார் தேவ். தொடர்ந்து நான்கு முறை பாராளு மன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

திரிபுரா மாநிலத்தில் மே. வங்கத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாகக் குடியேறி, அங்குள்ள பழங்குடிகள் மீது ஆதிக்கம் செலுத்துவதை எதிர்த்துப் பெரிய அளவில் பழங்குடிகள் இயக்கம் ஒன்று நடந்தது. இரு பிரிவினரையும் சமாதானப்படுத்தி சகஜ நிலை திரும்ப வழிவகுத்தவர் தசரத்தான்.

இந்த முறை கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெற்றால் முதல்வர், நிருபன் சக்ர வர்த்தியா, தசரத் தேவா என்று திரிபுரா மாநி லத்தில் பட்டிமன்றமே நடந்த போது, 'எனக்கு வயதாகி விட்டது. தேவ்தான் பொருத்தமான நபர்' என்று வழி விட்டு அகன்றார் நிருபன். இத்தனைக்கும் தேவுக்கே 77 வயதாகிறது!

பதவியேற்றவுடன் முதல் காரியம், 'சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதுடன் பஞ்சாயத்துத் தேர்தல்களையும் நடத்துவது தான்' என்று கூறி ஜனநாயக அமைப்புகளின் மீது தமக்குள்ள நம்பிக்கையை வெளிப் படுத்தியிருக்கிறார் தசரத் தேவ்.

- தில்லப்பா



பழனி, ராணிப்பேட்டை தொகுதிகளில் தேர்தல் நடப்பதைக் குறித்து ஆபீஸ் பையன் எடுத்த கருத்துக் கணிப்பு இது.

(பையனுக்குக் கணக்குக் கொஞ்சம் வீக். ஆகையால் ஆங்காங்கே கூட்டல் உதைக்கும். மன்னிக்கவும்.)

ஆபீஸ் பையனின் கருத்துக் கணிப்பு!

1. யாருக்கு உங்கள் ஓட்டு?
காங்கிரசுக்கு : 48%
திமுகவுக்கு : 48%
காங்கிரஸ் - அதிமுக கூட்டணிக்கு : 42%
திமுக முஸ்லீம் லீக் கூட்டணிக்கு : 37%
அதிமுக - காங்கிரஸ் - திமுக - கம்யூனிஸ்ட் - பா.ஜ.க. - பாட்டாளி மக்கள் கூட்டணிக்கு : 72%
'யாருக்கு என்று இன்னும் நாங்கள் தீர்மானிக்கவில்லை' என்று சொன்னவர்கள் : 18%
யாருக்கு என்று இன்னும் தன் மனைவி தீர்மானிக்கவில்லை என்று சொன்னவர்கள் : 92%

2. யார் வெற்றி பெறுவது நாட்டுக்கு நல்லது?
காங்கிரஸ் வெற்றி பெறுவதே நல்லது : 15%
திமுக வெற்றி பெறுவதே நல்லது : 15%
'யார் வெற்றி பெற்றால் உனக்கென்னய்யா ஆச்சு?' என்றவர்கள் : 38%
'யார் வெற்றி பெற்றால் எனக்கென்னய்யா ஆச்சு?' என்றவர்கள் : 39%

3. கோஷ்டிப் பூசல் காங்கிரஸின் வெற்றியைப் பாதிக்குமா?
ஆம். என்றவர்கள் : 15%
இல்லை என்றவர்கள் : 18%
நல்ல ஜூஸ் எங்கேங்க கிடைக்கும் என்றவர்கள் : 17%

4. கோஷ்டிப் பூசலினால் தி.மு.க. பலவீனப்பட்டுள்ளதா?
ஆம் என்றவர்கள் : 72%
இல்லை என்றவர்கள் : 48%
'நல்ல பஞ்சாமிர்தம் எங்கேங்க கிடைக்கும்' என்று கேட்டவர்கள் : 39%

5. இந்தத் தேர்தலின் முடிவு அதிமுக ஆட்சியின் ஸ்திரத் தன்மையைப் பாதிக்குமா?
பாதிக்கும் : 35%
பாதிக்காது : 35%
பாதித்தாலும் பாதிக்கா விட்டாலும் பாதிக்கலாம், இல்லை என்றவர்கள் : 35%
'என் மாமியார் ஊரிலிருந்து வந்திருக்காங்க. அப்புறமா வாங்க' என்றவர்கள் : 35%

6. வெற்றி பெற்றவர் உடனடியாகச் சரிசெய்ய வேண்டிய விஷயம் எது?
விலைவாசி என்றவர்கள் : 2%
கொசு என்றவர்கள் : 98%
'அவங்க செலவழிச்ச பணம்' என்றவர்கள் : 18%
'கொஞ்சம் சத்தமா சொல்லுங்க' என்றவர்கள் : 72%

7. இந்தத் தேர்தல்களை இன்னும் சில காலம் ஒத்திப் போட்டிருக்கலாமா?
ஆம் : 22%
கூடாது : 22%
கதவைச் சாத்திக் கொண்டவர்கள் : 79%
போலீசைக் கூப்பிட்டவர்கள் : 65%

- 'அவிட்டம்'

(மேற்படி கருத்துக் கணிப்பில் பங்கு கொண்டவர்களில் ஆண்கள் : 55% பெண்கள் 75% இரண்டும் கெட்டான்கள் : 47% அரைப் பைத்தியங்கள் : 8% அரை டிக்கெட்டுகள் : 5% ரயிலேறிக் கொண்டிருந்தவர்கள் : 25% ரயிலிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தவர்கள் : 25% கருத்துக் கணிப்பு எடுக்க வந்தவரை அடிக்க வந்தவர்கள் 15% நாயை அவிழ்த்து விட்டவர்கள் : 3%)

இலக்கியச் சிந்தனைக்கு இரட்டை நன்றி!

பெரும்பாலோர் பேச்சு கேட்க வரவில்லை! பேசிப் போகத்தான்!

புத்தாண்டு தினத்தில் வருடாந்திரக் கூட்டம் நடத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்த இலக்கியச் சிந்தனை இந்த வருஷம் சில தினங்கள் முன்னதாகவே நடத்திவிட்டது. காரணம், புத்தாண்டு தின டீவி ஸ்பெஷல் நிகழ்ச்சிகளாய் இருக்கலாம். இன்னும் கொஞ்ச நாள் போனால் கல்யாண முகூர்த்தம் கூட டீவி புரோகிராம் பார்த்துத்தான் நிர்ணயிக்கப் போகிறார்கள்!

வருடம் தோறும் சிறந்த சிறுகதை ஒன்றுக்கும், சிறந்த நாவல் ஒன்றுக்கும் பரிசு கொடுக்கும் நல்லகாரியத்தை ரொம்ப நாளாகச் செய்து வரும் இ. சிந்தனை, இந்த வருஷம் நாவல் பரிசு ஏதும் வழங்கவில்லை. பரிசுக்குத் தகுந்த நாவலாக எதுவும் கண்ணில் படாததாகக் குறிப்பிட்டார்கள். பாரதிய பாஷா பரிஷத் விருது (சமீபத்தில்) பெற்ற 'சுரம் கசிந்த நிலம்', மற்றும் 'அங்குத்தாய்' இவையெல்லாம் இந்த வருஷத்திய சிறந்த நாவல்கள் இல்லையா என்று புல்வெளி ஜிப்பாக்காரர்கள் சிலர் முணுமுணுத்தது உரக்கவே கேட்டது. 'ஆழ்ந்த சோகம் தான் சிறந்த சிறு கதையைத் தரும்' என்று பரிசு பெற்ற சோ. தருமன் பேசிக் கொண்டிருந்த போது ''டீ சாப்பிடலாம், வர்றீங்களா!'' என்று பல நாற்காலிகள் கிறீச்சிட்டன.

மேடையில் (மலையாள) எம்.டி. வாசுதேவன் நாயர், வாஸந்தி, பிரேமா நந்தகுமார், விட்டல்ராவ்.

ஆங்கிலத் தமிழில் வாஸந்தியும், மலையாள ஆங்கிலத்தில் 'நாயர் சாபும்' 'நல்லிலக்கியம்' பற்றி முன்வைத்த கருத்துக்களை முதல் வரிசைக்காரர்களாவது கண்டிப்பாகக் கவனித்திருப்பார்கள்.

வழக்கமாக நடைபாதையை ஆக்ரமித்திருக்கும் புஸ்தக ஸ்டால்கள் ரொம்ப சோகமாகத் தூங்கி வழிந்தன.

வானதி ஸ்டாலில் கூட 'வெரைட்டி' இல்லை! யாரும் இன்னும் சமீபத்திய 'கண்காட்சி சோகத்'திலிருந்து மீண்டிருக்கவில்லை. ஞானச்சேரிக்காரர் தம் புத்தகங்களை ஒரு சூட்கேஸில் கொண்டு வந்திருந்தார். 'விருட்சம்' ஸ்டாலில் இருந்தவற்றை ஒரு ஜோல்னாவுக்குள் நிரப்பிவிடலாம்!

ஒரு விஷயம்.

விழாவுக்கு வந்திருந்தவர்களில் பெரும்பாலோர் பேச்சு கேட்க வரவில்லை! பேசிப் போகத்தான்!

கணையாழி கஸ்தூரி ரங்கன், தினமணி மாலன், குமுதம் பாமாஜி, பால்யூவிலிருந்து போலீஸ் செய்தி அஜயன் பாலா வரை சர்வ 'வர்ணத்தாரும்' சங்கமித்தது பார்க்க ரொம்ப வித்தியாசமாக இருந்தது!

இலக்கியம் இருக்கட்டும், வருஷத்துக்கு ஒருமுறை இப்படி சகலமானவரையும் சந்திக்க வாய்ப்பு வேறெங்கே கிடைக்கும்? இதற்கும் சேர்த்து இலக்கியச் சிந்தனைக்கு நன்றி சொல்லித்தானாக வேண்டும்!

– பா. ராகவன்



* வாசுதேவன் நாயரிடம் பரிசு பெறுகிறார் தருமன்

அம்மா பொண்ணு



பாரதிராஜா 40%, மணிரத்னம் 20%, ஸ்ரீதர் 10%, விசு 5%, பாக்யராஜ் 15%, சுயம் 10% என்று ஒட்டு மொத்தமாகக் கலந்து அடித்திருக்கிறார்கள்.

கதையாவது, ஒன்னாவது? எங்கோ ஆரம்பித்து, எங்கெங்கோ சுற்றி, எப்படியெல்லாமோ நகர்ந்து, அப்பாடா, இரண்டு மணி நேரத்தில் வணக்கம்!

மூணு நாள் தாடியுடன் ஹீரோ விக்னேஷ். படம் முழுக்க மூக்கால் அழுகிறார்.

ஹீரோயினுக்கு வேலையே இல்லை 'கம் மனாங்காட்டியும்'! காதலன் ஒழுங்காகப் படிக்க வேண்டும் என்பதற்காகக் காதல் தியாகம் செய்கிறாராம்!

மாண்புமிகு காதலன் அதற்கு என்ன பிரதி உபகாரம் பண்ணுகிறார்? கள்ளச் சாராயம் விற்று, காசு சேர்த்து, காதலியை வேறு எவனோ ஒருத்தனுக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க உதவுகிறார். அப்புறம், ஏதோ நேர்மையான வழியில் சம்பாதித்ததாக (என்ன வழி என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம்!) ஒரு தங்க டாலர் கொண்டு வந்து காட்டுகிறார்.

அட, போங்கப்பா, ரீல் விட்டாலும் நம்பும்படி விட வேண்டாம்?

ஹீரோவின் நண்பனாக வரும் குண்டுகோபால்... ஸாரி, நந்தகோபால் செம கலகல. அவரது ஆதிக்கத்தில் செந்தில், கவுண்டமணி அம்பேல் ஜுட்!

ஸ்கூல் வாத்யாராய் நாகேஷ், நெஞ்சில் நிறைகிறார். இந்த வயசில் என்ன தத்ரூபம்!

அப்புறம் இசை. மறக்காமல் ஆறு காதுகளுக்குப் பஞ்சு கொண்டு போங்கள். (பக்கத்திலிருப்பவருக்கும் கொடுக்கலாம் புண்ணியமுண்டு!)

டைரக்டர் முதற்கொண்டு பல புதுமுகங்கள்.

பரிதாபமாயிருக்கிறது

அடுத்த முயற்சி வெல்வதாகுக!

– ஆர்.பி.ஆர்.

பிரசாந்த் - கஸ்தூரி மோதல், தொடர்ந்து அவர்களிடையே எழும் காதல், திருமணத்துக்கு எதிர்ப்பு, பிரிவு, துயரம், பின் உச்ச கட்டத்தில் இணைவு என்கிற இளமை மேற் பூச்சு படம் நெடுக விரவியிருந்தாலும், அடித் தளத்தில் வேரூன்றி வளரச் செய்வது லட்சுமியின் வாழ்க்கையை அழுத்தி நிற்கும் சோகம், அதை மீறி மேலெழும்பத் துடிக்கும் வேகம், நீதி மன்றத்தில் நாசரின் முகத்திரையைக் கிழிக்க முனையும் விவேகம், முடிவில் உண்மையை வெளிப்படுத்தி வழக்கத்துக்கு மாறாக அவரை உதறித் தள்ளும் முற்போக்கு ஆகியவை.

லட்சுமி, நாசர், நாகேஷ் என்கிற முக்கூட்டணியின் மேற்பார்வையில் அதனை மறைந்த இன்றைய நிகழ்ச்சிகள் மொட்டவிழ்ந்தாலும், அவ்வப்போது ஒவ்வொரு கட்டமாக அன்றைய நிகழ்ச்சிகள் அவர்கள் நினைவில் பளிச்சிட்டு உள்ளடங்கியிருக்கும் பின்னணியைப் புலப்படுத்துவது சுவை சேர்க்கும் உத்தி.

நாகேஷ் ரொம்ப ரொம்ப சோகேஷ்!

நாசரின் வில்லத்தனம் அளவெடுத்துத் தைத்த சட்டை. அது அவருக்குப் பொருந்துவதை விட அவர் அதற்குப் பொருந்துவது அதிகம்.

கிளிப் பிள்ளைகளாக அந்த இளமை ஜோடி. போகப் போக, அனுபவம் கூடுதலாக சேர வாய்ப்பு.

இளையராஜாவின் இசையில் ஆறு பாடல்கள். நினைவில் நிற்பது "மலையோரம் மாங்குருவி."

ஊட்டியின் எழிலைக் கண்களில் நிறைப்பது காமிராக்காரரின் கைவண்ணம். துணைக்கு கினி மால்கோப்.

முக்கிய பொறுப்பில் இன்ஸ்டிட்யூட் பட்டதாரி. ஆர்வம் தெரிகிறது. குறைகளை விட நிறைகள் கூடுதல்.

– சி. ஆர். கே.

எங்க தம்பி





● ஊர்வலத்தில் வரவேற்பு

'மணி' ஓசைக்கு மயிலா

ராஜீவ் ஸ்டைலில் பைஜாமா - குர்த்தா. அகன்ற பிரகாசமான முகம்; நெற்றியில் வந்து விழும் முடிக் கற்றையை ஒதுக்கிக் கொண்டு போகிறார், மணி சங்கர் அய்யர்.

"தமிழ்நாட்டில் உங்கள் தொகுதியில் சுற்றுப்பயணம் செய்யும் போதாவது வேட்டி கட்டிக் கொள்ள வேண்டும் என்ற 'டெக்னிக்'கில் உங்களுக்கு நம்பிக்கை இல்லை போல் இருக்கிறது!" பாதயாத்திரையினூடே ஓய்வு நேரத்தில் கேட்கிறோம்.

"பழக்கம் இல்லாததுதான் காரணம். வேஷ்டி நழுவி விடுகிறது!" என்று சிரிக்கிறார் மயிலாடுதுறை எம்.பி.

ஆனால் ராஜீவின் நண்பர் என்ற 'இமேஜு'க்கு இந்த உடை பொருந்துகிறது என்பதோடு, பிற தமிழ்நாட்டு அரசியல்வாதிகளிடமிருந்து பிரித்துக் காட்டி, தனித்தன்மையையும் சேர்க்கிறது.

டெலிபோனில் சரளமான தமிழில் பேசுகிறார்.

"நீங்கள் தமிழ் தெரியாதவர் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே?"

"புரிஞ்சுக்காம சொல்லியிருக்காங்க. தொல்காப்பியம், திருக்குறள் எல்லாம் படிச்சவன்தான் நான். என் அம்மா பாக்கியலட்சுமி, பாக்யம் சங்கர் என்ற பெயரில் ரெண்டு தமிழ்ப் புத்தகங்களே எழுதியிருக்கிறார்!"

● பாதயாத்திரை கிளம்பு முன் பழனிவேலு வீட்டில்

"நீங்கள் பிறந்தது எங்கே?"

"லாகூரில். அதாவது இப்போதைய பாகிஸ்தானில். 1927-ல் ஒரு காம்யூனல் ஜி.ஓ. வந்தது. அப்போது அப்பா சென்னையை விட்டு விட்டு லாகூர் போய் விட்டார். 14 ஆண்டுகளுக்குப் பிறகு. அதாவது '41ல், நான் பிறந்தேன்."



''அப்படியானால் தமிழ்நாட்டோடு உங்கள் தொடர்பு எப்படி...?''

''பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு நாங்கள் இந்தியா வந்தோம். திருவையாறு அருகே கார்குடி என்றொரு கிராமம். அதில் தான் சித்தப்பா இருந்தார். தமிழ் நாட்டில் வேறு ஓர் இடமும் எங்களுக்கு அப்போது முக்கியமில்லை. கிராமத்துக்கு வந்தால் மூன்று மாசம் சேர்ந்தாற்போல் தங்குவோம். தஞ்சாவூர் ஆனந்தா லாட்ஜுக்குப் போய் மசால் தோசை சாப்பிடுவோம். கும்ப கோணத்துக்குப் போய், புடைவைகள் வாங்குவோம்! நிரந்தரமாகத் தமிழ்நாட்டுக்கு வர வாய்ப்பே இல்லை. ஒரு விமான விபத்தில் என் தகப்பனார் காலமான போது, அவருக்கு 45 வயதுதான். எனக்குப் பன்னிரண்டு வயது. வங்கியில் இருந்த மொத்தப் பணமே எட்டாயிரம் ரூபாய் தான்!''

''டூன் ஸ்கூலில் எப்படிச் சேர்ந்தீர்கள்?''

''அந்தப் பள்ளிக்கூடத்தில் படித்த ஒரே ஏழைப் பையன் நான்தான்! அப்பாவின் பெயரில் இன்சூரன்ஸ் பாலிஸி இருந்தது பின்னர் தெரிய வந்தது. அந்தத் தொகையை ஒரு சின்ன ரூமில், மின்விசிறி கூட இல்லாமல் இருந்து கொண்டு, என் கல்விக்காகவே

டுகிறது!

செலவழித்தார் என் தாயார்.''

''கேம்ப்ரிட்ஜில் படித்தீர்களா?''

''ஆமாம். அங்கேதான் ஒரு கம்யூனிஸ்ட் ஆனேன்! மஜூம்தார், நாஸ குப்தா என்ற இரு சக மாணவர்கள் எனக்கு மார்க்ஸியம் பற்றிச் சொல்லித் தந்தார்கள். கேம்ப்ரிட்ஜில் ஒரு கம்யூனிஸ்ட்டாக அறியப்பட்ட பிறகு, I.F.S தேர்வு எழுதினேன். தேறினேன். ஏழாவது இடம் கிடைத்தது! ஆனால், 'நீ ஒரு கம்யூனிஸ்ட். அதனால் உனக்கு வேலை கொடுக்க இயலாது!' என்று சொல்லி விட்டார்கள். வி.எஸ். வீட்டில்தான் முதலில் டில்லியில் தங்கியிருந்தோம். அவரிடம் கேட்டிருக்கிறார்கள். 'அவர் நான் ஒரு கம்யூனிஸ்ட் என்றும், என்னைத் தேர்வு செய்ய வேண்டாம்' என்றும் சொல்லி விட்டார். துணை ஜனாதிபதியாக இருந்த டாக்டர் ராதாகிருஷ்ணனை எங்கள் குடும்பத்துக்கு நன்கு தெரியும். அவரைப் போய்ப் பார்த்தேன். அவர் நேருவைப் பார்க்கச் சொன்னார். 'அவர் எந்தக் கட்சியை ஆதரித்தால் நமக்கு என்ன?' என்று நேரு சொல்லவே, அப் போது உள்துறை அமைச்சராய் இருந்த லால்பகாதூர் சாஸ்திரியிடம் என் ஃபைல் போய், அவர் அதை ஏற்றுக் கொண்டும் விட்டார். ஆனால், காமராஜர் திட்டத்தில் சாஸ்திரிஜி அமைச்சரவையிலிருந்து வெளியேறவே, என் ஃபைல் கையெழுத்தாகவில்லை! கேம்ப்ரிட்ஜில் நான் படித்த போது இருந்த முதல்வர் சர் ஐவர் ஜென்னிங்ஸ், நேருவின் நண்பர். அவர் ஒரு கடிதம் எழுதவே, நேரு உடனே உள்துறை கூடுதல் செயலர் எல்.பி. சிங்கிடம் சொல்ல, போட்டி முடிந்தது. I.F.S. ல் சேர்ந்தேன். என் கம்யூனிஸ



✱ ஒவ்வொருவருக்கும் கனவுகள் இருக்க வேண்டும்.



எதனாலே?

✣ குளிரின் போது பற்கள் ஒன்றுடன் ஒன்று கிட்டிக் கொள்வது ஏன்?

நோக்கு மாறி வேலையும் பார்க்கத் தொடங்கினேன்!''

''ராஜீவுடன் எப்படித் தொடர்பு ஏற்பட்டது?''

''1984 ஆம் வருடம், ஆப்பரேஷன் ப்ளூ ஸ்டார் நடந்த போது, நான் ஐ.நா. சபையில் இருந்தேன். சீக்கியக் கோயில் பாதிக்கப்படவில்லை என்று என்னிடம் பிரசாரம் மேற்கொள்ளச் சொன்னார்கள். நான் செய்த சொற்பொழிவுகள், விடுத்த அறிக்கைகள் எல்லாம் ரிப்போர்ட்டுகளாக ராஜீவுக்குப் போய்க் கொண்டிருந்தன. இது எனக்குத் தெரியாது. இது ஒருவிதத்தில் அதிர்ஷ்டம் என்றால், இன்னொரு விதத்தில் துரதிர்ஷ்டமாயிற்று. நம் நாட்டிலேயே என்னை ஹெச்.கே.எல். பகத்தின் செய்தி ஒலிபரப்புத் துறையில் போட்டு விட்டார்கள்! இரண்டு மாதங்கள் வேதனைதான். ஆனால் அக்டோபர் 31 ஆம் தேதிக்குப் பின் ராஜீவ் பிரதமர் ஆகி விடவே, அருண்சிங் சொன்னால் ராஜீவிடம் எடுபடும்; மறுபடி வெளியுறவுத் துறைக்கே போய் விடலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அதற்குள் தேர்தல் பிரசாரம் ஆரம்பமாகி விட்டது. 'நீங்கள் பி.எம். அலுவலகத்தில் வேலை செய்யத் தயாரா?' என்று கேட்டார் அருண்சிங். 'ஆகா' என்றேன். ஆனால் பிரதம காரியதரிசி பி.சி. அலெக்சாண்டருக்கு என்னைப் பிடிக்காது. என் வேண்டுகோளை ராஜீவுக்கு அவர் அனுப்பாமலே, 'இங்கே இடம் இல்லை. நீ பழையபடி வெளியுறவுத் துறைக்கு வேணுமானால் போய் விடு' என்றார். ஆனால், உளவு சமாசாரம் ஒன்றில் அலெக்சாண்டர் பெயர் அடிபடவே, ஒரே வாரத்தில் அவர் பி.எம். ஆபீஸிலிருந்து போய் விட்டார்! ராஜீவ் என்னை நியமித்து விட்டார். பிறகு சுற்றுப் பயண ஏற்பாடுகள் கவனத்துடன் தயார் செய்ய, நான் நாள் பூரா அவரோடு இருக்க வேண்டியதாயிற்று. நவம்பர் 85க்குப் பிறகு அவருடைய சொற்பொழிவுகள் எல்லாவற்றையும் என்னைக் கொண்டே எழுதச் சொன்னார். ''உனக்குத் தெரியும் - நான் என்ன நினைக்கிறேன் என்று. நீயே எழுதி விடு!'' என்றார் ராஜீவ். குறைந்தபட்சம் ஆயிரம் சொற்பொழிவுகள் அவருக்காக எழுதியிருப்பேன். தினசரி 18, 20 மணி நேர வேலை - தொடர்ந்து ஐந்து வருஷமாக. அதனால், இப்போது காரில் உட்கார்ந்து கொண்டால், ஐந்தே நிமிஷத்தில் தூங்கி விட முடியும். அப்படிப் பழகி விட்டது. வண்டி வேகமாகப் போனால் ராஜீவ் 15 செகண்டுகளில் தூங்கி விடுவார்!''

''சரி, அதிகாரி என்ற முறையில் ராஜீவுக்கு உதவியாகப் போய்ச் சேர்ந்தீர்கள் - அரசியலுக்கு எப்படி வந்தீர்கள்?''

''தூர நின்று அரசியலை வேடிக்கை பார்த்தவன் நான். ஆனாலும் சின்ன வயதிலிருந்தே இதைப் பற்றி நிறைய யோசித்துக் கொண்டிருந்தேன். ஒரு சமயம் விமானத்தில் ஏறிய பிறகு, அனந்தப்பூர் போகும் ஒன்றரை மணி நேரத்தில், தனியாக ராஜீவிடம், 'ஒரு முக்கிய விஷயம்' என்றேன். ''ஏன், என்ன?'' என்றார் ராஜீவ். ''அப்போதே அரசியலுக்கு வர வேண்டும் என்று இருந்தேன். இப்போதைக்கு லோக் சபாவில் நுழைய முடியாது; ராஜ்ய சபாவில் எம்.பி. ஆக்க முடியுமா? வெளியுறவுத் துறை வேலையை விட்டு விடுகிறேன்!'' என்றேன். ''என்னைக் கேட்டால்? நீயே யோசித்துச் சொல்!'' என்றார் ராஜீவ். நான் ஒரு மாதம் பொறுமையாகக் காத்திருந்தேன். என்.டி. திவாரியைக் கேட்டேன். அவர் சரியான பதில் தரவில்லை. 'மணி சங்கர அய்யருக்குப் பேராசை. ராஜ்ய சபா மெம்பர் ஆனால் மந்திரி ஆகி விடலாம் என்று பார்க்கிறார். பதவிக்காகத்தான் இது!' என்றார் தவான், திவாரியிடம்.

''வேலையை விட்டு விடப் போவதாக, மாமியார் வீட்டுக்கு வந்து குழந்தைகளிடம் சொன்னேன். ராஜிநாமா செய்த பிறகு சம்பளம் எங்கேயிருந்து வரும்? மூத்த மகள் சுரண்யா, 'என் படிப்புக்கு மட்டும் ஏதாவது ஏற்பாடு செய்து விட்டால் போதும்' என்றாள். என் சகோதரன் சுவாமிநாதன் அய்யர், 'நான் பார்த்துக் கொள்ளுகிறேன். கவலைப்படாதே!' என்றார்.

''தவான் சொன்னார், 'டெல்லியில் அத்வானியை எதிர்த்து நீ போட்டியிடலாமே?'. என்னைத் தீர்த்துக் கட்டத்தான் இந்த யோசனை என்று புரிந்தது. மயிலாடுதுறையில் என்னை லயன்ஸ் கிளப்பில் பேசச் சொன்னார்கள். 'நீங்கள் ஆங்கிலத்தில் பேசப் போகிறீர்களா? தமிழிலா?' என்று கேட்டார்கள்.

'' 'தமிழில் பேச முடியாமல் போனால், ஆங்கிலத்தில் பேசுகிறேன்!' என்றேன் - பஞ்சாயத்து ராஜ் பற்றிய பேச்சு. எழுந்து நின்றேன். அதுதான் தெரியும். 45 நிமிஷம் பேசினேன். டேப்பில் பதிவு செய்ததை ப. சிதம்பரத்திடம் கொடுத்தேன். 'இந்த அளவுக்குப் பேச்சாற்றல் போதுமா? தேர்தலில் போட்டியிட முடியுமா?' என்று கேட்டேன். ''அதெல்லாம் இருக்கட்டும். நீர் மூப்பனார் ஆளா?'' என்று பதில் கேள்வி கேட்டார் சிதம்பரம். நிறையத் தொகுதிகளைத் தேடினேன். மத்யபிரதேசத்தில் ஸிவனி, ராஜஸ்தானத்தில் பாலி, ராம்டேக், இந்தோர், புது தில்லி என்று அலைந்தேன்.

''ஜனவரியில், பெங்களூரில் ரோடரி கிளப்பில் பேசி விட்டு, இரவு தில்லிக்குப் போனேன். பேப்பரைப் பார்த்தேன். செய்தி : பகீர் முகமது அவர்கள் (மயிலாடு

பார்க் டவுன்

பெனிபிட் பண்டு லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் துவக்கம் 1985

223, தெற்கு தங்கசாலை வீதி (முதல் மாடி), சென்னை - 600 003. போன்: 582676; 564354

பிக்சட் டிபாசிட் திட்டம்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	* 5 ஆண்டு
13%	*14%*	*15%*	*17%*	*18%*	*18.5%*	*19%*	*20%*

மாத வட்டிக்கான செக்குகள் முன்கூட்டியே கொடுக்கப்படும்

உங்கள் டிபாசிட்டுகள் 45 மாதங்களில் 2 மடங்காகிறது 90 மாதங்களில் 4 மடங்காகிறது.

காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம் - 15 ஆண்டுகள்

ரூ. 6320/- முதலீடு செய்து 5-ம் ஆண்டு முடிவில் ரூ. 6000/-ம்
10-ம் ஆண்டு முடிவில் ரூ. 6000-ம்
15-ம் ஆண்டு முடிவில் ரூ. 56,320/- பெறுவீர்.

பொற்குவியல் திட்டம்

ரூ 100/- மட்டுமே பிரதிமாதம் செலுத்தி 25 வருட முடிவில் ரூ 3 லட்சம் பெறுவீர்

பென்ஷனர் நலத் திட்டம்

வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

ரூ. 10,000/- அதற்கு மேலும்	12 மாதங்கள்	வட்டி 19½%
ரூ. 10,000/- கீழ்		வட்டி 18½%

ரெக்கரிங் டிபாசிட் திட்டம்

ரூ. 25/-ம் அதன் பெருக்கமும் பெற்றுக் கொள்ளப்படும்

செல்வக்களஞ்சியம் டிபாசிட் திட்டம்

உங்கள் குழந்தையைக் குபேரனாகக் காண ஆசையா! இதோ
ரூ. 7500/-ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ. 1,25,000/- பெறலாம்
ரூ. 9000/-ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ. 1,50,000/- பெறலாம்

சேவிங்ஸ் கணக்குகள் மீது 10% வட்டி

கடன் வேண்டுமா? எங்களை அணுகுங்கள். நகைக்கடன் சவரனுக்கு ரூ. 2,400/- வட்டி விகிதம் ரூ. 1.85 கடனுக்கு உச்சவரம்பு இல்லை. தருவதில் தாமதமில்லை. R.D. கட்ட வேண்டியதில்லை...

SURESH

கௌரவ ஆலோசகர் :
P. பாலசுப்ரமணியம், B. Sc.
முன்னாள் அறங்காவலர்
கந்தகோட்டம், சென்னை - 3

(Friday Weekly Holiday)

இயக்குனர் குழுத் தலைவர் :
R. விவேகானந்தன், B. Com.

பங்குதாரர்களுக்கு மட்டும் Business Hours : Week days 8.30 a.m. to 12.30 p.m. & 2.00 p.m. to 6.00 p.m. Sunday 8.30 a.m. to 12 noon.

ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேவஸ்தான எஜுகேஷனல் சொஸைட்டி 1993 - ஆம் ஆண்டு ஜூன் மாதம் துவக்கப்பட உள்ள அறிவியல் கலைக் கல்லூரி நிதிக்காக கலைமாமணி கங்கை அமரன் குழுவினர் அளிக்கும் இன்னிசை விருந்து 2.5.1993 ஞாயிறு மாலை 6.30 மணிக்கு தேனாம்பேட்டை காமராஜர் அரங்கில் நடைபெறும். இந்நிகழ்ச்சிக்கான நுழைவுக் கட்டணச் சீட்டுகள் பார்க் டவுன் பெனிபிட் பண்டில் கிடைக்கும்.

சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டி

துறை எம்.பி.) தவறி விட்டார். 'எந்த இடம்?' என்று கேட்டார் ராஜீவ். 'தமிழ் நாடு!' என்றதும் ராஜீவ் சிரித்தார். 'வேறு இடம் ஏதும் இல்லையா? எதற்கும் மூப்பனார், வாழப்பாடி எல்லாரையும் பார்த்துப் பேசி விட்டுச் செய்!' என்றார். மூப்பனாரிடம் விஷயம் இழுபறி நிலையில் இருந்தாலும், நரசிம்மராவ் ஆதரித்தார். ஆனாலும் கடைசி வரை சஸ்பென்ஸ்தான். இறுதியில் நரசிம்மராவும், ராஜீவும் முடிவு செய்து மயிலாடுதுறையை எனக்குக் கொடுத்தார்கள்!''

''உங்கள் மனைவி உங்களுக்காகத் தேர்தல் பிரசாரம் செய்ய வந்தாரா?''

''என் மனைவி கதீத் வீர் சிங். பஞ்சாபி. இங்கே வந்தாள். என்ன செய்யப் போகிறாள், எப்படிப் பேசப் போகிறாள் என்று நினைத்துக் கொண்டேயிருந்தேன். ஒரு வித்தியாசமும் பார்க்காமல் அவள் பாட்டுக்கு, வோட்டுக் கேட்கத் தொடங்கினாள். வருகிற பஸ்களிலிருந்து இறங்குகிறவர்களிடம் எல்லாம் கான்வாஸ் பண்ணினாள். என் பெண்கள் கரண்யா, யாமினி, சவா மூன்று பேரும் கைச் சின்னம் - இரட்டை இலை என்று சொல்லிக் கொண்டே வோட்டுக் கேட்டார்கள். முஸ்லிம் மக்கள் வாழும் இடங்களுக்கெல்லாம், என் மனைவி, குழந்தைகள், என் தங்கை எல்லாருமே போய் வோட்டுச் சேகரித்தார்கள்.''

''கைத் தொழில் - கைவினைப் பொருட்கள் கண்காட்சி தில்லியில் நடத்தினீர்களே?''

''கும்பகோணம், தாராசுரம் முதலிய இடங்களில் கண்ட சிற்பக் கலையின் சிறப்பையும், திருபுவனம் சேலைகளையும் கண்ட கதீத், இவற்றை எல்லாம் தில்லியில் ஒரு கண்காட்சி மாதிரி அமைத்து, கும்பகோணம் ஆர்ட்ஸ் அண்ட் கிராஃப்ட்ஸ் என்று பிரமாதப்படுத்தி விட்டாள். 500 பேருக்கு மேல் வந்தார்கள். சிற்பங்களும், புடைவைகளும் எக்கச்சக்கமாக விற்பனையாகி, அந்தக் கலைஞர்களுக்கு ஏக உற்சாகம். திருபுவனம் இப்போது புகழ் பெற்று விட்டது. 'இது காஞ்சிபுரமா? திருபுவனமா?' என்று கூடக் கேட்கத் தொடங்கி விட்டார்கள்!''

''உங்கள் தொகுதியை துபாயாக மாற்றுவேன் என்று தேர்தலின் போது சொன்னீர்களாமே?''

''ஆமாம். முதல் தேர்தல் பேச்சை ஆரம்பிக்கும் போது, அருகிலிருந்த மசூதியிலிருந்து எழுந்த 'அசான்' கேட்டேன். அப்போது திடீரென்று எழுந்த கற்பனையில், மயிலாடுதுறையை துபாய் ஆக்குவேன் என்று அறிவித்தேன். ஆழ்கடல் மீன் பிடிப்பு, இறால் வளர்ப்பு, பால் பண்ணை, அயோடின் சத்து ஊட்டப்பட்ட உப்பு, அரிசி பதப்படுத்தல், உயிர்ச்சத்து உரங்கள், ரப்பர் சேர்ந்த தென்னை நார் சாதனங்கள், எண்ணெய், பழங்கள் பதப்படுத்துதல், பொறியியல் - விஞ்ஞானம் சார்ந்த வேளாண்மை, மின்னணுவியல், எண்ணெய் எரிவாயு என்று என் தொகுதியில் பலதரப்பட்ட தொழில்வள சாத்தியக்கூறுகளை, கருத்தரங்கு மூலம் தொழில் முனைவோருக்குத் தெரியப்படுத்துகிறேன். தொழில் துறை அமைப்புக்களோடு விவாதிக்கிறேன். சுற்றுலாத்துறை வளர்ச்சி மூலம் அந்நியச் செலாவணியால் நாட்டுக்குக் கிடைக்கும் பயனை அழுத்தமாக எடுத்துச் சொல்லுகிறேன். இந்தியத் தொழில்கள் கூட்டமைப்பு, இந்த மாதிரி ஒவ்வொரு நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினரும் தங்கள் தங்கள் தொகுதியை மேம்படுத்த முற்பட்டால், இந்தியாவின் பொருளாதார அமைப்பே முற்றிலும் மாறிப் போய் விடும் என்று கருத்துத் தெரிவித்திருக்கிறது.''

''உங்கள் பெண்கள் அரசியலுக்கு வருவார்களா?''

''கரண்யா - மூத்தவள். பதினெட்டு வயதாகிறது. தமிழ் கற்றுக் கொள்கிறாள். இருபத்தோராம் நூற்றாண்டில் மயிலாடுதுறையின் எம்.பி. ஆக அவள்தான் இருக்கப் போகிறாளாம்!''

''அதிகாரி என்ற அந்தஸ்தை விட அரசியல்வாதி என்ற பொறுப்பு உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?''

''அதிகாரியாய் இருந்ததை விட, அரசியல்வாதியாய் மக்கள் மத்தியில் வாழவே விரும்புகிறேன். ஒவ்வொருவருக்கும் கனவுகள் இருக்க வேண்டும். அப்போதுதான் அவற்றை நனவாக்குவதில் நாட்டம் கொண்டு உழைக்கலாம். அதனால் தனி நபருக்குக் கிடைக்கும் உயர்வு சமூகத்துக்கும் கிடைக்கும்.''

பேட்டி, கட்டுரை : சாருகேசி
அட்டை வண்ணப்படம்,
புகைப்படங்கள் : கோபிநாத்

போட்டி முடிவு: எண் விளையாட்டு-2

ஒரு போட்டி என்று அறிவித்தால் அதன் நோக்கத்தைப் புரிந்து கொண்டு பங்கேற்க வேண்டும். பத்து என்றதுமே நினைவுக்கு வரும் அம்சங்கள்... பத்து தலை ராவணன் என்றால் சரி, தெ. 10 சிகரெட் என்றாலும் சரியே. அதற்காக டென்ஷன் என்ற சொல்லையும் டெண்டுல்கர் என்ற பெயரையும் பட்டியலிடலாமா? டென் என்ற தொடக்க ஒலி காரணமாக அவற்றைச் சேர்த்துக் கொள்ள முடியாதல்லவா?

இதனால் கவனமாகப் பார்த்துப் பலவற்றை நீக்கிப் பட்டியல்களை மதிப்பீடு செய்ய நேர்ந்தது. ரமா ராஜகோபாலன் எழுதியவற்றிலும் இவ்வாறு சிலவற்றை நீக்க நேர்ந்தபோதிலும், இவரே மிக அதிகமான எண்ணிக்கையில் பத்து தொடர்பான அம்சங்களை எழுதி ரூ 250/- பரிசு பெறுகிறார்.

ரமா ராஜகோபாலன்,
4, மன்மத சுவாமி நகர்,
சிதம்பரம் – 608 001.

பாத யாத்திரைக் காட்சிகள்



* சித்தர்காடு சின்னசாமிக்குப் பொன்னாடையும் வாழ்த்தும்



* மூத்த தொண்டர்



* கிராமியக் கலைக்குழு - அம்பலநாதன்

● மாருதி ஜிப்ஸியில், மானாமதுரை தாலுகா வாடவேந்தல் கிராமம், என். அம்பலநாதன் பாடிக் கொண்டே முன்னால் போகிறார்.

நண்பர்களே வாங்க
இந்த யாத்திரைக்குத் தாங்க!
நம்பிக்கையாய் வாங்க!
நாடு நலம்பெறவே தாங்க!

தவிலும், நாதசுரமும் பின்னணி இசை வழங்க, கணீரென்ற குரலில் பாடுகிறார் அம்பலநாதன். ''இதை எல்லாம் நானே எழுதிப் பாடறேன் ஐயா!'' என்கிறார்.

''உங்க விலாசம் குடுங்க, மே ஒண்ணாம் தேதி உங்க பாட்டை வச்சுக்கணும்கிறாங்க!'' என்று ஒருவர் அம்பலநாதனிடம் முகவரி கேட்கிறார், மூவை ஊரில்.

● பாதயாத்திரையில், முதியோருக்குச் சரிசமமாக நிறையவே இளைஞர்கள். ''விவசாயம் தாங்க.... பரம்பரையாக


காங்கிரஸ் குடும்பங்க!'' என்கிறார்கள். ''கோஷ்டி எல்லாம் இப்போ சுத்தமாக் கிடையாது. இரண்டு அணியும் ஒண்ணா உழைக்கிறோம் இப்போ!'' என்கிறார் வாழப்பாடியார் பேரவை சிவாஜி சேகர்.

● மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் ஹாஜி அபுல் ஹசன், பாதயாத்திரை துவக்கத்தில் பூக்காரத் தெரு கூட்டத்தில் தொடங்கி, சித்தர்காடு, மூவலூர், மல்லியம், குத்தாலம் என்று எல்லா இடங்களிலும் பேசுகிறார். நகர காங்கிரஸ் தலைவர் நாகராஜனும், செயலாளர் ராஜேந்திரனும் கூடவே தொடர்ந்து வருகிறார்கள்.

● மல்லியம் கிராமத்தில் புகைப்படம் எடுக்கத் தயாராகும் போது, மனைக்குப் போகும் சில நண்பர்கள், காவி வேட்டியுடன், மணிசங்கர அய்யரை நோக்கி வந்தார்கள், வணக்கம் சொல்லிக் கொண்டே. ''சீக்கரம் வந்து நீங்களும் போட்டோவுக்கு நில்லுங்க. அதைப் பார்த்து பி.ஜே.பி ஓட்டுகளும் நமக்கே வந்துடும்!'' என்று அய்யர் ஜோக் அடிக்க, குபீரென்ற சிரிப்பு!தமக்குப் போட்ட கதர்த் துண்டுகள் சிலவற்றை, கை குலுக்குகிறவர்களின் தோள்களுக்குப் போர்த்துகிறார் மணிசங்கர அய்யர். (டிபிகல் ராஜீவ் ஸ்டைல்!)


● ''இந்த போஸ்டரில் ஒரு விசேஷத்தைக் கவனித்தீர்களா? இதில்தான் பிரதமர் நரசிம்மராவ் பிரமாதமாகச் சிரித்துக் கொண்டிருக்கிறார்!'' என்று நம்மிடம் கிண்டலடிக்கிறார் மணிசங்கர அய்யர். (ராஜீவும் நரசிம்மராவும் சில போஸ்டர்களில்; மூப்பனாரும் வாழப்பாடியாரும் இன்னும் சில போஸ்டர்களில்.)

● ''அன்புக்குரிய...'' என்று ஆரம்பித்து எம்.எல்.ஏ. முதல் கூட அமர்ந்திருக்கும் அத்தனை நபர்களின் பெயர்களையும் சொல்லித்தான் பேச்சைத் துவக்குகிறார் மணி சங்கர். போதாக்குறைக்கு யாரையாவது விட்டு விட்டேனா என்றும் கேட்கிறார்! அதிகம் ஆங்கிலம் கலக்காத எளிமையான தமிழில் பேசுகிறார். பஞ்சாயத்து ராஜ் - நகரபாலிகா சட்டங்கள் இயற்றப்பட்டும் செயல்படுத்த முடியாமல் இருப்பதை எடுத்துச் சொல்லுகிறார். கிராம சுயராஜ்யம் வரும்போதுதான் உண்மையான சுயராஜ்யம் கிடைத்ததாக அர்த்தம் என்றார் காந்திஜி... பஞ்சாயத்து ராஜ், நகராட்சிகளுக்காக முப்பதாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கி வைத்திருக்கிறார் பிரதமர் நரசிம்மராவ். எல்லா மாநிலங்களும் ஏற்றுக் கொண்டு விட்டன. தமிழகம் மட்டும்தான் குறுக்கே நிற்கிறது. அந்த முப்பதாயிரம் கோடி ரூபாய் உங்கள் கையில் வரணுமா? இல்லை அழகு திருநாவுக்கரசு கைக்குப் போகணுமா? பதில் நீங்கள்தான் சொல்லணும். நன்றி. வணக்கம். ஜெய்ஹிந்த்!''



இப்போது

ஃபாரெக்ஸ் ஊட்டச்சத்து தெவிட்டாத புதிய சுவையிலே!



புதிய எக்ஸ்ட்ரூஷன் முறை

உங்கள் வளரும் குழந்தைக்கு.

குழந்தை உணவு தயாரிப்பில் எக்ஸ்ட்ரூஷன் ஒரு அதி நவீன முறையாகும். இது, உங்கள் குழந்தைக்கான ஃபாரெக்ஸை மேலும் சிறப்புடன தயாரிக்கிறது.

■ இம்முறையில் ஃபாரெக்ஸ் முன்பே-பக்குவப் படுத்தப்படுவதால், அது சுவைமிக்கதாக இருக்கிறது; உங்கள் குழந்தைக்கு எளிதாக ஜீரணிக்க உதவுகிறது.

■ இப்போது, வைட்டமின்கள் செறிந்துள்ள ஃபாரெக்ஸ், உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு உதவுகிறது.



ஃபாரெக்ஸ் சுவையுடன் வளரும் வழி.

முக்கிய அறிவிப்பு: தாய்ப்பால் உங்கள் குழந்தைக்குச் சிறந்தது. நான்கு மாதங்கள் முதல் உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால் மட்டுமின்றி தானிய உணவையும் கொடுங்கள் Gx.678.92.Tm.R

கமலாயன்

“...நாளைக்கு என்ன நாளுன்னு தெரியுமா...?”

- கண்களில் மின்னிய ஆவலுடன், இதழ்கள் குறும்புப் புன்னகை சிந்த சாந்தி கேட்ட கேள்வி மனத்தில் சுழன்று கொண்டிருக்கிறது...! 'உனக்கெங்கே அதெல்லாம் ஞாபகமிருக்கப் போகிறது...?' என்று கேள்வியினூடே இழையோடிய அவநம்பிக்கைத் தொனியையும் உணர முடிந்தது.

ஆறு வருடம். ஆறு முறை அந்த நாள் கடந்து போயிருக்கிறது. இது ஏழாவது வருடம். இந்த ஆறு வருடங்களில் - அந்தக் குறிப்பிட்ட நாளில் - சாந்திக்கு எந்தவிதத்திலாவது நிறைவைத் தர முடிந்திருக்கிறதா என்று யோசித்தான். ஆயாசமாக இருந்தது. மனசின் வெறுமை - வெளியே தகிக்கிற வெய்யிலாய்க் கொளுத்தியது... அனலின் வெளிப்பாடாய்ச் சுடுகிற மூச்சுக் காற்று.

முதல் வருடம் - ஏதோ வேலையாய்த் திருச்சிக்குப் போகும்படி நேர்ந்தது. அங்கே ஒரு கடையில் லேடீஸ் வாட்ச் ஒன்றைத் தேர்ந்தெடுத்து வாங்கினான். அதிகம்



புரிதல்

பிரபலமில்லாத ஒரு நிறுவனத்தின் வாட்ச். கையிலிருந்த பணத்திற்கு அதுதான் வந்தது.

திண்டுக்கல்லுக்கு பஸ் ஏறும் போதே இரவு பத்து மணி. 12 மணிக்கு பஸ் ஸ்டாண்டில் இறங்கி வீடு வந்து சேரும் போது மணி ஒன்று. கதவைத் தட்டுகிறபோதே மனதில் குற்ற உணர்வு. இந்த நாளிலாவது நேரத்தில் வீடு திரும்ப முடிந்திருக்கக் கூடாதா...? முயற்சி செய்திருக்கக் கூடாதா?

கண்களில் தூக்கம் நிறைந்து வழிய, வந்து கதவைத் திறந்தாள் சாந்தி. '..இன்னிக்காவது சீக்கிரமா வர்றதுதானே?' என்ற கேள்வியை எதிர்பார்த்து ஒருகணம் தயங்கி நின்றவனுக்கு ஆச்சரியம் காத்திருந்தது. சாதாரணமான குரலில், ''இப்பத்தான் வர்றீங்களா? பஸ் ஸ்டாண்டுல இருந்து நடந்தா வந்தீங்க...?'' என்று கேட்டாள். என்ன பதில் சொல்வது என்று தடுமாறி பொதுவாக, 'ம்...' என்று சொல்லிவிட்டுப் போய்க் கை கால் அலம்பிக் கொண்டு உள்ளே வந்தான்.

''...சாப்பிட்டாச்சா...?''

''இல்ல... சாயங்காலமா லைட்டா டிபன் சாப்பிட்டேன்...''

''சரி, கொஞ்சமா சாப்பிடுங்க...''

- எடுத்து வைக்க ஆரம்பித்தவளைப் பார்த்தான். மனதில் திருமணத்தின் போதிருந்த உருவமும், ஓராண்டுக்குப் பின் இன்றைய மெலிவும் கனமாய்ப் பதிந்தன.

''என்ன, சாப்பிடுங்கன்னு சொன்னா மலைக்கப் போய் நிக்கறீங்க...?''

- உணர்வு வந்தவன், துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டே உள்ளறைக்குப் போனான். கைப்பையைத் திறந்து வாட்சை கவருடன் எடுத்து வந்தான். சாப்பாட்டை எடுத்து வைத்தபடி அப்படியே உட்கார்ந்து தூக்கம் வழிந்து செருகிக் கொண்டிருந்த கண்கள் இவன் கையிலிருந்ததை மலங்க மலங்க விழித்தன.

''என்னது அது...? சாப்பிட வாங்கன்னா இப்பப் போயி என்னமோ பையைக் குடைஞ்சிக்கிட்டு...''

''இது என்னன்னுதான் பாரேன்...''

- கையில் வாங்கி கவரைப் பிரித்துப் பார்த்தாள். நிமிர்ந்தாள். பச்சை நரம்புகள் இலேசாய்ப் புடைக்க குபீரென்று கண்களில் ஒரு பிரகாசம் மின்னலாய்ப் பாய, ஏதோ சொல்ல முயன்று மௌனமானாள். வாட்சை அப்படியே ஒரு பக்கமாக வைத்து விட்டு நிமிர்ந்தாள். முகம் பழையபடி ஆகியிருந்தது. எதுவும் புலப்படாத வறட்சி.

தட்டில் சாதமும் சாம்பாரும். தனியே ஒரு கிண்ணத்தில் மூடி வைத்திருந்ததை எடுத்து நீட்டினாள். எப்போதும் போல் அவனுக்குப் பிடித்தமான ரவா கேசரி.

சாப்பிட்டு முடித்ததும் கையைத் துடைத்துக் கொண்டு உள்ளே போனான். பாத்திரங்களை அப்படியே சமையல் கட்டில் ஓரமாய்த் தள்ளி வைத்து விட்டுக் கையைக் கழுவிக் கொண்டு பின்னால் வந்தவளின் கையில் அந்த வாட்ச்.

உள்ளறைக்கு வந்ததும் ஸ்டாண்டில் அதை வைத்தாள். பக்கத்தில் வந்து பாயில் சரிந்தாள்.

''என்ன, வாட்ச் நல்லாருக்கா...?''

''ம்...!''

- ஒற்றைச் சொல்லோடு அவள் இமைகள் மெல்ல மூடிக் கொண்டதை இவன் பார்த்தான். அதற்கு மேல் ஏதும் கேட்கத் தோன்றவில்லை. இரவு விளக்கின் நீல ஒளி. அவள் முகத்தில் படர்ந்திருந்தது சந்தோஷமா, துக்கமா - இவனப் புரியாததாய்...!

இரண்டாவது வருடம் ஒரு கைப்பை. அடுத்தடுத்த வருடங்களில் வெறுங் கையுடன் இராத்திரி பதினொன்று, பன்னிரண்டு மணியாக்கின் சைக்கிளை நிறுத்தும் போது பேச்சற்ற மௌனம். சாப்பாடு. தூக்கம்...!

– இந்த ஏழாவது வருட முதல் நாளில் - வீட்டிற்குச் சாயங்காலத்திற்குள் போய் விட வேண்டுமென்று யோசனை. கடையில் சொல்லியாகி விட்டது. இரண்டு இடத்தில் டெலிவரி முடித்து விட்டால் அப்படியே திரும்பலாம். கால்கள் சைக்கிளை மிதிக்க, மனம் யோசனை செய்து கொண்டிருக்கிறது. முந்தா நாள் சாந்தி கேட்ட கேள்விதான் இப்போதைய சிந்தனைச் சுழலின் மையப் புள்ளி. ஆறு ஆண்டு வாழ்க்கைப் பாடத்தின் 'ரஷ்'.

''...நாளன்னிக்கு என்ன நாளுன்னு தெரியுமா?''

'...ஓ, தெரியுமே... இதோ வந்து கொண்டிருக்கிறேன்...'

- புன்னகை. வறண்டது இதழ்களில்...!



எதனாலே?

⁜ வெங்காயம் உரிக்கும்போது, கண்களில் நீர் வருவது ஏன்?

இருட்டத் தொடங்கியிருந்த நேரத்தில் - வீட்டிற்குள் நுழைந்த போது பளீரென்ற புன்னகையுடன் எதிர்கொண்டாள் சாந்தி.

''...என்ன, இன்னிக்குச் சீக்கிரமாகவே வந்தாச்சு..? அதிசயம்தான் போங்க...!''

- அவள் கொண்டு வந்து வைத்த ஸ்வீட்டையும், காப்பியையும் சாப்பிட்டு முடித்தான். சமையல் கட்டில், கிணற்றடியில், மறுபடி சமையல் கட்டில் வேலைகளை முடித்து விட்டு சாந்தி உள்ளறைக்குள் வந்த போது மணி ஒன்பதாகியிருந்தது. இவன் பாட்டுக்குப் படுத்துக் கொண்டு ஏதோ குருட்டு யோசனையாய் விட்டத்தில் பார்வை பதித்து...!

சாப்பிடத் தோன்றவில்லை. பசியில்லை. பேருக்கு உட்கார்ந்து எழுந்து வந்து படுத்துக் கொண்டான். சாந்தியும் வந்த பிறகு - ரொம்ப நேர மௌனத்திற்குப் பின் கேட்டான்.

''முந்தா நாளே ஞாபகப்படுத்தினியே... இன்னிக்கு என்ன நாள் தெரியுமான்னு..? நா ஏதாச்சும் வாங்கிட்டு வரணும்னு நெனைச்சியா...? ஒண்ணுமே கேக்கலியே நீ...?''

- சாந்தி சிரித்தாள். சப்தம் வெளியே வராமல் - பற்களின் வரிசை மட்டும் தெரியும்படி.

''எதுவா வாங்கிட்டு வந்திருந்தா நீங்களே தரப் போறீங்க..! நா எதுக்குக் கேக்கணும்...?''

''........''

கொஞ்ச நேரம் மௌனத்தில் கழிந்தது. பின்..

''அதுக்கில்ல.. நா ஒண்ணும் வாங்கிட்டு வர முடியலம்மா... ஆனா...''

- தயங்கி நிறுத்தினான். சாந்தி இலேசாகத் திரும்பி ஒருக்களித்துப் படுத்து இவன் மேல் வலது கையைப் போட்டுக் கொண்டாள்.

''ஆனா...?''

''ஒரு லெட்டர் எழுதினேன் - என்னோட ஃப்ரெண்டுக்கு...''

''சரி, அதுக்கென்ன...?''

''அதுக்கில்ல.. அந்த லெட்டர்ல என்ன எழுதியிருக்கேன்னு படிக்கட்டுமா...?''

- சாந்தி உணர்ச்சியற்ற கண்களுடன் அவனைப் பார்த்தாள். இவன் ஒரு வினாடி தயங்கி மௌனமாக இருந்தான். கனத்த மௌனம்... தலையணை அருகிலிருந்த கடிதத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தான் :

''...இன்னிக்கு எங்களோட கல்யாண நாள். ஏழாவது வருடத்தின் முதல் நாள். இந்த நாளில் வழக்கமாக அவளுக்கு என்று எந்தப் பரிசும் வாங்கிக் கொண்டு போனதில்லை. - முதல் இரண்டு வருடம் தவிர. இந்த வருடமும் வெறுங்கையுடன்தான் போகிறேன்.

இந்த மாதிரி ஆறு வருடம் ஓடி விட்டது. முதலில் அவளால் இதையெல்லாம் தாங்க முடியவில்லை. கல்யாணத்திற்கு முன்பு - கவலைகளற்று சுதந்திரமாய்ச் சிறகடித்துக் கொண்டிருந்த புறா. அதன் சிறகுகள் எல்லாம் உதிர்ந்து போய் வெறும் கூடாய்த் தத்தித் தத்தி வந்து கொண்டிருக்கிறது அதன் கூண்டுக்குள்! தனது கனவுகளின் சாம்பல் மேட்டிலிருந்து மெல்ல எழுந்து நடை பயின்று கொண்டிருக்கிறது இந்தப் புறா...''

- மெல்லத் தொடங்கிய அவன் குரல், வரவரக் கனத்து இந்த இடத்தில் கமறித் தடுமாறியது. சட்டென்று கண்களைத் திறந்து தலையைத் தூக்கி இவனைப் பார்த்தாள் அவள். அவனையும் மீறித் திரண்ட விழிநீர்த் திரையில் ஆறு வருடங்களில் என்றுமில்லாத சோபையோடும், மலர்ச்சியோடும் பரவசமாய் விகசித்தது அவள் முகம். அந்த விகசிப்பின் ஸ்தூல அடையாளமாய் சாந்தியின் விழிக் கடையோரங்களில் மினுமினுத்தது ஈரம்...!



அடுத்த இதழில்...

- இசையுலகில் இன்னொரு நட்சத்திரம்!
  - பாம்பே ஜெயஸ்ரீயுடன் சந்திப்பு

- கொளுத்தும் கோடைக்கு 'கூலான' குறிப்புகள்

4

விகவம் தன்னுடன் தனிமையில் பேச வேண்டும் என்று தொலைபேசியில் கூப்பிட்டவுடன் ராமனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. என்ன விஷயமாக விகவம் தன்னுடன் பேச விரும்புகிறான் என்று அவனால் ஊகிக்க முடியவில்லை.

டாக்டர் மாத்ருபூதத்தின் ஆஸ்பத்திரிக் கட்டடமும், பைப் தொழிற்சாலையும் கை விட்டு நழுவிப் போவதற்கு விகவம்தான் காரணம் என்று அவனும் அறிந்திருந்தான். தூர்க்காவின் திருமணம் முடிந்த இரண்டு நாட்களுக்குப் பிறகு ஒருநாள் டைப்பிஸ்ட் ராகவாச்சாரி அவனிடம் எஸ்ட்டிமேட்டை எடுத்துக் கொண்டு வந்த கையோடு கேட்டார் :

''என்ன மிஸ்டர் ராமன்? உங்க வீட்டு மாப்பிள்ளை நம்ம கம்பெனியோட ரெண்டு பெரிய காண்டிராக்டுகளைப் பிடுங்கிண்டுட்டாராமே? லயித் யார் கிட்டேயோ சொல்லிண்டிருந்தார், கேட்டேன். இது என்னப்பா அக்கிரமம்!''

விகவத்தின் தோழமை நிறைந்த பேச்சும், பணத்தை அவன் அனாயாசமாக அள்ளிவீசும் பாங்கும் ராமனை மயக்கி விட்டிருந்த படியால், அவனால் விகவத்தை விட்டுக் கொடுக்க முடியவில்லை.

''என்ன சார் இதுல அக்கிரமம்? அவா வேலை நம்ம ளுடையதை விடத் துப்புரவாக இருக்குமாயிருக்கும். கிளயண்ட்ஸ் நல்ல வேலைத் திறனைத் தானே சார் விரும்புவாங்க?''

''நீ சின்னப் பையன். உனக்கு விளங்காது. இதுல 'ஊப்பா' ஏதாவது விஷயம் இருக்கணும். இதே விகவம் இன்டர்நேஷனல், மாம்பலத்துல ஒரு லைப்ரரி கட்டியிருக்கான் - நீ போய்ப் பாரு - படு மட்டம்! குதிரை லாயம் போல இருக்கு! இந்த அழகில ஆர்க்கிடெக்டும் அவனேதானாம்!'' அவர் போய் விட்டார்.

மூன்று மணியானதும் ராமன் புறப்பட்டுப் போனான். டி. வி. எஸ். ஃபிப்டி மௌண்ட்ரோடை நோக்கிப் பறந்தது. விகவம் இன்டர்நேஷனலில் அவன் நுழைந்த போது மணி மூன்றரையைத் தாண்டி விட்டது.

விகவம் பலமாக வரவேற்றான். ''வா ராமன். உனக்காகத்தான் காத்திண்டிருக்கேன். என்ன சாப்பிடறே? காப்பியா? இல்லை கூலா ஏதாவது கொண்டுவரச்



பனிப்பாறை

சொல்லட்டுமா? 'சோம பானத்துக்கு' இது இரண்டுங்கெட்டான் வேளை.''

கேஸட்டிலிருந்து மேற்கத்திய சங்கீதம் இரைச்சலாக ஒலித்தது. ராமனின் பதிலுக்குக் காத்திராமல், மூலையிலிருந்த குளிர்ச்சாதனப் பெட்டியைத் திறந்து இரண்டு பழரச பாட்டில்களை வெளியே எடுத்தான் விகவம். களைப்பு தீர ராமன் அதைப் பருகினான்.

''உனக்கு நித்யா எவ்வளவு சம்பளம் தர்றா?''

ராமன் ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தான்.

''ஆயிரத்தி இருநூறு...'' என்றான்.

''பூ! இவ்வளவுதானா? இரண்டாயிரம் வாங்கறேன்னு நெனச்சிண்டிருந்தேன்.''

''இப்பத்தானே பி.எஸ்ஸி முடிச்சுட்டு ஜாயின் பண்ணியிருக்கேன்.''

''என்ன வேலை பண்றே?''

''கணக்கெல்லாம் 'டாலி' பண்றேன்.''

''ஜஸி! வேலை பண்ணற எடத்துக்கெல்லாம் போக மாட்டே?''

''ம்ஹூம். எனக்கு சிவில் என்ஜினியரிங் பற்றி ஒண்ணும் தெரியாது.''

''நீயும் டெக்னிகல் கோர்ஸ் ஏதாவது பண்ணியிருக்கலாமே?''

''பி. யு. சி. ல ரொம்ப 'லோ' மார்க்.'' கூச்சமில்லாமல் பதில் சொன்னான்.

''நான் உனக்கு மாசம் ரெண்டாயிரம் தர்றேன். என்கிட்ட வந்து ஜாயின் பண்ணிக்கிறயா?''

''என்ன ரெண்டாயிரமா? எனக்கா?'' - நம்ப முடியாதவன் போல் பார்த்தான்.

விகவம் லேசான வெற்றிப் புன்னகையுடன் அவனைப் பார்த்தான்.

''ஆமாம். உனக்கேதான். ஏன்? தர முடியாதா? உனக்கு நல்ல திறமை இருக்கு. உன் திறமையெல்லாம் உன்னோட அக்காவோட ஆபீஸல வேஸ்டாப் போறது. என்னோட கம்பெனில நீ ஜாயின் பண்ணு. எனக்குப் பதில் 'செக்' வசூல் பண்ண நீ போ. மேற்பார்வை பார்க்கப் போ. உனக்கு ஆர்க்கிடெக்சரெல்லாம் தெரிய வேண்டாம். அதெல்லாம் மேஸ்திரி பார்த்துப்பான். நீ எனக்கு வலது கை போல இரு. உன்னோட இந்தப் பழைய மொபெட்டைத் தூக்கி எறி. பஜாஜ் ஸ்கூட்டர் ஒண்ணு வாங்கித் தர்றேன். பெட்ரோல் செலவெல்லாம் கம்பெனி பார்த்துக்கும். ஆறு மாசம் போகட்டும் - ஐந்நூறு ரூபா எக்ஸ்டிரா போட்டுத் தர்றேன். என்ன சொல்றே?''



ராமன் பிரமித்துப் போய் உட்கார்ந்திருந்தான். விகவமே மீண்டும் பேசினான். என்னவெல்லாமோ பேசினான்.

ஐந்து மணி வாக்கில் ராமன் வெளியே வந்த போது அவன் மனம் உல்லாசத்தில் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தது.

ஆபஸ்தம்பன்



எதனாலே?

❊ மருதாணி இட்டுக் கொண்ட கை, சிவப்பாக மாறுவதேன்?

விகவத்தின் குரல் மீண்டும் மீண்டும் மனச்சுவரில் முட்டி மோதி எதிரொலித்தது.

''தயங்காதே ராமன். இன்னைக்குத் தேதி இருபத்தியாறு. ஒண்ணாம் தேதியிலிருந்து நீ விகவம் இன்டர்நேஷனல்ல ஆஃபீசர். இன்ஃபேக்ட் - ஆறு மாசம் கழிச்சு, விகவம் அண்டு ராமன் இன்டர்நேஷனல்னு மாத்திக்கலாம். உன்னோட மொதல் அஸைன்மென்ட் நான் இப்போ கட்டிண்டிருக்கிற நடிகை பூஜ்யாலக்ஷ்மியோட வீடு. அது முடியறவரையிலும் அந்த வேலையை முழுக்க முழுக்க உன் பொறுப்பில் விடறேன்.''

நினைக்க நினைக்க மனசு குளிர்ந்து போனது. மனசில் உற்சாகம் கரைபுரண்டு ஓடியது.

நேராக புகாரிக்குப் போய் ஒரு கட்லெட்டும் ஐஸ்க்ரீமும் சாப்பிட்டான். பிறகு பூஜ்யாலக்ஷ்மியின் படம் ஓடிக் கொண்டிருந்த தியேட்டருக்குச் சென்றான். அவளை நேருக்கு நேர், மிக அருகாமையில் பார்க்கும் வாய்ப்பு விகவத்தால் தனக்கு ஏற்படப் போவதை நினைத்த போது, நித்யாவைப் பிரிந்து போக வேண்டுமே என்று மனத்தில் இதுவரையில் உறுத்திக் கொண்டிருந்த சிறிதளவு குற்ற உணர்வும் மறைந்து போனது.

நித்யா புத்தகத்தில் ஆழ்ந்து போயிருந்தாள்.

''அக்கா...''

அவள் ஒருகணம் ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தாள். படித்துக் கொண்டிருந்த பக்கத்தில் அடையாளச் சீட்டை வைத்துவிட்டுப் புத்தகத்தை மூடி வைத்தாள். ''உன்கிட்டே ஒரு விஷயம் பேசணும் நித்யா.''

ஜன்னல் விளிம்பின் மீது உட்கார்ந்து கொண்டான். சில நிமிடங்கள் மௌனமாக இருந்தான். பேச்சை, எங்கே, எப்படித் துவங்குவது - என்று தயங்கினான். ''என்ன ராம்? ஏதோ பேசணும்னே. ஒண்ணும் சொல்லாம மௌனமா இருக்கே?''

அவன் உட்கார்ந்திருந்த நிலை, அந்தத் தயக்கம் - எல்லாமே சந்தேகத்தை எழுப்பின - ஒருவேளை விகவமும் இதில் சம்பந்தப்பட்டிருப்பானோ?

அவனைப் பார்த்துக் கிண்டலாகக் கேட்டாள் :

''என்ன, விகவம் ஏதாவது சொல்லி அனுப்பினானா?''

ராமனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. கடவுளே! இவளுக்கு யக்ஷிணி வித்தைகூடத் தெரியுமா என்ன?

''நீ... உனக்கு... எப்படி அக்கா...?''

''இப்படித் திணற வேண்டாம் ராம். சொல்ல வந்த விஷயத்தைச் சீக்கிரமாச் சொல்லு...''

ராமன் தயங்கியவாறே பேசத் துவங்கினான் : ''அது வந்து... அக்கா... விகவத்துக்குப் பர்ஸனல் அஸிஸ்டென்ட் ஒருத்தர் தேவையாம். இப்ப எல்லாம் ஏகப்பட்ட காண்டிராக்டுகள் வர்றதாம்.''

''இருக்காதா பின்னே! வழுவுல வர்றதைத் தவிர, கலைச்சும் பிடுங்கியும் வேற வாங்கறானே!''

ராம் மௌனமாக இருந்தான்.

அவளே மீண்டும் அவனைப் பார்த்துக் கிண்டலாகக் கேட்டாள் :

''லோ! நீ அவனோட புது பி. ஏ.! இதைச் சொல்லத்தானே வந்தே? இதுல என்ன தயக்கம்? உனக்கு அவன்கிட்டே வேலை செய்யப் பிரியம்னால் போயேன்.''

அவள் தன்னைத் தடுப்பாள் என்று எண்ணிக் கொண்டிருந்தவனுக்கு இந்த நேரிடையான பேச்சு பயம் கலந்த அதிர்ச்சியைக் கொடுத்தது.

''ஒண்ணாம் தேதியிலேருந்து வரச் சொல்லியிருக்கான்.''

''ஆகா! தாராளமாப் போய் ஜாயின் பண்ணு. ஓகே. குட்நைட்...''

அவன் எழுந்தான்.

''என்ன சம்பளம்னு நீ கேட்கலையே அக்கா?''

''எனக்குத் தெரிஞ்சுக்கணும்கிற ஆர்வம் இல்லை ராம்.''

''அதற்கில்லை அக்கா. ரெண்டாயிரம் ரூபா தர்றேன்னார். பஜாஜ் ஸ்கூட்டரும் வாங்கித் தருவாராம். பெட்ரோல் செலவைக் கம்பெனி ஏத்துக்குமாம்.''

நித்யா தன்னை மறந்து பெரிதாகச் சிரித்தாள். சிரிப்பு அடங்கியபின் விழிகளில் துளித்த நீரைப் புடைவைத் தலைப்பால் துடைத்தபின் அவனைப் பார்த்துக் கேட்டாள் :

''சே! உனக்கு அவன் கொடுத்த விலை கேவலம் எண்ணூறு ரூபாயும் ஒரு பஜாஜ் ஸ்கூட்டரும்தானா?''





''என்ன! 'விண்ணப்பிக்கக் குறைந்தபட்ச வயது '65'ன்னு போட்டிருக்கே; எந்த வேலைக்கு?''

''டி. வி. யில் திரைப்படம் தேர்வு செய்யும் செக்ஷனுக்கு ஆள் தேவைப்படுதாம்!''

- எஸ். ப்ரியா

''என்னாறு என்ன, சின்னத் தொகையா, அக்கா?''

''இல்லை... நான் இன்னமும் அதிக விலை கொடுத்திருப்பான்னு நெனச்சேன்.''

அவன் ஒன்றும் கூறவில்லை.

''வெல்... ராம்... அப்படியானால் நான் வேற வீடு பார்த்துண்டு போயிடறேன்.''

ராம் அதிர்ந்து போனான்.

''அக்கா இது என்ன பேச்சு? நான் இப்போ உன்னைத் தனியாப் போயிடுன்னு சொன்னேனா? இது அம்மாவோட வீடு. என்னோடது இல்லை!''

''இல்லை ராம். நீ சொல்ல மாட்டேன்னு தெரியும். ஆனா, நீ அங்கே வேலைக்குச் சேர்ந்தப்புறம் நான் உன்கூட இருக்க விரும்பலை. உனக்கு வேலை போட்டுத் தந்த விகவம் ஒரு அடிப்படை நோக்கத்தோடுதான் இதைச் செஞ்சிருப்பான்னு எனக்குத் தெரியும். மௌண்டு ரோடில இருக்கிற தன்னோட ஆபீசோட கிளையா இதை வைக்கச் சொல்லுவான். இங்கே ஏற்கெனவே இருக்கிற ''போலார் கன்ஸ்டிரக்ஷன்ஸ் ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்' போர்டு பக்கத்துல ஒரு 'ரைவல்' கம்பெனியோட போர்டும் தொங்கறதை நான் விரும்பலை. ஆஃப்டர் ஆல் இது அப்பா கட்டின வீடு. நியாயப்படி உனக்குத்தான் சொந்தம். நான் பதினைஞ்சு நாளில வேற வீடு பார்த்துண்டு போயிடறேன்.''

அவன் போய் விட்டான்.

நித்யா வெகுநேரம் வரையில் வானையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

அவள் தந்தை கிருஷ்ணமூர்த்தி ஒவ்வொரு கல்லாகப் பார்த்துப் பார்த்துக் கட்டிய வீடு. கீழே இரண்டு படுக்கை அறைகள். மேலேயும் ஒரு படுக்கையறை. இந்த மாடியறை அவளுடையது. அவளுடைய நெருங்கிய தோழி போன்றது. அறைக் கதவைத் திறந்து மொட்டை மாடியில் வந்து நின்று கொண்டாள். நான்கு பக்கங்களிலும் மரங்கள். மா, பலா, சப்போட்டா, தென்னை, செண்பகம், பன்னீர்...

இவற்றையெல்லாம் பிரிந்து போயாக வேண்டும். இந்த மொட்டை மாடிக் கைப்பிடிச் சுவரின் மீது சாய்ந்தமர்ந்து கொண்டு அவள் தன் தேர்வுகளுக்குப் படித்திருக்கிறாள். மாரி கொரீலியையும், ஜானகிராமனையும் ரசித்திருக்கிறாள். எங்கும் நிசப்தம். இந்த நிசப்தம், இந்த மௌனம் எல்லாமே வேதனையை அளித்தன. அநேக வீடுகளில் விளக்குகள் அணைக்கப்பட்டிருந்தன. கதவைச் சாத்திக் கொண்டு மீண்டும் உள்ளே வந்தாள். நிலா மங்கலான வெளிச்சத்தை அறையினுள் பாய்ச்சியிருந்தது. தொலைபேசியில் பிரசன்னாவின் நம்பரைச் சுழற்றினாள்.

''யெஸ் மோகன்ராம் ஹியர்... ஓ! நித்யாவா? சௌக்கியமாம்மா...? இரு - பிரசன்னாவைக் கூப்பிடறேன். எப்போதா ஒரு முறை பிரசன்னாவின் ஆபீஸில் இவரைச் சந்தித்தது. ஆனாலும் தொலைபேசியை எடுத்தபோதெல்லாம் பரிவுடன் 'சௌக்கியமா' என்று விசாரிக்கும் பண்பு.

பிரசன்னாவின் குரல் ஒலித்தது.

''என்ன நித்யா, இந்த வேளையில்? ஏதாவது பிரச்னையா? விகவம் புதுசா ஏதாவது தகராறு பண்றானா?''

அந்த வேதனையிலும் கலகலவென்று சிரித்தாள்.

''சரியாச் சொல்லிட்டே பிரசன்னா - தகராறுன்னு இல்லை... பட்... தகராறு வர்றதுக்குள்ள நான் கழண்டுக்க விரும்பறேன். எனக்குச் சின்னதா இரண்டு ரூம், ஒரு கிச்சன் இருக்கிற ஃப்ளாட் வேணும். ஒரு வீட்டுப் போர்ஷனாக இருந்தாலும் சரி... பயமில்லாத இடமா இருக்கணும்.''

''என்ன நித்யா இது? உனக்கு வாடகைக்கு ஒரு இடமா?'' குரலில் பரிவும், அன்பும் நிறைந்திருந்தன.

''எனக்குத்தான். விகவம் ராமனைத் தன்னோட பி. ஏவா அப்பாயின்ட் பண்ணியிருக்கான். ஒண்ணாந்தேதி ஜாயின் பண்ணப் போறான் ராமன். இத்தனை தூரம் வந்தப்புறம் நான் இங்கே இருக்க விரும்பலை. அவாளோட கம்பெனி நேம் போர்டை இன்ஸ்டால் பண்ணுவா. இது ஒரு சிக்கல். இதுலேர்ந்து விளையக் கூடிய ருசிகேடான சம்பவங்கள் - இவையெல்லாம் நான் தவிர்க்க விரும்பறேன் பிரசன்னா.''

''என்னால உன்னோட உணர்வுகளைப் புரிஞ்சுக்க முடியறது நித்யா. கவலைப் படாதம்மா. நான் உனக்குக் கூடிய சீக்கிரம் ஒரு நல்ல இடம் பிடிச்சுத் தர்றேன். குட் நைட்.''

(தொடரும்)

எதனாலே?

* மழைக் காலங்களில், கால் விரல்களின் இடையே 'சேத்துப் புண்' வருவதேன்?



தினசரி செய்தித்தாள்கள், வார, மாத இதழ்கள் படிக்கிற நூலகத்தில்தான் தியாகி சுந்தர மூர்த்தியும் நானும் அறிமுகமானோம்.

படிப்பை முடித்து விட்டு வேலை தேடி அலுத்த வயதானவனாக நானும், வாழ்வை முடித்து விட்டு மரணத்தை நேசிக்கிற இளைஞராக அவரும்.

'சாவைக் கண்டு எதற்கு பயப்பட வேண்டும். உண்மையில் எனது அடுத்த வேலை அதுதான். அதனால்தான் அதை விரும்புகிறேன்' என்பார் அடிக்கடி.

உண்மையில் அவர் மனசு சங்கடப்பட்டு இருந்த போதுதான் எனக்கு அறிமுகமானார்.

கையில் வைத்திருந்த வார இதழைப் பார்த்து, விடாமல் பெருமூச்சு விட்டார்.

என்னால் அதற்கு மேல் பொறுக்க இயலாமல் போக, அருகில் காலியாகக் கிடந்த நாற்காலியில் அமர்ந்து இகிகித்தேன்.

''என்னங்க... உடம்பு முடியலையா?''

''ம்... மனசுக்கு முடியலே....'' என்றார் அழுத்தமாக.

பிரித்திருந்த பக்கத்தைக் காட்டி வெறுப்பு தடவிய குரலில் சொன்னார்.

''மகாத்மாவைப் பற்றிய செய்திக்கு, புகைப் படம் பிரசுரித்து இருக்கிறார்களே. யார் படம் தெரிகிறதா...''

பார்த்தேன்.

சட்டென்று 'காந்திஜி படம்தானே..' என்று சொல்ல முற்பட்டுத் திருத்திக் கொண்டேன். இல்லை. 'அட்டன்பரோ'வின் பென் கிங்க்ஸ்லி.

சங்கடமாய்ச் சிரித்து வைத்தேன்.

''இதுல என்ன.. அவரும் இப்போ... காந்திஜியைத்தானே நினைவூட்டறார்?''

''இல்லே தம்பி. எப்போதும் போலி நிஜம் ஆகாது. அதனதன் மதிப்பு அவ்வளவு தான். உங்கள் தாயாரின் இடத்தில் அதே சாயலில் வேறொரு பெண்மணியை ஏற்பீர்களா...'' என்றார் ஆவேசமாய்.

எனக்கு வாதம் பிடிப்பதில்லை. அதுவும் நூலகம் அனுமதிக்காத இடத்தில்.

''வெளியே வரீங்களா?'' என்றார் அது புரிந்தவராய்.

எழுந்து வெளியே வந்தோம்.

இந்தப் பூங்காவும் ஒரு சுதந்திரப் போராட்ட வீரரின் நினைவில்தான் நிற்கிறது. பறவைகள் எச்சம் அதிகம் இல்லாத ஒரு சிமெண்ட்டு பெஞ்சைத் தேர்ந்தெடுத்து அமர்ந்தோம்.

அரளி மரத்தின் இரண்டு தடிப்பான இலைகளைச் சேர்த்து டப்.. டப்பென்று சப்தம் செய்தேன்.

''இளைஞர்களுக்குப் பொறுப்பு ஏற்பதில் ரொம்பத் தயக்கம்... இல்லையா?'' என்றார்.

''பெரியவர்களுக்கு இளைஞர்களைக் குறைசொல்வதில் தயக்கமே இல்லை.. சரிதானே?''

சிரித்து விட்டார்.

''வேலை தேடறீங்களா... தம்பி?''

''தேடி அலுத்துப் போச்சு!''

''எங்க காலத்துல எந்த வேலையும் கௌரவக் குறைவு இல்லே. இப்ப உங்களுக்கு மாதா மாதம் அழுக்குப் படாமல் சம்பளம் வரணும். இல்லே?''

''எந்த வேலையும் செய்யத் தயார்தான். ஆனா நீங்க கனவு கண்ட மாதிரி தேசம் இல்லீங்க. கைராட்டை சுத்தி எதுக்கெடுத்தாலும் உண்ணாவிரதம், மௌன விரதம்னு இருந்தது எல்லாம் இப்ப பலிக்காது'' என்றேன் வெறுப்பு மீறிய குரலில்.

''தன்னம்பிக்கை குறைஞ்சா... எதுவுமே நடக்காதுதான்.''

''இன்னும் என்ன தன்னம்பிக்கை? படிக்கப் போனா அதுல ரிஸர்வேஷன்.. வேலைக்குப் போனா அதுல ரிஸர்வேஷன். ஏன்யா... தெரியாமதான் கேட்கறேன். இந்த நாட்டுல ஊழல் ஒன்னைத் தவிர வேற எதுக்கும் ரிஸர்வேஷன்தானா?''

''நல்ல மனுஷங்க இல்லாம போயிடலே.. தம்பி..''

''இருப்பாங்க. அடுத்த வேளை சோத்துக்கு நிச்சயம் இல்லாம - வறட்டு தத்துவம் பேசிக்கிட்டு...'' என்றேன் அழுத்தமான குரலில்.

பெரியவருக்குத் திடீரென ஆவேசம் வந்துவிட்டது.

''என்னோட கொள்கையைக் கூட கொஞ்சம் ஒதுக்கி வச்சிட்டு உனக்காகக் கூட வரேன். என்னோட... சுதந்திரப் போராட்டத்துல ஈடுபட்டவரோட பையன். இப்ப அரசாங்கத்துல நல்ல நிலைமைல இருக்கான். உனக்கு வேலை வாங்கித் தரேன் தம்பி...'' என்றார்.

''என் ஒருத்தனுக்கு வேலை கிடைச்சிட்டதுனால இந்த நாடு முன்னேறிடப் போவுதா?''


உயிர்

ரிஷபன்

"நீ நேர்மையா நடந்து காட்டு. அதுவே பல பேருக்கு முன்னுதாரணமா இருக்குமே..."

பெரியவர் என்னை மறுநாளே ஒருவரிடம் அழைத்துப் போனார்.

வீட்டு வாசலில் சிபாரிசுக்காக.. அவரிடம் நிகழ வேண்டிய காரியங்களுக்காக.. மனிதக் காக்கைகளின்



கூட்டம்.
மீறி உள்ளே போனோம்.
தியாகிக்குப் பெருமிதம் கண்ணில் தெரிந்தது.
'பார்த்தியா... என் பெயருக்கு எவ்வளவு மதிப்பு' என்று.
நான் எதுவும் சொல்லவில்லை. எனக்காக அலைகிற மனிதரை வீணாகப் புண்படுத்துவானேன்.
அரைமணி காத்திருத்தலுக்குப் பின் அறைக்குள் போனோம்.
இரண்டு டஜன் மனிதர்கள் சுற்றி நிற்க நாங்கள் தேடிப் போனவர், பெரிய மேஜைக்கு அந்தப் பக்கம் அமர்ந்து தடிமனான கண்ணாடி வழியாக விழித்தார்.
''தம்பி.. நல்லா இருக்கீங்களா?'' என்றார் தியாகி.
''இருக்கேன்... என்ன விஷயம் ஐயா? இவ்வளவு தூரம் என்னைப் பார்க்க வந்திருக்கீங்க...''
குரலில் பாசம், பந்தம் எதுவும் இல்லை.
ஆனால் தியாகியிடம் எந்த பாதிப்புமில்லை.
''நமக்கு வேண்டிய பையன்.. பாவம் வேலை கிடைக்கலே...''
பார்வை இடம் மாறி இப்போது என் மீது பதிந்தது.
''என்ன படிச்சிருக்கே?''
சொன்னேன்.
''ஏன் இதுவரை வேலைக்கு முயற்சி செய்யவில்லை?''
செய்தேன். பலனில்லை. சொன்னேன்.
''சரி. நாளைக்குக் காலையில் என் செகரட்டரியைப் பார்.''
தியாகி வெளியில் வந்ததும் என்னைப் பெருமையாகப் பார்த்தார்.
''இனிமே உனக்குக் கவலையில்லே...''

''அய்ய்யோ... டாக்டர்! வலது காலில ஆபரேஷன் பண்றதுக்குப் பதிலா என்னோட இடது காலில பண்ணிட்டீங்களே...? இப்ப என்ன செய்ய?''
''சும்மா கத்தாதய்யா! தப்பு உன் மேலதான்... ஆபரேஷன் பண்ணும் போது குப்புறப் படுத்திருக்கிறியே!''
- மதுரை ஜெயபதிராஜ்



''இவர் சும்மா எனக்கு வேலை தர மாட்டாரே...'' என்றேன் சந்தேகமான குரலில்.
''தம்பி.. நான் ஒரு விஷயம் ஒத்துக்கறேன். நாங்க அண்ணல் காலத்துல கனவு கண்ட தேசம் இது இல்லைதான். இப்ப விஷம் போல பரவிக் கிடக்கிற லஞ்சம், ஊழல், நாங்களே எதிர்பார்க்காதது. ஆனா அதுக்காகச் சுத்தமாக நல்ல மனிதர்கள் இன்னமும் அற்றுப் போயிடலை...'' என்றார் உணர்ச்சிமயமாக.
எனக்கு உள்ளூர ஏதோ உறுத்தியது.

இந்த ஒரு வாரமும் அந்தப் பெரிய மனிதரை என்னால் சந்திக்க முடியவில்லை.
தியாகிதான் சொன்னார்.
முயற்சியை விடாதே. அவனுக்கு வேலைகள் அதிகம். விடாமல் போய்ப் பார். நிச்சயம் உதவுவான்.
ஆனால் எதிர்பாராதது நிகழ்ந்து விட்டது.
இப்போது அந்தப் பெரிய மனிதருக்கே யாராவது உதவ வேண்டும்!
நாடு தழுவிய பெரிய ஊழல் பட்டியல் வெளியிடப்பட்டு பிரபல மனிதர்கள் கைது செய்யப்பட்டார்கள்.
என் 'பிரபல'மும் அதில் ஒருவர்.
நூலகப் பூங்காவில் தியாகியும் நானும் மௌனமாய் அமர்ந்திருந்தோம்.
பறவைகள் ஒலி மட்டும் விடாமல் கேட்டது.
மௌனம் அழுத்தப் போகப் பேசினேன்.
''கைதானவங்க பட்டியலைப் பார்த்தீங்களா'' என்றேன் எகத்தாளமாக.
பெரியவரின் பார்வை பூமியை விட்டு நிமிரவில்லை.
''இல்லீங்க. எனக்கு என்னவோ நம்பிக்கை இல்லே. இந்த அளவு பணவெறி எந்தக் காலத்துலேயும் இருந்திருக்க முடியாதுங்கிற அளவு இப்ப பணம் பேசறது மட்டும்தான் புரியுது. பணம் - அது கிடைச்சா... என்ன... என்ன வேணும்னாலும் செய்ய மனுஷங்க தயாராயிட்டாங்க...'' என்றேன் வெறுப்பு ததும்பும் குரலில். - குரல் அடைத்தது.
தியாகி பெருமூச்சுடன் தலைநிமிர்ந்தார்.
எழுந்து நின்றார்.
''மறுபடியும் சொல்றேன்... தம்பி. இப்பவும் எனக்கு நம்பிக்கை இருக்கு. அன்னைக்கு வெள்ளைக்காரன் போவான்னு யாருமே எதிர்பார்க்காம இருந்திருந்தா... இன்னைக்குச் சுதந்திர பூமியில நாம வாழ்ந்துகிட்டு இருக்க மாட்டோம். அதே போல... இப்ப இருக்கற அவலங்கள் எல்லாம் மறைஞ்சு... ஊழலற்ற புதுயுகம் வரும்.. வரப் போவுது தம்பி.. எனக்கு நல்ல நம்பிக்கை இருக்கு...''
ஏனோ கடைசியில் அவர் குரல் தேம்பியது.
வேகமாக வெளியேறிப் போய் விட்டார்.

மறுபடி அவரை அந்தப் பூங்காவில் நான் சந்திக்கவில்லை.
அவரைப் பார்த்தால் சொல்ல வேண்டும். எனக்கு வேலை கிடைத்து விட்டது என்று.

தீரர் சத்தியமூர்த்தி

"கல்கி"

கல்கி ஏப்ரல் 10, 20, 1943

போர் என்றால், அதுவும் வாக்குப் போர் என்றால், ஸ்ரீ சத்தியமூர்த்தியின் உற்சாகத்தைச் சொல்லி முடியாது. அதிகமாக யோசனை கூடச் செய்யாமல், போர்க்களத்தில் குதித்து விடுவார். குதித்து விட்டால், அப்புறம் சண்டப் பிரசண்டந்தான்!

சில சமயம் ஒரே வார்த்தையினால் எதிராளிகளை மடக்கி உட்கார வைத்து விடுவார். மறுபடியும் அவர்கள் தலை கிளப்ப முடியாதபடி அடித்து விடுவார். இதற்கு ஒரு பிரசித்தமான உதாரணம் உண்டு. 1920-ம் ஆண்டில் திருநெல்வேலியில் நடந்த தமிழ் மாகாண மகாநாட்டில் இது நேர்ந்ததென்று ஞாபகம்.



ஸ்ரீ சத்தியமூர்த்தி பிரபலமாகி வந்த காலத்தில், தமிழ்நாட்டில் ஸ்ரீ வி. எஸ். சீனிவாச சாஸ்திரியாரின் பெயர் ரொம்பவும் பிரபலமாயிருந்தது.

சாஸ்திரியார் அரசியலில் மிதவாதி. அதாவது, பிரிட்டிஷ் சர்க்காருடன் ஒத்துழைத்து மனுச் செய்து அவர்களுடைய தயவைக் கொண்டு இந்தியா முன்னேற வேண்டுமென்று நம்பிய கூட்டத்தைச் சேர்ந்தவர். ஆனால் அந்தக் காலத்தில் மிதவாதிகளின் செல்வாக்கு தேசத்திலும் காங்கிரஸிலும் இன்னும் குறைந்து விடவில்லை.

''இங்கிலீஷ் பேச்சுக் கேட்க வேண்டுமென்றால், சீனிவாச சாஸ்திரியாரிடம் கேட்க வேண்டும். அவர் மாதிரி சுத்தமாகவும் மதுரமாகவும் இங்கிலீஷ் பேசக் கூடியவர்கள் இங்கிலாந்திலேயே இரண்டொருவர்தான் உண்டு'' என்று அந்தக் காலத்தில் சொல்வார்கள்.

அதோடு, கோகலே சென்னைக்கு வந்து சீனிவாச சாஸ்திரியை அரசியல் தொண்டுக்கு அழைத்ததும், சாஸ்திரியார் தியாக வாழ்க்கையை மேற்கொண்டு கோகலேயின் 'இந்திய ஊழியர் சங்க'த்தில் சேர்ந்ததும், கோகலேக்குப் பிறகு சாஸ்திரியார் மேற்படி சங்கத்தின் தலைவரானதும் அப்போது புதிய சம்பவங்களாயிருந்தன.

அப்படிப்பட்ட நிலைமையில் சாஸ்திரியாரைத் தாக்கி அவருடைய செல்வாக்கைக் குறைக்க வேண்டிய அவசியம் ஸ்ரீ சத்தியமூர்த்திக்கு ஏற்பட்டது.

ஒரே ஒரு வார்த்தையில் இந்தக் காரியத்தை அவர் செய்து விட்டார்!

அப்படியொன்றும் ரொம்பக் கடுமையான வார்த்தையில்லை - அவலட்சணமான வசைமொழி இல்லை - நல்ல அழகான சம்ஸ்கிருத வார்த்தைதான்!

அவருடைய தனித்த கம்பீரமான குரலில் - தீர்க்கமான உச்சரிப்பில் - ''ஸ்ரீமான் சீனிவாச சாஸ்திரி...'' என்று சொல்லி ஒரு கணம் நிறுத்தினார். பிறகு இன்னும் தீர்க்கமாக ''...மகானுபாவன்!'' என்றார். உடனே அந்தப் பெரிய சபையில் ஒரு கலகலப்பும் சிரிப்பும் கரகோஷமும் கலந்து கிளம்பின. அந்தச் சிரிப்பானது, ஸ்ரீ சீனிவாச சாஸ்திரியின் அரசியல் கொள்கையைப் பார்த்துத் தேசமே சிரித்தது போலிருந்தது.

பிறகு, சீனிவாச சாஸ்திரியின் பெயரைப் படித்தபோதெல்லாம் - கேட்டபோதெல்லாம் - ''மகானுபாவன்'' என்று ஜனங்கள் உடன் சேர்த்துக் கொண்டார்கள். சாஸ்திரியார் எங்கேயாவது பேசுவதாயிருந்தால், பேச்சைக் கேட்க வருகிறவர்கள் ''சீனிவாச சாஸ்திரி - மகானுபாவன்'' என்று வாய்க்குள் முணுமுணுத்தவண்ணமிருந்தார்கள். ஸ்ரீ சீனிவாச சாஸ்திரியார் அதற்குப் பிறகு எத்தனையோ துறைகளில் சிறப்புக்களை அடைந்து பொது மக்களின் அபிமானத்தையும் மரியாதையையும் பெற்றிருக்கிறார். ஆனால், அவருடைய அரசியல் வாழ்க்கை மட்டும் அந்த 'மகானுபாவர்' பட்டம் கிடைத்ததோடு முடிந்து விட்டதென்றே கருத வேண்டும்.

அந்த நாளில் தமிழ்நாடெங்கும் ஒரு அரசியல் பல்லவி அதிகமாக அடிபட்டு வந்தது. ஸ்ரீ சத்தியமூர்த்தியின் ஸாஹித்யந்தான் அது. நாலு பேர் சேர்ந்து அரசியலைப் பற்றிப் பேசத் தொடங்கினால் அவர்களில் யாராவது ஒருவர், திடீரென்று,

''அவன்தோல் வெளுப்பாம்!
என் தோல் கறுப்பாம்!''

என்று தீர்க்கமான குரலில் சொல்லுவார். மற்றவர்களின் முகத்தில் ஒரு உற்சாகம் காணப்படும். ''அடாடா! சத்தியமூர்த்தியின் பேச்சே பேச்சு!'' என்பார்கள்.

மேற்படி பல்லவியைச் சில காலம் ஸ்ரீ சத்தியமூர்த்தி தமது பிரசங்கங்களில் கை யாண்டு, கேட்கும் ஜனங்களைப் பைத்திய மாக அடித்து வந்தார். இந்த தேசத்தில் இங்கிலீஷ்காரர்கள் அனுபவிக்கும் தனி உரிமைகளையும் சலுகைகளையும் ஒவ் வொன்றாக எடுத்துச் சொல்லி மேற்படி பல்லவியுடன் முடிப்பார். உதாரணம் :-

''ஒரு உத்தியோகத்தை ஆங்கிலேயன் பார்த்தால் அவனுக்கு இரண்டாயிரம் ரூபாய் சம்பளம்; அதே உத்தியோகத்தை நான் பார்த்தால் எனக்கு எண்ணூறு ரூபாய்தான் சம்பளம். இந்த வித்தியாசம் எதனால் தெரியுமா? அவன் தோல் வெளுப் பாம்! என் தோல் கறுப்பாம்!....''

இப்படியாக உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போவார். பிரசங்கத்தில் ஜனங் களின் மனதைக் கவர்ந்து, அவர்களுடைய ஆவேசத்தைக் கிளப்புவதற்கு இம்மாதிரி அநேக உத்திகளை அவர் கையாள்வதுண்டு.

ஒரு சமயம் மன்னார்குடியில் மகாத் மாவின் புதுத் திட்டத்தைத் தாக்கி வந்த போது, ''காந்தி சொல்கிறான்'' என்று ஏக வசனத்தில் குறிப்பிட்டு விட்டார். ஒரு வேளை இது வாய் தவறி வந்ததாயிருக்க லாம். தமிழ் நாட்டில் ''காந்தி பைத்தியம்'' அதிவேகமாகப் பரவி வந்த காலம் அது. கூட்டத்தில் சிலருக்குப் பொறுக்கவில்லை. ஸ்ரீ சத்தியமூர்த்தி பேசும் போது குறுக்கே பேசுவதற்கு அவர்களுக்கு எவ்வளவோ பயமாயிருந்தாலும், தங்களையும் மீறி, ''ஏக வசனமாய்ப் பேசக் கூடாது!'' என்று கூச்சல் போட்டார்கள்.

ஸ்ரீ சத்தியமூர்த்தி அந்த நிலைமையைச் சமாளித்த விதம் ரொம்பவும் அதிசயமா னது. யோசிப்பதற்கு ஒருகணம் அவகாசங் கூட அவர் எடுத்துக் கொள்ளவில்லை. பளிச் சென்று பதில் கூறினார் :-

''ராமன் வனம் சென்றான் என்று சொல் கிறோம். இதனால் ராமனையும் கிருஷ்ண னையும் நாம் அவமதிக்கவில்லை. ராமனை யும் கிருஷ்ணனையும் போல் காந்தியை நான் அவதார புருஷனாக மதிக்கிறேன்!''

இதைக் கேட்டதும் கூட்டத்தில் உண் டான மகத்தான கரகோஷம் அவரிடம் ஏற் பட்டிருந்த அதிருப்தியையெல்லாம் பறக்க அடித்து விட்டது.

மகாத்மாவினுடைய அநேக பெருமை களில் இதுவும் ஒன்று. சிநேகிதர்களுடைய தேக சௌக்கியத்தைப் பற்றியும் அவர் களுடைய குடும்ப யோக க்ஷேமங்களைப் பற்றியும் ரொம்பவும் கவலையெடுத்துக் கொள்வார். 1941-ல் ஸ்ரீ சத்தியமூர்த்தி சிறை யிலிருந்து வந்ததும் காங்கிரஸ் திட்டத்தை மாற்றும்படி பிரசாரம் செய்யத் தமக்குப் பேச்சு சுதந்திரம் வேண்டும் என்று மகாத் மாவுக்கு ஒரு பெரிய கடிதம் எழுதினார்.

அதற்கு மகாத்மா, ''பேச்சு சுதந்திரம் உங்க ளுக்குத் தாராளமாக உண்டு'' என்று சொல்லி விட்டு, ஆனால் ''உங்களுடைய தேக ஆரோக்கியம் எப்படியிருக்கிறது? அதை முக்கியமாய்க் கவனிக்கவும். உடம் பைப் பார்த்துக் கொண்டு எது வேணுமா னாலும் செய்யுங்கள்'' என்று பதில் எழுதி னார்.

மகாத்மாவிடம் ஸ்ரீ சத்தியமூர்த்தியின் பக்தி வளர்ந்து வந்தது போலவே, மகாத் மாவுக்கும் ஸ்ரீ சத்தியமூர்த்தியின் திறமை யில் மரியாதை வளர்ந்து வந்தது.

(கட்டுரையின் சில பகுதிகள்)

நடன கலா சேவை


தமிழ் டாக்கிகளைப் பற்றி எத்தனையோ அபிப்பிராய பேதங்கள் இருக்கலாம். ஆனால், முதன் முதலாகத் தமிழில் வந்த நல்ல டாக்கி எது என்று கேட்டால் ஒருமுகமாக ''பக்த குசேலர்'' என்ற பதில்தான் வரும். ''பக்த குசேலர்'' படத்தின் இந்த மகத்தான வெற்றிக்கு முக்கிய காரணமா யிருந்தவர் அந்தப் படத்தில் கிருஷ் ணன் வேஷத்தில் தோன்றித் தமது நடிப்புத் திறனாலும் நகை முகத்தினாலும் தமிழ்நாட்டின் உள் ளத்தைக் கவர்ந்த ஸ்ரீமதி எஸ். டி. சுப்பு லக்ஷ்மி. இவர் பல வருஷங்களுக் குப் பிறகு இப்போது மறுபடியும் ''கிருஷ்ண குசேலா'' என்னும் கன்னடப் படத்தில் கிருஷ் ணன் வேஷத்தில் தோன்றுகிறார். இன்னும் நடன மேடையிலும் அதே வேஷத்தில் தோன்றி 'நடன கலா சேவை' செய்கிறார். டைரக்டர் கே. சுப்பிரமணியம் ஆரம்பித்திருக்கும் இந்த நவீன நடன கலா சேவையில் எஸ். டி. எஸ். 'வள்ளி'யாகத் தோன்றி நடனமிடும் தோற் றம் இந்த இதழின் அட்டைப் படத்தை அலங்கரிக்கிறது.



பழக்கம் காரணம்

உபாத்தியாயர் : ராமு, எனக்கு மாத்திரம் எப்படியடா 'வட்டம்' சரியாய் வருகிறது?

ராமு : உங்களுக்குப் பரீக்ஷைப் பேப்பர் திருத் தித் திருத்திப் பழக்கம், ஸார்!



மாயக் குதிரை



சென்னை மாநகரத்தின் பிரதான சாலையான அண்ணாசாலையில் பழைய பிரிட்டிஷ் கட்டடம் ஒன்றின் இரண்டாவது மாடியில் இரண்டாயிரம் சதுர அடி பரப்பளவில் அந்த டிடெக்டிவ் ஏஜென்ஸியின் அலுவலகம் இருந்தது. 'எம்.எல்.எஸ்.' என்று சுருக்கமாக அழைக்கப்படும் இந்த ஏஜென்ஸி தமிழ் நாவல்களில் வருவது போல் அப்படியொன்றும் சாகசங்களைப் பிரமாதமாக இதுவரை செய்ததில்லை. அங்கே அழகான பெண்களோ ஆண்களோ கிடையாது. அதனை நிறுவியவரின் பெயர் மேஜர் சுதாகர். 'பி.எஸ். எஃப்'இல் இன்டெலிஜென்ஸ் பிரிவில் பணியாற்றி, ஓய்வு பெற்றதும் இதைத் துவக்கினார். அவருக்கு வரும் கேஸ்கள் சுலபமானவை.

- திருமணம் செய்யப் போகும் பெண்ணைப் பற்றிய விவரங்கள்.
- போட்டி கம்பெனியின் புதிய திட்டங்களை அறிதல்.
- பூட்டிக் கிடக்கும் வீட்டை ஒரு மாதத்திற்குப் பாதுகாத்தல்.
- சேஃப்டி அலாரம் ஒன்றை ஜெர்மனியிலிருந்து தருவித்து விற்கும் வியாபாரத்தைப் பிரதானமானது என்று சொல்லலாம்.

மற்றபடி, போலீஸ் இவரின் உதவியை நாடும். கழன்று, எகிறி, சண்டை போடுவார். 'ஓ.கே. பாஸ்' - இதெல்லாம்... ஜோக்!

மேஜர் சுதாகர் எதிரே அமர்ந்திருந்தவர்களைப் பார்த்தார். இளைஞர்கள். அதிகம் சிகரெட் குடிப்பதைக் காண்பிக்கும் உதடுகள். கலைக்கப்பட்ட தலைமுடி. கண்களில் சோகம்.

"ஸோ, நீங்கள் ரசிகர் மன்றத்தைச் சேர்ந்தவர்கள்!"

"ஆம்."

"உங்களுடைய தேவை என்ன?"

"சூர்யாவின் மரணத்தின் ரகசியம் எங்களுக்குத் தெரிய வேண்டும்."

"வெல், அதிலென்ன ரகசியம்? ரேபீஸ்தானே?"

"தெரியவில்லை. போலீஸ் நிறைய பொய் சொல்கிறது."

"நானும் படித்தேன். ஆனால் பி.எம். ரிப்போர்ட்டை வெளியிட்டு விட்டார்களே?"

சிவப்பான விழிகளைக் கொண்ட ஒருவன், "அது ரேபீஸாகவே இருக்கட்டும். அது எப்படி வந்தது?"

"நாய் கடிக்கவில்லை, இல்லையா?"

"ஆமாம். பிறகு எப்படி?"

"கம் க்ளீன். உங்கள் சந்தேகம் என்ன?"

"ரேபீஸு"ம் இல்லை, ஒரு மண்ணும் இல்லை. தலைவரை விஷம் வைத்துக் கொன்று விட்டார்கள்..." என்றான் ஒருவன் ஆத்திரமாக.

"யார்?" என்றார்.

"மதன்ராஜ்தான்."

லேசாப் புன்னகைத்தார்.

ஒருவன் தன்னிடமிருந்த தோல் பையைத் திறந்து இரண்டு நூறு ரூபாய்க் கட்டுகளை எடுத்து வைத்தான்.

"ஸார்! எங்களுக்கு வேண்டியவை ஆதாரமான உண்மைகள். சூர்யா எப்படி இறந்தார்? அவரைக் கொன்றது யார்?"

'கொன்றது!' இவர்களின் கண்மூடித்தனமான தீர்மானத்திற்குக் காரணம் இவர்களின் வெறியா?

"இது அட்வான்ஸ்" என்றான் ஒருவன்.

மேஜர் சுதாகர் அதை எடுக்காமல் "போலீஸ் என்ன சொல்கிறது?" என்றார்.

"விசாரணை செய்கிறார்களாம். விசாரித்து 'நாய் கடித்ததாக'ப் பொய் சொல்வார்கள்."

கிருஷ்ணா டாவின்ஸி



''உங்கள் சந்தேக லிஸ்டில் வேறு யார் யார் இருக்கிறார்கள்?''

''சூர்யாவின் எதிரிகளுக்குக் கணக்கே இல்லை. ஆனால் பிரதானமானது மதன்ராஜ் தான். திரையுலகில் ராஜாவாக இருந்த மதன் ராஜை ஓரம் கட்டி, இருக்குமிடம் தெரியாமல் செய்தது எங்கள் சூர்யாதான்.''

''அது, தொழில்.''

''இல்லை. அதையும் மீறிச் சில விரோதங்கள் உண்டு. இதைப் பாருங்கள்.''

அவர்கள் ஒரு பத்திரிகையைக் காண்பித்தார்கள்.

அதில் கீழ்க்கண்டவாறு இருந்தது.

திரைக் கழுகுவின் சூடான செய்திகள் -

மதன்ராஜ் ஆவேசம்!

சிவப்பு சந்திரன் படப்பிடிப்பில் இருந்த மதன்ராஜைக் கண்டு நலம் விசாரித்து, திரையுலகின் சூப்பர் நட்சத்திரமான இளம்புயல் சூர்யாவின் அடுக்கடுக்கான வெற்றிகளைப் பற்றிக் கேட்ட போது அவர் உடனே ஆவேசமடைந்து, ''அவனெல்லாம் ஒரு நடிகனாய்யா. இன்னும் கொஞ்ச நாளில் அவன் இருக்கும் இடம் இல்லாமல் செய்துடறேன் பாரு'' என்றார் மூன்றாம்தர மொழியில். வரிசையான தோல்விகளால் மனம் நொந்திருக்கும் மதன்ராஜை நினைத்தால் பாவமாக இருக்கிறது.

மேஜர் சுதாகர் பத்திரிகையின் தேதியைப் பார்த்தார். ஒரு வருடத்துக்கு முந்தைய தேதி. 'திரைக் கழுகு!' இதற்கெல்லாம் என்ன ஆதாரம்!

''பார்த்தீங்களா?'' என்றான் ஒருவன்.

''ஒருமுறை ஷூட்டிங்குக்காக ஊட்டி போயிருந்தப்ப கொலை முயற்சி நடந்தது. தலைவர் தப்பிச்சாரு...''

அவர்கள் நிறைய செய்திகளைச் சொன்னார்கள். சுதாகர் எல்லாவற்றையும் கவனமாகக் கேட்டார். பிறகு பணக் கட்டை எடுத்துக் கொண்டார். பிறகு அவர்களிடம் சில திட்டங்களைச் சொன்னார். அவர்கள் எழுந்தார்கள். வணக்கம் சொல்லி விடை பெற்றார்கள். படிகளின் வழியே கீழே இறங்கி ஒரு ஆட்டோவை அழைத்து ஏறிக் கொள்ள, பங்க் கடையில் சிகரெட் பிடித்துக் கொண்டிருந்த ஒரு மீசை ஆசாமி அவர்களைப் பார்த்தான். எதிரே நின்ற இன்னொருவனை ஒரு வினாடி பார்த்து விட்டு வேறொரு ஆட்டோவை அழைத்து... அந்த ஆட்டோவின் பின்னால் செல்ல ஆரம்பித்தான்.

முன்னால் நின்றவன் தலைநிமிர்ந்து அலுவலகத்தைப் பார்த்தான். பிறகு மெதுவாக நடந்து கட்டடத்தினுள் நுழைந்தான். படியேறினான்.

மேஜர் சுதாகரைச் சந்தித்தான்.

அவனுக்குப் பெரிய மீசை இருந்தது. கண்கள் ஆல்கஹால் சிவப்பு. அவனுடைய வடிவமான புஜங்களையும் தலை கிராப்பையும் பார்த்ததும் விஷயம் தெரிந்தது.

அவன் வணங்கி, ''என் பேரு வேலாயுதம். இன்டெலிஜென்ஸ். லா அண்ட் ஆர்டர்...'' என்றான்.

''உட்காருங்க'' என்றார் சுதாகர்.

அவன் தாமதிக்காமல் நேரடியாக விஷயத்துக்கு வந்தான். ''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி உங்களைப் பார்த்துட்டுப் போனாங்களே, ரசிகர் மன்ற ஆளுங்க. என்ன சொன்னாங்க?''

''ஜூஸ் சாப்பிடறீங்களா?''

''பரவாயில்லீங்க.''

''அவங்க தலைவர் மரணத்துல சந்தேகம். விசாரிக்கச் சொன்னாங்க!'' என்றார்.

''வேலையத்தப் பசங்க. கேஸ் எடுத்துக் கிட்டீங்களா?''

''இல்லீங்க. ரொம்ப வீக்கு. உபதேசம் பண்ணி அனுப்பிவேன்'' என்றார்.

''என்னான்னு?''

''இதுல எதுவும் மர்மம் இல்லை. சாதாரண மரணம்தான். பெரிசுபடுத்தாதீங்கன்னேன்.''

''அதுக்கு என்ன சொன்னாங்க?''

''சாதிச்சாங்க. அதான் போலீஸ் விசாரணை பண்றாங்க இல்லை, அவங்க பாத்துப்பாங்க. போங்கன்னேன்.''

''அப்புறம்?''

''எழுந்து போய்ட்டாங்க.''

வேலாயுதம் நம்பாமல் பார்த்தான்.

''அப்படீங்களா?'' என்றான்.

''வேலையத்தப் பசங்க'' என்றார்.

''ஆமாங்க. நம்பளைக் கழுத்தறுக்கறாங்க. அனாவசியப் பிரச்னை. நீங்க எடுத்துக்கலை இல்லை?''

''இல்லைங்க. வேஸ்ட்டு!''

''எடுக்கறதா 'ஐடியா' இருந்தா விட்டுடுங்க. அப்புறம் பிரச்னையாயிடும். வரட்டுங்களா?'' அவன் மறுபடி வணங்கி விட்டு எழுந்து சென்றான்.

மேஜர் சுதாகரின் வேலையாட்களில் அதிகத் திறமையானவனும், புத்திசாலியும், அம்மைத் தழும்புகள் இருக்கும் முகத்தைக் கொண்டவனுமான ரங்கா எனப்படும் ரங்கராஜனுக்கு ஒல்லியான தேகம். பெரிய கண்கள். நிறைய படிப்பான். இப்போது படித்துக் கொண்டிருக்கும் புத்தகம் ''அவுட் லைன்ஸ் ஆஃப் கிரிமினல் லா.''

ரங்கா காப்பி கப்பை எடுத்து உறிஞ்சினான். மேஜர் சுதாகர் அவனைப் பார்த்து, ''சொல்லு ரங்கா! உன் 'ஒபீனியன்' என்ன?'' என்றார்.



எதனாலே?

* சுத்தத் தங்கத்தால் ஆபரணங்கள் செய்யப்படுவதில்லை. ஏன்?



''மிஸ்டீரியஸ்தான் சுதா. போலீஸ் ஸ்டேட்மண்ட்டு ஒரே குழப்பம். முதல்ல மாரடைப்புன்னாங்க. அப்புறம் நாய் கடிச்சிருச்சாம்...''

''பி.எம். ரிப்போர்ட் அப்படித்தான் சொல்லுது.''

''ஆஸ்பிடல்ல முப்பது ரூபாய்க்கு விக்கிறாங்க அதை'' என்றான்.

''கேஸை எடுக்காதேன்னு போலீஸ் மறைமுகமா எச்சரிக்குது. ஏன்?''

''அனாவசியமா நம்பளைப் பெரியாளாக்கறாங்க சுதா. சூர்யா இந் நேரம் சொர்க்கம் போய்ச் சேர்ந்திருப்பாரு.''

''ரசிகர்களுக்கு வேண்டியது மனத் திருப்தி.''

''கடிச்ச நாயைக் காண்பிக்கணுமாம்மா? அது எப்பவோ செத்துருக்கும்!''

''ரேபீஸ் பத்தி என்ன தெரியும் உனக்கு?''

''எல்லாம் விசாரிச்சுட்டேன். ரொம்ப புதிரான வியாதி. உடனே தொப்புளைச் சுத்தி ஊசி போடாட்டா அவ்வளவுதான். ஒன் வே டிக்கெட்!''

''முதல்ல செத்தது ரேபீஸ்னாலதான்னு உறுதிப்படுத்திக்கணும்.''

''அது பண்ணிக்கலாம். நம்ப டாக்டர் ஒருத்தர் வேப்பேரியில கிளினிக் வைச்சிருக்காரு. அவரைக் கேட்டதுல 'ஸிம்ப்டம்ஸ்' எல்லாம் விலாவரியா சொன்னாரு. கடைசி ரெண்டு நாள்ல சூர்யாவுக்கு உடம்பு என்ன பண்ணிச்சுன்னு தெரிஞ்சதுன்னா ரேபீஸா இல்லையான்னு உறுதி பண்ணிடலாம்...''

''நீ கொஞ்சம் விசாரி ரங்கா.''

''நாய் கடிச்சாத்தான் ரேபீஸ் வரணும்னு இல்லை சுதா. வௌவால் கடிச்சாலும் வருமாம்!''

''வௌவாலை யாரும் வளர்க்கறதில்லை'' என்றார்.

''அது சரி.''

''அப்புறம், இந்த இன்ஷூரன்ஸ் விவகாரத்தைத் தோண்டு. உன் நண்பன் யாரோ 'ஏஜெண்டு' இல்லை?''

''ஏஜெண்டா? கோடி கோடியா பாலிஸி பிடிச்சு கிளப் மெம்பர் ஆயிட்டான். விசாரிக்கிறேன். சுதா, ரொம்ப விவகாரம் புடிச்ச கேஸ். பேசாம அட்வான்ஸைத் திருப்பிக் கொடுத்திருங்க... நமக்குச் சரிப்படாது!''

''வேண்டாம். வேற வழியில இதை விசாரிக்கிறேன். முதல்ல ஸ்புட்னிக் ஆஸ்பத்திரியில அட்மிட் ஆகப் போறேன். அதுக்கு ஒரு வழியைப் பாரு'' என்றார் மேஜர் சுதாகர்.

தமிழகக் காவல் துறை சும்மா இருக்கவில்லை. அது ரகசியமாகத் தன் விசாரணை விரல்களைப் படர விட்டிருந்தது. சூர்யாவின் கடந்த இரண்டு மாத கால தினசரி செயல்கள் துருவப்பட்டன. எல்லோரும் விசாரிக்கப்பட்டார்கள். மதன்ராஜ் கண்காணிக்கப்பட்டான். எஸ்.பி. சண்முகம் நேரடியாக விசாரணை செய்து கொண்டிருந்தார். பி.ஏ. சுந்தரத்திடம் நிதானமாகக் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

''சுந்தரம் நல்லா யோசிச்சு சொல்லுங்க. சூர்யாவை நாய் கடிக்கவே இல்லையா?''

''இல்லை ஸார்! நிச்சயமாச் சொல்றேன்.''

எஸ்.பி. சண்முகம் மேலே மாட்டியிருந்த பெரிய அளவு புகைப்படத்தைப் பார்த்தார். ஒரு கறுப்புக் குதிரையின் அருகே சூர்யா ஸ்டைலாக நின்றிருந்தான். அவர் பார்வையைத் தொடர்ந்த சுந்தரமும் அதைப் பார்த்து, ''சூர்யாவுக்கு ரொம்ப பிடிச்ச குதிரை. பாவம். அதுவும் திடீர்னு செத்துப் போச்சு'' என்றான்.

''திடீர்னு செத்துப் போச்சா? எப்படி?''

''தெரியலை. பிளாக்கின்னு பேரு. நல்லாத்தான் இருந்தது. என்ன ஆச்சோ? தினமும் அதன் மேல ஏறிப் பயிற்சி செய்வார்.''

எஸ்.பி. சண்முகம் உடனே ஒரு டாக்டருடன் தொடர்பு கொண்டார்.

(தொடரும்)

தவழும் அலைகளில் க

இத்தனை சிறிய ஊராக இருந்து கொண்டு, சர்வதேச சுற்றுலா மையம் என்ற முத்திரை குத்திக் கொண்டிருக்கும் ஒரே இடம் தரங்கம்பாடியாகத்தான் இருக்க முடியும்! ராஜ வீதி ஒன்று; ராணி வீதி ஒன்று. கடலை ஒட்டி மீனவர் குப்பம் ஒன்று. சிதிலமாகிப் போன ஒரு நுழைவு வாயில். அதைத் தாண்டி ஒரு சிறிய கடை வீதி. எல்லாம் சேர்ந்தால் தரங்கம்பாடி.


''இங்கே டேனிஷ் மக்கள்தான் அதிகம் வருகிறார்கள். அவர்கள் வந்தால் நிற்கக்கூட இடம் கிடையாது. தங்க ஏது இடம்? சுற்றிப் பார்த்து விட்டுப் போய் விடுகிறார்கள். நிறையப் பேர் தங்கியிருக்கப் பிரியப்படுகிறார்கள். அதற்கு ஹோட்டல் வேண்டுமே! சுரியாலி அம்மாதான் (தமிழக சுற்றுலாத் துறைச் செயலர்) இங்கே வந்து, 'இந்த பில்டிங்கைக் கொடுக்கவில்லை என்றால் தாஜ் ஹோட்டல்காரர்கள் இங்கே வரவே மாட்டார்கள்!' என்றார். இது 'பிரிட்டிஷ் டைப்' கட்டடம். இந்தக் கட்டடத்தை விற்று விட்டோம். இதைப் பழுதுபார்க்கப் போகிறார்கள். 40 ரூம்கள் கொண்ட ஹோட்டலாக மாற்றப் போகிறார்கள்!'' என்றார் கட்டடச் சொந்தக்காரர் பொன்னுசாமி.

படகுகளும், மீன்பிடிக் கப்பல்களும் அன்னம் போல் தவழ, நீல அலைகள் உயர்ந்து ஒரு வீச்சு வீசி, வெள்ளை நுரையாகக் கரை ஒதுங்க, உள்ளூர் இளைஞர்களும், அக்கம் பக்கம் கிராமத்து மக்களுமாகத் தரங்கம்பாடிக் கடலோரத்தில் உயிர்த் துடிப்பு தெரிந்தது.




ரங்கம்பாடி





* கடற்கரையோர டேனிஷ் கோட்டை



* புதிய ஜெருசலம் சர்ச்

வேன்களிலும், ஜீப்புகளிலு மாக நிறையவே மக்கள். மோட்டார் சைக்கிளில் சீறிப் பாய்ந்து வரும் இளைஞர் கள்...


''மாசிலாமணி நாதர் கோயில் பாருங்க. இடிஞ்சு கிடக்கு. யாரும் அக்கறை காட் டுறதில்லை!'' என்றார் ஒழுகை மங்கலம் கிராமப் பெண் மணி.

சீறிச் சீறிப் பாய்ந்து தாக் கும் கடல் அலைகளின் மூர்க்கத் தில், வெளி பிரகாரம் சிதைந்து பரிதாபமாய் இருந்தது அந்தப் பதினாலாம் நூற்றாண்டுக் கோயில். உள்ளே முஸ்லிம் களும், இந்துக்களுமாக வேறுபாடு இன்றி,

''இரண்டு மூன்று வருஷமா, கடல் ஊருக்குள் வர ஆரம்பித்து விட்டது. தடுப்புச் சுவர் கட்ட எஸ்ட்டிமேட் போட்டதோடு சரி, வேலை எதுவும் ஆரம்பிப்பதாகத் தெரியவில்லை!'' என்றார் பொன்னுசாமி.

பங்குனி மாதம் ஆனதால், வெகு அருகே இருக்கிற ஒழுகைமங்கலம் கிரா மத்து அம்மன் கோயில் திருவிழாவுக்கு வரும் மக்கள், தரங்கம்பாடிக்கும் வந்து கடற்காற்றை அனுபவிக்கிறார்கள். எல்லா ஞாயிற்றுக் கிழமைகளிலும் விசேஷம்தா னாம்.

நவீன ஓட்டல்களுடன், சுற்றுலா மையமாக ஆக்கப்பட்டால், தரங்கம்பாடியின் பாரம்பரிய டேனிஷ் கலாசாரம் பாதிக்கப்படும் என்ற கருத்து, சின்ன விவாதமாக உருமாறிய சூழ்நிலையில், தரங்கம்பாடிக்கு நேரில் சென்று வந்தோம் :



* ஹோட்டலாகப் போகும் கட்டடம்

மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்!

டேனிஷ் சரித்திரச் சின்னமான கோட்டையைப் பார்க்கவும் நிறைய மக்கள் வருகின்றனர். தொல்பொருள் பாது காப்புத் துறை நிர்வகிக்கும் இந்தக் கோட்டையைக் கொஞ்சம் பழுது பார்க்க லாம். 1620-ல், முதல் டேனிஷ் கவர்னர் ரோலண்ட் கிரேப் இந்தக் கோட்டை கட்ட அனுமதி பெற்றாராம். மன்னர் ரகுநாத நாயக்கர், ஆண்டுக்கு ரூ. 3111/- வாடகைக்கு, இந்த நிலத்தை கவர்னர் துரைக்குக் கொடுத்தார் என்று குறிப்பு சொல்லுகிறது.

மயிலாடுதுறையிலிருந்து பொறையார் வரும் பேருந்துகள் தரங்கம்பாடியைத் தொட்டு விட்டுச் செல்லுகின்றன.



* பொன்னுச்சாமி

புதிய ஜெருசலம் சர்ச் புதுப்பிக்கப் பட்டு ஏதோ போன வருஷம்தான் கட்டப் பட்டது போல் பளபளக்கிறது. ஆனால் இதற்கு வயசு 250க்கும் மேல் ஆகிறது! ரெவரன்ட் கிறிஸ்டியன் எனும் இளைஞரான பாதிரியார், பைபிளும் கையுமாக வந்த இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் துதிப் பாடல்கள் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

''மீனவர் குப்பங்களுக்குப் போய் ஜீஸஸின் பெருமைகளைச் சொல்லுவதோடு, 'சாராயக் கடைகளுக்குப் போகாதீர்கள். போஸ்ட் ஆபீசில் சேமியுங்கள்! என்றும் உபதேசிக்கிறோம். நல்ல பலன் இருக்கிறது'' என்கிறார் ரெவரன்ட் கிறிஸ்டியன்.

பலதரப்பட்ட மக்களைச் சந்தித்த போதும், அவர்கள் ஒட்டுமொத்தமாக வரவேற்ற ஒரே செய்தி : தரங்கம்பாடி சுற்றுலா மையமாக வளரப் போகிறது என்ற நல்ல செய்தியைத்தான்.

- சித்தார்த்

புகைப்படங்கள், வண்ணப்படங்கள் : கோபிநாத்





சென்னையில் சுற்றுலாத் துறையின் செயலர், திருமதி. கரியாலி யைச் சந்தித்த போது சொன்னார் :

''தரங்கம்பாடியை ஸ்பெஷல் டூரிஸம் ஏரியாவில் சேர்த்திருக்கிறோம். பதினோரு ஹெரிடேஜ் டவுன்களில் தரங்கம்பாடியும் ஒன்றாக எடுத்துக் கொண்டிருக்கிறோம். நுழைவு வாயில் அதன் கலாசாரப் பாரம்பரிய அழகு கெடாமல் புதுப்பிக்கப்பட இருக்கிறது. சர்ச்சைப் புதுப்பிக்க டென்மார்க் அரசாங்கம் உதவியது போல, கோட்டையைச் செப்பனிடவும் இந்திய அரசின் உதவியை நாடியிருக்கிறோம். அயல்நாட்டவரை ஈர்க்க, காரைக்கால் முதல் பூம்புகார் வரையிலான கடற்கரையோரப் பகுதிகளை ஸ்பெஷல் டூரிஸம் ஏரியாவில் சேர்த்திருக்கிறோம். மாஸ்டர் பிளான் தயாரித்தாகி விட்டது. அந்நியச் செலாவணி கிடைப்பதோடு கலாசாரப் பாரம்பரியங்களைப் பாது காத்ததாகவும் இருக்கும் என்று முதல்வர் விரும்பினார். அருகே இருக்கிற திருக்கடையூர் கோயிலையும், தீர்க்க ஆயுசு தரும் திருக்கோயிலாகப் பிரபலப் படுத்தத் திட்டம் இருக்கிறது!''



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இரங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 90 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஓர் நாள் உணவளிக்க, உணவு வகைகளை அனுசரித்து சுமார், முறையே ரூ. 300/- அல்லது 500/- ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 3000/- அல்லது 5000/- மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்குகொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்ப வேண்டிய பொருளும் முகவரியும் :

அத்வைத வித்யாசார்யா மஹாராஜா ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த
தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம் - 612 001.

செக் (or) டிராப்ட் முதலியவைகளை A.V.M.S.G.D.P.S. ஸமிதி என்ற பெயருக்கு அனுப்பலாம்.

*****இந்த நன்கொடைக்கு 80-G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு*****

வேத வைதிக நூல்கள் (விலை தபால் செலவு உட்பட)

I
1. ரிக்வேத ஸம்ஹிதா - நாகராக்ஷரம் - 10 மண்டலங்கள் - ரூ. 265/-
2. க்ருஷ்ணயஜுர்வேத தைத்திரீய ஸம்ஹிதா - 7 காண்டங்கள் - விலை ரூ. 165/-
3. ஸாமவேத ஸம்ஹிதா - க்ரந்தாக்ஷரம் - 2 பாகங்கள்
(முதல் பாகம் - ரூ. 165/-, இரண்டாம் பாகம் - ரூ. 210/-)
4. ஸாமவேத அஷ்டப்ராஹ்மணம் - நாகராக்ஷரம் - 3 பாகங்கள்
(முதல் பாகம் - ரூ. 210/- இரண்டாம் பாகம் - ரூ. 110/- மூன்றாம் பாகம் - ரூ. 85/-)
5. ஸாமவேத பூர்வாபர ப்ரயோகம் - க்ரந்தாக்ஷரம் - ரூ. 80/-
6. சாந்தி குஸுமாகரம் (2 பாகங்கள்) - விலை ரூ. 170/-
(1 ம் பாகம் ரூ. 85/- 2 ம் பாகம் ரூ. 85) (க்ரந்தாக்ஷரம்)

II கிரந்தாக்ஷரத்தில் காரிகையுடன் பிரம்மஸ்ரீ முத்துச்ரௌதிகளால் பதிப்பிக்கப்பட்ட கிரந்தங்களின் மறுபதிப்புகள்

1. போதாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 95/-
2. ஆபஸ்தம்ப பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 90/-
3. ஆபஸ்தம்ப ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 55/-
4. ஆச்வலாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 65/-
5. ஆச்வலாயன ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 50/-
6. கல்ப சிந்தாமணி - ரூ. 55/-

III நாகராக்ஷரம்

1. பஜகோவிந்தம் - ப்ராதஸ்மரண ச்லோக - ரூ. 25/- (மூலத்தி மூலம் தமிழ் பதவுரை)
2. ஸ்ரீ ராதாக்ருஷ்ண பூஜாவிதானம் - ரூ. 25/- (ஸம்ஸ்க்ருதமூலம் - தமிழ் பதவுரை)
3. தர்மோத்தரம் - ஷண்ணவதி ச்ராத்தத்தின் கருக்கம் - ரூ. 25/- (ஸம்ஸ்க்ருத மூலம் - ஆங்கில பதவுரை)
4. வடமொழிச் சொற்கடல் - ஸம்ஸ்க்ருதம் தமிழ் Dictionary 2 முதல் 8 தரங்கங்கள் வரை, முதல் தரங்கம் நீங்கலாக ரூ. 70/-)
5. வேத பாட வழிமுறை (syllabus) ரிக், யஜுர், ஸாம - ரூ. 25/-
6. பரிபோதக்ரம் - நாகராக்ஷரம் - விலை ரூ. 25/-

V.P.P. யில் அனுப்பமுடியவில்லை. முழுத் தொகையையும் M.O. (or) Draft மூலம் கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும். செக் மூலம் அனுப்ப வேண்டாம்.

பிரஸிடெண்ட் - டிரஷரர் - A.V.M.S.G.D.P.S. ஸமிதி, D-76, மூன்றாவது
கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம் - 612 001.

நேரில் வாங்க விரும்புவோர் கண்டிப்பாக - ராஜா வேதகாவ்ய பாடசாலை, பாடசாலை தெரு, (சக்கரை படித்துறை அருகில்) கும்பகோணம் - 612 001 என்ற விலாசத்தில் பெற்றுக் கொள்ளவும்.

"ஆபீசில் குண்டு

பிற்பகல் இரண்டரை மணி இருக்கும். உண்ட மயக்கத்தோடு உட்கார்ந்திருந்தேன். எதிரே பம்பாயின் பல மாடி கட்டடங்களாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்த கோப்புகளைப் பார்க்க மலைப்பாய் இருந்தது. அத்தனையையும் ஒரு நெல்லிக்காய் சைஸ் பாம் போட்டுத் தகர்த்து விட்டால் சுகமாயிருக்கும். வாயைப் பிளந்து கொண்டு வந்த 'ஹா...ஹக்' என்ற கடூரமான கொட்டாவி சப்தத்திற்கு, எசப்பாட்டு கணக்காகக் கை விரலால் சொடுக்கு சப்தம் கொடுத்தேன். எதிரே ஒரு 'களுக்' சப்தம் கேட்டது. டைப்பிஸ்ட் ராதா சிரிப்பை அடக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள்.

இண்டர்காம் அழைத்தது. வேறு யார்... அந்த எமகாதகன்தான்!

''ஹலோ... மூர்த்தி... ஐ ஒன்ஸ் அகெய்ன் ரிமைண்ட் யூ... அந்த எஸ்டிமேட் பைல் நாலு மணிக்குள்ள என் டேபிளுக்கு வந்தாகணும்.''

ஆத்திரமாக, 'பட்'டென்று ரிஸீவரை வைத்தேன். பாவி இத்தனை கெடுபிடி செய்கிறானே.. ஏதோ அரசாங்கத்தையே இவன்தான் தாங்குவதாக ஒரு எண்ணம் போலும்... இவனை இங்கிருந்து எப்போது தூக்கப் போகிறார்களோ தெரியவில்லை. இந்த எஸ்டிமேட் சம்பந்தப்பட்ட பைல் என் டேபிளுக்கு வந்து பத்து நாட்கள் கூட ஆகவில்லை... அதற்குள் என்ன தலைபோகிற அவசரமோ! நாலு மணிக்குள் அனுப்ப வேண்டுமாம்... அவனவனுக்கு வேறு வேலையே இல்லையா சொல்லுங்கள்... மூனே காலுக்கு அடையார் வரை போய் வர வேண்டும். இந்த மாதம் ஏலத்தில் சீட்டை எடுத்தே ஆக வேண்டும். வரும் போது 'கேஸ்'காரனிடம் சொல்லி விட்டு வர வேண்டும்... அவன் போன் கிடைக்கவே மாட்டேன் என்கிறது... ஹவுஸ் பில்டிங் லோன் விஷயமாக சுந்தரமூர்த்தி நாலு மணிக்கு வந்து பார்க்கச் சொல்லி இருக்கிறான்... பார்த்தாக வேண்டும். இந்த அழகில் இந்த ஆள் வேறு பிராணனை வாங்குகிறான்.

இவன் தலையில் குண்டு விழ!

சபித்துக் கொண்டிருந்தபோதுதான் அது நிகழ்ந்தது. திடீரென்று அலுவலகத்தில் ஒரு பரபரப்பு, சலசலப்பு, கிடுகிடுப்பு என்று ஒட்டுமொத்தமாக அப்பிக் கொண்டாற்போல் இருந்தது. எல்லோரும் தங்கள் டேபிளில் இருந்த விரித்த கோப்புகளையும் திறந்த பேனாக்களையும் அப்படியே விட்டு விட்டு எழுந்து ஹாலுக்கு வெளியே ஓடிக் கொண்டிருப்பது என் கண்ணாடி அறையிலிருந்து தெரிந்தது. எனக்கும் லேசாக பயம் கண்டது. 'என்னவாய் இருக்கும்? யாராவது மண்டையைப் போட்டு



ளைவச்சிருக்காங்க!’’

அகிலா கார்த்திகேயன்

விட்டார்களோ...? கட்டடத்தில் தீ பற்றிக் கொண்டதா...’ ராதாவைக் கேட்கலாமென்று நிமிர்ந்தால் அவளையும் காண வில்லை.

‘‘சார்! என்ன சார் குந்திகினுகிறே...? ஆபீஸிலே குண்டு வைக்கிறாங்களாம்... அல்லாரும் ஓடறாங்களே தெரிலே?’’ ப்யூன் செல்வராஜ்தான் எச்சரித்தபடி விரைந்தான்.

ஒன்றும் புரியாமல் என் அறையை விட்டுப் படபடப்போடு வெளியே வந்தேன். ஹாலில் ஈ காக்கை இல்லை.. ‘ஏன் எனக்கு யாரும் தகவல் தரவில்லை... இந்த பார்த்தசாரதியாகட்டும் ஒரு வார்த்தை எச்சரித்து விட்டுச் சென்றிருக்கலாம்... டி.ஏ.பில்லில் கையெழுத்து வாங்க மட்டும் உள்ளே வந்தான்... அதற்குப் பிசாத்து இருபது ரூபாய் கேட்டேன் என்ற கோபமா...? இந்த நடராஜனுக்கும்தான் நன்றி இல்லை... இருக்கட்டும் அவன் மெடிகல் பில்லில் கை வைத்தால்தான் புரியும்.’

பயங்கலந்த சிந்தனைகளோடு ஓட்டமும் நடையுமாகக் கட்டடத்தை விட்டு வெளியேறி வந்த போது உடம்பு தொப்பமாக வியர்வையில் குளித்திருந்தது. அலுவலகச் சிப்பந்திகள் அங்கங்கே கூடி நிற்க, ஒரு போலீஸ் வேன் வந்து நின்றது. நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு ஒரு நாய் முன்னே செல்ல கட்டடத்திற்குள் போலீஸ் நுழைந்தது.

எனக்கு மூச்சிறைப்பு நின்று சற்று நிதானம் பிறந்தது. சுற்றிலும் நின்றவர்களை முறைத்தேன்... ‘எல்லோரும் இப்படி என்னை அம்போன்னு விட்டுட்டு வந்துட்டீங்களேடா, பாவிங்களா!’

யாரும் என்னைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. அவர்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

‘‘பாம் ஸ்கேர் இத்தனை சாதாரணமாப் போச்சு!’’

‘‘அதுக்குன்னு அசால்டா இருந்துட முடியுமா சொல்லுங்க.’’

‘‘நம்ப ஆபீஸ் என்ன சார் அத்தனை இம்பார்டண்டா?’’

- வெட்டி அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர். ‘எது எக்கேடு கெட்டால் என்ன, நான் மூணே காலுக்குச் சீட்டு கம்பெனிக்குப் போயாக வேண்டும்...’ நினைத்துக் கொண்டிருந்த போது எங்கிருந்தோ எலிசபெத் வந்தாள். அவள் அரை நாள் லீவ் கேட்டு அதை நான் மறுத்திருந்தேன். திமிர் பிடித்தவள். சிவில் சப்ளைஸ் புருஷனிடம் என் பெண்ணுக்கு



ரேஷன் கார்ட் வாங்க ஒரு சிபாரிசு செய்ய வில்லை!

''என்ன சார், இப்ப திருப்தியா...? அரை நாள் லீவ் கொடுக்க மாட்டேன்னு சொல்லிட்டீங்க... ஆண்டவனா பார்த்து இப்படி வெடிகுண்டு புரளி எழுப்பியிருக்கார்னு பார்த்தா, இப்ப யாரையும் வெளியே விட மாட்டாங்களாம்'' - ஆத்திரமாகக் கத்தினான்.

அடடா... நாமும் வெளியே போக முடியாதோ...? குழப்பிக் கொண்டிருந்த போது குப்புசாமி எதிர்ப்பட்டார்.

''ஏன் சார், இப்படிப் பழிவாங்கிட்டீங்களே...! நானும் நாலு நாளா என் ஜி.பி.எப் லோனுக்காக அலையறேன். இன்னிக்குக் கையெழுத்து போடறேன்னு சொன்னீங்க... இப்ப இப்படி ஆயிடுச்சு... இனிமே 'பே'பில் அது இதுன்னு வந்துடும்... லோன் பணத்தை நம்பி கிரஹப்பிரவேசம் வைச்சுட்டேன்.'' குப்புசாமியின் அங்கலாய்ப்பு எனக்கு ஆத்திரமூட்டியது.

இங்கே நின்று கொண்டிருந்தால் மனுஷன் அழுதே அறுத்து விடுவான் என்று நகர்ந்தேன்.

''நல்லவேளை பர்மிஷன் போடலாம்னு நினைச்சேன். எவனோ புரளி கிளப்பி விட்டுட்டான்... இப்படியே கம்பி நீட்டிட வேண்டியதுதான்'' மாசிலாமணி ரங்கநாதனிடம் குஷியாகப் பேசிக் கொண்டிருந்தான்.

மர நிழலில் ஜானகிராமன் தனியாக நின்று கொண்டிருந்தார். உலக விஷயம் அதிகம் தெரிந்தவர். ஏதாவது உருப்படியாகப் பேசுவார் என்று அருகே சென்றேன்.

''என்ன ஜானகிராமன்... நம்ப ஆபீஸிலே போய் இப்படி...?'' என்று இழுத்தேன்.

''அது கெடக்கு விடுங்க... நாளை டெண்டருக்கு ரேட்டையெல்லாம் குறிச்சி டேபிள் டிராயரிலேயே வைச்சிட்டு வந்துட்டேன். சரியா நாலு மணிக்கு முதலியார் வரேன்னு சொல்லியிருக்கார். ரேட்டைக் கையிலே கொடுத்தாதான் ஐம்பதோ நூறோ அவர்கிட்டே தேறும்... இப்ப எல்லாம் போச்சு!''

- ஜானகிராமனின் வார்த்தைகள் என்னைச் சங்கடப்படுத்தின. அப்போதுதான் கவனித்தேன். மரத்தடியில் டெஸ்பாட்ச் கிளார்க் சீனிவாசன் உட்கார்ந்து எதையோ எழுதிக் கொண்டிருந்தார். ரிடையர்மெண்டுக்கு இன்னும் அவருக்கு ஒரு வருடம் தான் இருந்தது. சரி ஏதோ பர்சனல் கடிதம் எழுதுகிறார் என்று முதலில் நினைத்தேன். பிறகுதான் அவர் கையிலிருந்த கத்தையான காக்கி கவர்களைக் கவனித்தேன். தன் சட்டைப் பையிலிருந்து சர்வீஸ் ஸ்டாம்ப்களை எடுத்துக் கவர்களில் ஒட்டிக் கொண்டிருந்தவர் என்னைப் பார்த்து விட்டு எழுந்து கொண்டார்.

''ஸார்... ஸார்... நல்லவேளை இன்னிக்கு டெஸ்ட்பாட்ச் ஆக வேண்டிய தபாலை எல்லாம் கவர்ல போட்டு வைச்சிருந்தேன். ஓடி வரும்போது எடுத்துட்டு வந்துட்டேன். இப்ப பக்கத்து ஆபீஸிலே சொல்லி சர்வீஸ் ஸ்டாம்ப் கடன் வாங்கி எல்லாத்துக்கும் ஒட்டிட்டேன். நாலு மணிக்குக் கட்டு எடுக்கறத்துக்குள்ளே போஸ்ட் பண்ணிடலாம்.'' அழுக்கு கைக்குட்டையால் முகத்தின் வியர்வையைத் துடைத்துக் கொண்டு பேசிய அந்த முதியவரை எதிர்நோக்க எனக்குக் கூசியது.

'இந்தக் கிழவருக்கு மட்டும் ஜி.பி.எப். லோன், சர்வீஸ் ரிஜிஸ்டர், ஓசி பர்மிஷன் என்று எந்த சொந்த பிரச்னையும் கிடையாதோ... இந்தத் தள்ளாத வயதில் ஆபீஸின் இந்த நிலையில் இவர் டெஸ்ட்பாட்ச்சைப் பற்றி யார் கவலைப்பட்டு என்ன கேட்டு விடப் போகிறார்கள்...?' சீனிவாசன் யோசிக்க வைத்தார்.

சோதனை முடிந்து, வெறும் புரளி என்று ஊர்ஜிதம் செய்யப்பட்டு எல்லோரையும் திரும்பவும் உள்ளே வரச் சொன்னார்கள். அறையுள் வந்து அமர்ந்தவுடன் இண்டர்காம் அழைத்தது.

''ஃபைல் என்ன ஆச்சு?''

''சார் இந்த 'பாம் ஸ்கேர்'னால கொஞ்சம் டிலே ஆயிடுச்சு... இதோ அனுப்பிச்சிடறேன்.''

''தனியா பாம்னு ஒண்ணு வைக்கணுமாய்யா... உங்களைப் போல நாலு பேர் இருந்தா பத்தாதா... நாடே வெடிக்க செதற...!''

எதிர்முனையிலிருந்து கோபமாக ஒரு 'ஸ்கட்' விடப்பட்டது. எனக்கு எரிச்சல் ஏற்படவில்லை. சீனிவாசன்தான் என்னுள் எதையோ வெடிவைத்துத் தகர்த்திருந்தாரே!

"எனக்கு மட்டுமா, எல்லாருக்கும் தான் ஆளுக்கு இரண்டு பதவி இருக்குன்னு தலைவர் அறிக்கை விட்டிருக்காரே... படிச்சியா?"

"அதையேன் கேட்கறே, சிவலோக பதவியையும் சேர்த்துச் சொல்றாருப்பா!"

- பி.ஜி.பி. இசக்கி





நில்,

கவனி,

வெற்றி கொள்!

கனவுகாணுங்கள்! உறக்கத்தில் மட்டும் என்பதில்லை; உட்கார்ந்த படியே கனவுகாணுங்கள். பகல் கனவு என்று விவரம் புரியாதவர்களின் கேலிப் பேச்சை ஓரம் தள்ளுங்கள். உங்கள் வெற்றியின் ரிஷி மூலம் நீங்கள் காணும் கனவில்தான் இருக்கிறது.

கனவு காண்பது எப்படி? ரொம்ப கலபம்! உங்களின் லட்சியம் என்ன? அதை முதலில் தேர்ந்து, தெளியுங்கள்!

உதாரணத்துக்கு, உங்கள் லட்சியம் ஒரு எழுத்தாளராக ஆவது என்று வைத்துக் கொள்ளுங்கள்! மனத்திற்குள் ஒருமுறை உரக்கக் கூவுங்கள்! 'நான் ஒரு எழுத்தாளன்!'

நல்லது. இனி கனவுகாணலாம். இரவு, பகல் பாராமல் எழுதிக் குவிப்பதில் தொடங்கி ஒரு பத்திரிகையில் உங்களுடைய எழுத்து முதன் முதலில் பிரசுரமாவது; அந்த நேரத்தில் உங்கள் மகிழ்ச்சி; அந்த உற்சாகத்தில் மேலும் சிறுகதை, குறுநாவல் என்று பலவும் எழுத, ஒரு பிரபல பத்திரிகை உங்களிடம் தொடர்கதை கேட்டு டெலிபோன் பண்ணுகிறது! மேலும் எழுதுகிறீர்கள். சாகித்ய அகடமி விருது கிடைக்கிறது. ஞான பீடம் கிடைக்கிறது. பல மொழிகளில் மொழி பெயர்க்கிறார்கள். உலகளாவிய புகழ். நோபல் பரிசு....!

சிரிக்க வேண்டாம்! காசா பணமா? கனவு காணுங்கள்! திரும்பத் திரும்ப நீங்கள் காணும் உக்கிரமான கனவுகளே உங்களைப்

"இமயத்தின் வெற்றி பொதிகைக்கும் உண்டு!"





எதனாலே?

• வண்ணத்துப் பூச்சி, பூக்களில் உள்ள தேனை மட்டும் உறிஞ்சுகிறது; தேன் கூடுகளிலுள்ள தேனை உறிஞ்சுவதில்லையே! ஏன்?

பட்டை நீட்டுகின்றன. உங்கள் கனவில் நீங்கள் எவரெஸ்டைத் தொட்டால் நிஜவாழ்வில் நிச்சயம் பறங்கிமலையாவது ஏறலாம்!

'பரங்கிமலை ஏறி என்ன பிரயோஜனம்?' என்று நினைக்க வேண்டாம்! ஏறிப் பாருங்கள்; சிரமம் தெரியும். அதுவே வெற்றிதான் என்பது புரியும்.

வெற்றி என்பது முதலிடத்தில் மட்டுமே இல்லை என்பது தெளிவாகும்.

நோபல் பரிசு பெற்றவர் மட்டுமே எழுத்தாளரா என்ன?

ஒரு வாழ்க்கை உதாரணம் பார்ப்போம்.

நீங்கள் டென்னிஸ்ஸில் விருப்பமுடையவரானால் பேணுஷ் வேணு கோபால் என்கிற இளைஞன் பற்றி நிச்சயம் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

மிகச்சிறிய வயதிலேயே (7 அல்லது 6) விளையாட்டாக விளையாட ஆரம்பித்தவன், தனது பதினைந்தாம் வயதில் தேசிய அளவில் (ஜூனியர்) மூன்றாவது ஆட்டக்காரனானான். அவன் போன இடமெல்லாம் 'வெற்றி' அவன் பின்னால் கைகட்டி ஓடி வந்தது!

தன்னுடைய வெற்றிக்காகச் சந்தோஷப்படக் கூடத் தெரியவில்லை அவனுக்கு!

''என்னமோ தமாஷா ஆடினேன்; ஜெயிச்சுட்டேன்னு சொன்னாங்க. கப்பு குடுத்தாங்க. சரின்னு வாங்கிட்டு வந்துட்டேன்!''

- இது அப்போதைய சிறுவன் பேணுஷின் ஸ்டேட்மெண்ட்.

இப்போது?

''அப்பொழுதெல்லாம் விளையாட்டை விளையாட்டுத் தனமாகத்தான் எடுத்துக் கொண்டேன். என் கேம் பற்றியோ, எதிராளி கேம் பற்றியோ எவ்வித கருத்தோ, தெளிவோ அப்போது எனக்கில்லை. ஒரு சிறுவனுக்கே உரிய பொறுப்பின்மையுடன் தான் ஆடினேன். ஆனால் இப்போது என் நிலை எனக்குப் புரிகிறது. என் பொறுப்பு தெரிகிறது. ஒரு நாளைக்குக் குறைந்தது ஆறுமணி நேரம் உழைக்க வேண்டியதன் அவசியம் தெரிகிறது.

''பொறுப்போடு செய்கிறேன். அகில இந்திய அளவில் இப்போது கிட்டத்தட்ட இருபதாவது இடம்!'' - பெருமையாகச் சொல்கிறார் பேணுஷ்.

இதில் என்ன பெருமை இருக்கிறது? மூன்றாவது இடத்திலிருந்து இருபதாவதிற்குப் போவது சரிவல்லவா?

''இல்லை. நிச்சயமாக இல்லை. அன்றைய என் ஆட்டம் வேறு. போட்டியாளர்கள் வேறு. ஜூனியர் ஆட்டம் அது. இப்போது களத்தில் ரமேஷ் கிருஷ்ணன், கே.ஜி. ரமேஷ், ஸ்ரீநாத் என்று எத்தனையோ பேர் போட்டிக்கு இருக்கிறார்கள். அத்தனை பேரும் திறமைசாலிகள். உடனே இந்தியாவின் 'நம்பர் ஒன்' ஆக நான் எப்படி வந்து விட முடியும்? அதற்கான உழைப்பு எத்தகையது தெரியுமா? படிப்படியாகத்தானே மேலே ஏற வேண்டும்? நிச்சயமாக ஒரு நாள் ஏறுவேன். அதற்கான ஆயத்தங்களில் தான் இப்போது நான் இருக்கிறேன்.

''அவர்களையெல்லாம் ஜெயிப்பது என்றால் அது மகத்தான வெற்றிதான்! ஆனால் அவர்களோடு போட்டியிட்டு விளையாட வாய்ப்பு கிடைப்பதே ஒரு வெற்றி அல்லவா?''

நினைத்துப் பாருங்கள். பேணுஷ் 60 வயதுக் கிழவன் அல்ல! 20 வயது இளைஞன்! எத்தனை தீர்க்கமான சிந்தனை!

முதலிடம் பெறும் ஆசை அவனுக்கும் இல்லாமல் இல்லை. ஆனால், 'முயற்சி மட்டும்தான் நம்மால் ஆனது' என்கிற தெளிவு இருக்கிறது அவனிடம்.

நீங்கள் கேட்கலாம்.

''ஏன்?' இருபது வயது கூட நிரம்பாத லியாண்டர் பயஸ் முன்னணிக்கு வரவில்லையா?''

பேணுஷ் சொல்கிறார் : ''லியாண்டரின் ஆட்டம், ஒரு சாமான்னிய மனிதனால் முடிகிற காரியமில்லை. அவரது வேகம் தெய்வ அருள் என்றுதான் சொல்ல வேண்டும்!''

கவனியுங்கள். சக விளையாட்டுக்காரனை, தனக்குப் பின் வந்து, முந்திக் கொண்டவனைப் பார்த்து இந்த இளைஞர் பொறாமைப்படவில்லை. அவரது அசாத்ய பலத்தைப் பார்த்து வியக்கிறார். அத்தகு வேகத்தைத் தானும் பெறுவதற்கு முயற்சி செய்கிறார்.

இதைத் தோல்வி என்பதா?

தேர்வுகளில் 60% எடுத்தாலும் முதல் வகுப்புதான்; 100% எடுத்தாலும் முதல் வகுப்புதான்.

உங்கள் கனவு 100% ஆக இருக்கட்டும். உங்கள் முயற்சி 60% ல் தொடங்கட்டும்!

ஞாபகமிருக்கட்டும்! வெற்றி - நீங்கள் அடைவதில் இல்லை. அதற்காக நீங்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சியில்தான் இருக்கிறது!

- வெ. ஸ்ரீதர்

படம் : கோபிநாத்

அடுத்த வாரம் : ஒரு பிரபல நடிகரின் போராட்டக் கதை

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி-1993



முதல் பரிசு ரூ. 1,500

இரண்டாவது பரிசு ரூ. 1,000

மூன்றாவது பரிசு (இரு கதைகளுக்குத் தலா ரூ. 500 வீதம்) ரூ 1,000

ஆக மொத்தம் ரூ. 3,500 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர பிரசுரத்துக்கு, ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 125 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

- கதைகள் சொந்தக் கற்பனை என்றும், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் பிரசுரமானதில்லை என்றும் உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் என்றும் உறுதிமொழி தர வேண்டும்.
- நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

கதைகளை அனுப்ப வேண்டிய கடைசித் தேதி : ஜூன் 15.

- உறையின் மேல் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய அளவு தபால்தலை ஒட்டிய சுயவிலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் ஆகஸ்டு 1 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.
- எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

- ஆசிரியர், கல்கி, 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.



சுயமதிப்பீட்டைத் தூண்டிய மலர்!

இன்றைய சமூகச் சூழலைச் சற்று கூர்ந்து நோக்கினால் நமக்குத் தெரிவது அரசியல் கட்சிகளின் ஆட்சி மாற்றத்தினால் விசேஷமாக எதுவும் நிகழ்ந்து விடுவ இல்லை என்பதுதான்! வாழ்க்கைத் தரத்திலாகட்டும், பொருளாதார முன்னேற் றத்திலாகட்டும்... கல்கி தொழில் மலர் '93 யின் பல கட்டுரைகள் இதனை எதி ரொலித்தன.

மலரில், உணவு எண்ணெய் உற்பத்தி பகுதி, அத்தொழிலின் நுணுக்கங்கள் குறித்தும், விற்பனை முறை பற்றியும் தொழிலில் உள்ள போட்டிகள் குறித்தும் வெளிப்படையாகப் பேசியிருந்தது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது.

சமூக - பொருளாதார உறவுகளின் அடித்தளமாக விளங்கும் நிதி நிறுவனங்கள் பகுதியில், நலநிதி நிறுவனங்கள் குறித்த விளக்கம் அவசியமான ஒன்று.

'நிதி நிறுவனங்களை எடை போடுவது எப்படி' எனும் பேட்டிக் கட்டுரையில் சுந்தரம் பைனான்ஸ் நிர்வாக இயக்குனர் ராமபத்திரன், தனியார் நிதி நிறுவ னங்களுக்கும் அரசு வங்கிகளுக்குமிடையே உள்ள வித்தியாசத்தினை மிகவும் தெளிவாக்கியுள்ளார்.

ஒளிச்சாதனங்கள் பகுதியில் 'சட்டை மாட்டி விடும் ஸ்ரீராம்' பேட்டி சுவை யாக இருந்தது. யதார்த்தம் பற்றி நிறையப் பேசியுள்ளார். எனினும் எந்தத் திரைப்படம் யதார்த்தமாக உள்ளது எதில் யதார்த்தம் மீறி விடுகிறது என்பதல்ல முக்கியம். எத்தனை இரசிகர்களின் மனத்தை அது பாதிக்கிறது என்பதைப் பொறுத்தே எந்த ஒரு திரைப்படத்தினுடைய வெற்றி தோல்வியும் நிர்ணயிக்கப் படுகிறது. - இதை ஸ்ரீராம் உணர்ந்திருப்பார் என்றே நம்புகிறேன்.

மருந்துகள் உற்பத்திப் பகுதி பி.பார்ம் படிப்பு பற்றிய சில அரிய விஷயங் களும் பேக்கிங் (packing) முறைகள் குறித்தும் நன்கறிய உதவியது. ஹோமியோபதி மருந்துகள் குறித்தும், அதன் சிறப்புகள் குறித்தும் கூறாமலிருந்தது சிறு குறை.

மனித வள மேம்பாடு மிகவும் குறிப்பிட வேண்டிய பகுதி. தொழிலாளர் மனவியலுக்கேற்ப ஊக்கப் படுத்துதல் அமைய வேண்டியதன் அவசியத்தையும், தொழில் ஆர்வத்தின் ஊக்கிகளாக மனித வள மேம்பாடு பிரிவுகள் செயல் பட வேண்டியதன் அவசியத்தையும் கட்டுரைகள் வெளிப்படுத்தின.

'தொழிற் பண்பை உயர்த்துவோம்' எனும் வழக்கறிஞர் டோலியாவின் பேட்டி குறித்து :

'தொழிற் சங்கங்கள் மூலமாகத்தான் மன மாற்றமும் சிந்தனை மேம்பாடும் புகட்ட முடியும்' என்று அவர் சொல்வதை என்னால் ஏற்க முடியவில்லை.

அதனைத் தங்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கின்ற ஓர் அமைப் பாகத்தான் கருதுகிறார்களே தவிர மனமாற்றத்திலோ சிந்தனை மேம்பாட்டிலோ ஈடுபாடு காட்டுவதில்லை. பெரும்பாலும் தொழிற் சங்கங்களின் நிலையும் அப்படியே.

'லஷ்மி தொழிற் குடும்ப'த்தின் வரலாறு பிரமிக்க வைக்கிறது. முயற்சியும் கடின உழைப்பும் இல்லையெனில் எவ்வளவு பணம் வைத்திருந்தும் எதுவும் சாத்தியமில்லை என்பது புலனாகிறது.

மோட்டார் வாகன உறுப்புகள் பகுதியில் - 'வாகன ஓட்டிகளை வதைக்கும் பிரச்னைகள்' எனும் கலந்துரையாடல் மேலோட்டமாக அமைந்திருந்தது. இன்னும் சற்று ஆழ்ந்து அலசப் பட்டிருக்கலாம்.

தொழில் மலரில் கவர்ந்த வேறு சில :

அரஸ் அவர்களின் ஓவியங்கள் மற்றும் ஆங்காங்கே இரசிக்கும்படி அமைந்திருந்த சில சிறு ஓவியங்கள்.

சிறுகதைகளில், குறிப்பிடும்படியானது பாரதி பாலனின் 'உயிர் வதை' - சிறப் பானதொரு கதை.


இறுதியாக,

கோமாளித்தனங்கள் நிறைந்த பத்திரிகையுலகில் தொழில் மலர் போன்ற சிறப்பிதழ் வெளிப்பாடுகளின் தேவை இன்றியமையாதது. நம்மை, நமது சமூ கத்தை - பற்றிய சுய மதிப்பீட்டிற்கு அவசியமானது என்றே சொல்லத் தோன்று கிறது.

மதுராந்தகம், பொன். வாசுதேவன்.

கல்கி தொழில் மலர் '93
- வாசகர் விமர்சனம்!

Batman Returns



வௌவால் மனிதன், பெங்குயின் பறவை மூக்கன். பூனைப் பெண் என்று பயமுறுத்த வசதியான கேரக்டர்கள். ரியலிஸத்தைப் புறங்கையால் ஒதுக்கி வைத்துவிட்டு, பிரும்மாண்டம் பண்ண வேண்டும் என்ற ஒரே நோக்கில் சகட்டு மேனிக்கு மூளையைப் பிராண்டுகிறார்கள்.

திகுர் திடீரென்று பூமியைப் பிளந்து கொண்டு ஒரு குள்ள குண்டன் எழுந்திருக்கிறான். (அன்ன வாகனம்!) முப்பது மாடிக் கட்டடத்தின் மொட்டை மாடியிலிருந்து டைட் குளோஸப்பில் தரையில் விழுந்து சட்னி ஆகிறார்கள். கார்கள் கல்யாண நலங்கு அப்பளமாகின்றன. ரீ - ரெக்கார்டிங்கில் ஹார்ட் பீட் அதிகரிக்கிறது. எடிட்டிங்கில் நெற்றிப் பொட்டு வலிக்கிறது. கரெண்ட் கட் ஆனாற்போல லைட்டிங்.

இனி பேட்மேன். பேட்மேன் யார்? ஸ்பைடர் மேன், ஹி-மேன் மாதிரி பேட்மேன். சாதாரண சந்தர்ப்பங்களில் பேண்ட், ஷர்ட்டில் இருப்பவர், அழிவு சக்தி நோக்கிப் படை எடுக்கும் போது வௌவால் டிரெஸ்ஸுக்கு மாறுகிறார். சொய்ங்.... என்று பறக்கிறார். சண்டை போடுகிறார். மறுபடி பேண்ட், ஷர்ட்டுக்கு மாறுகிறார்.

ரத்தம் உறைய வைக்கும் அசாத்ய கிளைமாக்ஸில் டைரக்டர் தலை உசரத் தெரிகிறது. கேமராவுக்கு திருஷ்டி சுத்திப் போடவேண்டும். இருட்டு வளைவுகளில் ஏகபோக ராஜாங்கம்.

குழந்தைகளை அழைத்துச் செல்ல நினைப்பவர்கள் நின்று யோசிக்கவும். படம் : யூ.ஏ. சர்டிஃபிகேட்!

- ஆர்.பி.ஆர்.

பாண்டியன் மகள்

15. கள்ளழகர் பிரசாதம்

கலைகள் அறுபத்து நான்கு என்று தான் தமிழ் கூறுகிறது. அவையன்றி மனிதர்களைக் கடத்துவதையும், எந்தவித தடயமுமின்றிக் கொலை புரிவதையும் ஒரு கலையாகவே பயின்றிருந்த மார்க்கியன் கருங்கல்லால் செய்த சிலை போல இருந்தான். அதீத உயரமும் உயரத்திற்கேற்ற பருமனுமாக அவன் தோற்றம் ஒரு ராட்சதனைப் போலிருந்தது. ஒரு ஓநாயின் கொடூரமும் தந்திரமும் அவன் முகத்தில் தெரிந்தன. வல்லூறின் கண்களைப் போலிருந்த இரு பழுப்பு விழிகள் எதிரிலிருந்தவர்களை ஊடுருவின. அவன் உருவத்திற்குப் பொருந்தாத அவனது மீசை கீழ்நோக்கி நீண்டு அவன் முகத்திலிருந்த கொடூரத்தை அதிகப்படுத்திக் காட்டியது.

ஊரை விட்டுத் தள்ளிச் சிறு தோப்பின் நடுவே அமைக்கப்பட்டிருந்த சேரர் படைத் தலைவனது மாளிகையில் ஈழத்துத் தண்ட நாயகனை வரவேற்க மார்த்தாண்டனும் மாறவர்மனும் காத்துக் கிடந்தனர்.

''இவன்தான் மார்க்கியன். எனது வலது கரம் போன்றவன். வாட்போரிலும் மற்போரிலும் இவனை வெல்ல ஈழத்தில் இனிமேல்தான் ஒருவன் பிறக்க வேண்டும்'' என்றான் தண்டநாயகன்.

மார்த்தாண்டனையும் மாறவர்மனையும் வணங்கிய மார்க்கியன் சலனமற்ற கண்களால் அவர்களை ஏறெடுத்து, முதல் கேள்வியாக, ''யாரைக் கொல்ல வேண்டும்?'' என்றான்.

''பாண்டியன் மகள்!'' — மாறவர்மனின் பதில் உடனே வந்தது.

''ஒரு பெண்ணையா?'' மார்க்கியன் கேள்வியில் அகவாரசியம் தொனித்தது.

மார்த்தாண்டன் பதிலளித்தான் : ''அவள் சாதாரணப் பெண்ணல்ல. அவளைப் பாதுகாப்பவர்களும் சாதாரணமானவர்கள் அல்ல.''


வாயிலில் நின்ற வீரனை அழைத்த மாறவர்மன், ''போய் மாடத்தேவனை அழைத்து வா'' என்று உத்தரவிட்டான்.

இரண்டாவது நிமிடத்தில் உள்ளே நுழைந்து வணங்கிய மாறவர்மனின் மெய்க்காவலன் மாடத்தேவன் சிறு குன்று போலிருந்தான்.

''மாடத்தேவா, பாண்டிய இளவரசி பற்றிய விவரங்களைக் கூறு'' — உத்தரவிட்டான் மாறவர்மன்.

''எங்கிருந்து அவளைக் கண்டுபிடித்து மீட்டார்கள் என்பது தெரியவில்லை பிரபு. காஞ்சியில் கவிநாராயண பட்டரின் பாதுகாவலில் இருந்தவள் தற்போது விக்கிரமன் காவலில் உறையூரில் இருக்கிறாள்.''





''யார், சோழ இளவரசன் விக்கிரமனா?'' என்ற மார்க்கீயன், —''அவன் உறையூரை விட்டு வேறெங்கும் செல்வதில்லையா?'' என்றான்.

''நேற்று வரை எங்கும் செல்லவில்லை. ஆனால் இன்னும் சில தினங்களில் மதுரைக்குச் செல்வதாக இப்போது தான் உளவுச் செய்தி வந்தது.''

மார்க்கீயன் முகத்தில் மகிழ்ச்சி தெரிந்தது.

''மதுரையில் எனக்கு நெருங்கியவர்கள் பலர் இருக்கிறார்கள்'' என்றவன், ''உடன் யார் வருகிறார்கள்?'' என்று கேட்டான்.

''விக்கிரமனும் இளவரசி அம்மங்கையும்'' என்றான் மாடத்தேவன்.

சற்று சிந்தித்த மார்க்கீயன், ''எதற்கும் முப்பது வீரர்களை என்னுடன் அனுப்புங்கள். விக்கிரமனுடன் சில வீரர்களும் வரலாம்'' என்றான்.

''நானும் வருகிறேன்'' மாறவர்மன் குரல் ஒலித்தது.

அன்று இரவே மாறவர்மனுடன் மதுரையை நோக்கி விரைந்தான் மார்க்கீயன்.

நான்மாடக் கூடலென்று புகழ்பெற்ற மதுரையம்பதியின் வீதிகளில் இரண்டு தினங்களாகச் சோழ வீரர் நடமாட்டம் அதிகரித்திருந்தது. பாண்டிய ஆபத்துதவிகளையும், ஒற்றர் என்று சந்தேகப்படுபவர்களையும் சந்தடியின்றிச் சிறைச் சாலைக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள் அவர்கள். நிர்வாகமும், வாணிபமும் எவ்விதத் தடையுமின்றி நடந்து கொண்டிருந்தாலும் மதுரை மக்களின் மனத்தில் இன்னும் ஜடாவர்ம பாண்டியனின் நினைவு அழியாமலிருந்தது. என்னதான் சோழ இளவலும் பல்லவராயரும் மதுரை மக்களிடம் அக்கறையும் அன்பும் காட்டினாலும் பாண்டிய நாடு இப்படி ஒளியிழந்து சோழர் ஆக்கிரமிப்பில் வலிவற்று கிடப்பதும், சரியான மன்னனில்லாத குறையும் ஒரு சோர்வை உண்டாக்கியிருந்தன.

பேராயத்தின் தலைவரும் அமைச்சருமான சோமேஸ்வரருக்குத் தன்னிச்சையான அதிகாரங்களை விக்கிரமன் வழங்கியிருந்தாலும் அரியணையில் அமர்ந்து அதிகாரம் செய்ய ஒரு மன்னன் இல்லாத குறை அவருக்கும் பெரிதாகவே தோன்றியது.

ஜடாவர்ம பாண்டியனின் தாயாதிகள் அவனைக் கலகம் செய்து கொன்றபின், மதுரையம்பதியை விக்கிரமனிடமிருந்து மீட்க மீதியுள்ள பாண்டிய மண்டலத்தை ஆண்ட எந்தச் சிற்றரசனுக்கும் துணிவோ வலிவோ இல்லை.

மாறவர்மனும் மார்த்தாண்டனும் கோட்டாற்றில் படை திரட்டுவதும், சோழரை வெல்லத் திட்டமிடுவதும் தெரிந்திருந்தாலும் நேரடியாக அவர்களுக்கு ஆதரவு காட்டி அழைக்கவோ, உதவவோ அஞ்சினார் அவர்.

ஒருவேளை மாறவர்மன் வென்றாலும் அவனை ஏற்பதா, வேண்டாமா என்ற தர்க்கம் வேறு மதுரையில் நிலவியது.

சோமேஸ்வரர் தமது கரத்திலிருந்த ஓலையை மீண்டும் ஒரு முறை படித்தார். பேராயத்தின் தலைவரான அவருக்கு விக்கிரமன் எழுதிய ஓலை அது.

முக்கியமான சில விருந்தினர்களுடன் மதுரைக்குத் தான் வருவதாகவும், போதுமான பாதுகாப்புக்குச் சோழ காவற் படைத் தலைவனைக் கலந்து ஏற்பாடு செய்யுமாறும் உத்தரவு பிறப்பித்தது அது. அதையொட்டி தாம் எடுத்த நடவடிக்கைகள் சரியாக நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்று ஆலோசனை நடத்தினார். தமது பணிகளை முடித்துக் கொண்டு மாலையில் தமது தனி அறைக்குள் நுழைந்தவர் திடுக்கிட்டு நின்றார்.

விஷ்வக்சேனன்



எதனாலே?

○ நம் இரண்டு கண்களால் ஒரே நேரத்தில் வேறு வேறு பொருட்களைக் காண முடிவ தில்லையே, ஏன்?

அறையின் நடுவே ஆசனமொன்றி லமர்ந்து அவரையே பார்த்துக் கொண்டிருந் தான் மாறவர்மன்.

''என்ன அமைச்சரே, திடுக்கிட்டு நிற்கி றீர்?'' என்று கேட்ட மாறவர்மனைக் கண் கொட்டாது பார்த்தார் அமைச்சர்.

அவன் சாய்ந்து ஒருபுறமாக அமர்ந் திருந்த விதத்தையும், வீரனுக்குரிய நேர்ப் பார்வை அவனிடம் இல்லாததையும் கவ னித்தவர், ''இத்தகைய ஒருவன் பாண்டிய அரியணையில் அமருவதை விட, வீரனான விக்கிரமனிடம் சிற்றரசாக மதுரை இருப் பதே மேல்'' என்று எண்ணினார்.

''அமைச்சரே! விக்கிரமன் மதுரைக்கு வருகிறானா?''

''ஆம்.''

''இந்த முறை அவன் மீண்டும் உறையூர் திரும்பப் போவதில்லை.''

''சே! கொலை முயற்சியா? சோழ இள வலைப் போரில் வெல்வதுதான் உங்க ளுக்குப் பெருமை'' என்றார் அமைச்சர்.

''அதிருக்கட்டும் அமைச்சரே, உமக்குத் தெரியாமலிருக்க முடியாது, ஜடாவர்ம னுக்கு ஒரு மகள் இருந்தது உண்மையா?''

அமைச்சர் தாம் திடுக்கிட்டதைப் பெரும் , பிரயாசைப்பட்டு மறைத்தார். ''நான் மன்னர் இறந்த பிறகுதான் இங்கு அமைச்சராகச் சோழரால் அமர்த்தப்பட் டேன்...'' என்று இழுத்தார்.

''உமக்குத் தெரியுமா தெரியாதா, கூறும்!''

''எனக்குத் திட்டவட்டமாகத் தெரி யாது. ஆனால் பாண்டியருக்கு மகள் ஒருத்தி இருந்ததாகவும், கலகத்தில் அவள் காணா மல் மறைந்து விட்டதாகவும் வதந்தி.''

அமைச்சரின் தந்தை ஜடாவர்ம பாண்டி யனது அவையில் இருந்தவர். அமைச்ச ருக்கு, மகாராணியார் பட்டரால் காப் பாற்றப்பட்டது உட்பட பல விஷயங்கள் தெரிந்திருந்தாலும் அவர் அனைத்தையும் தமது ஆழமான மனத்தில் போட்டு மறைத் திருந்தார்.

மாறவர்மனை நம்ப அவர் மனம் இடந் தரவில்லை.

''அமைச்சரே நீர் பல விஷயங்களைக் கூறாமல் மறைக்கிறீர் என்பது புரிகிறது.''

அமைச்சரின் முகத்தில் இலேசாக அச்சம் பரவியது.

''உம்மிடமிருந்து விஷயத்தை எப்படிக் கறப்பது என்பது எனக்குத் தெரியும்'' என்ற மாறவர்மன் எழுந்தான். ''பிறகு உம்மைச் சந்திக்கிறேன்'' என்றவன், சாளரத்தின் வழியே வெளியேறினான்.

இரு கரங்களாலும் தலையைப் பிடித்த படி பஞ்சணையில் விழுந்தார் அமைச்சர். ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என்பது அவர் உள்ளுணர்வுக்குப் புரிந்தது.

மார்க்கியனுடன் மதுரைக்கு வந்து நாட்கள் இரண்டு ஓடி விட்டன. மார்க்கியன் சதா மதுவைக் குடித்தே காலம் தள்ளுவ தையும் எங்கோ சென்று விட்டுத் தாமத மாகவே திரும்பிக் கொண்டிருந்ததையும் கண்டு கொதிப்பேறிப் போயிருந்தான் மாற வர்மன்.

மலையும் வனமுமாக அடர்ந்த அந்த வனத்தில் சற்று உள்ளே சென்றதும் வீரர்கள் நடமாட்டம் காணப்பட்டது. நள்ளிரவு நெருங்கி விட்டதால் ஓரிரு தீப்பந்தங்கள் மட்டுமே எரிந்தன. ஈழத்து வீரர்களும் பாண்டிய வீரர்களும் கலந்த அந்தப் படை கள்ளழகர் ஆலயத்திற்கு வரும் மக்கள் பார்வையில் பட்டு விடாதிருக்க, நன்றாக உள்ளே தள்ளி அடர்ந்த வனப் பகுதியில் சாமர்த்தியமாக மறைந்து உறைந்தது.

கூடாரத்தினுள் மாறவர்மன் ஆசன மொன்றில் அமர்ந்து பெருமூச்சு விடுவதும் வாசல் பக்கம் சென்று மார்க்கியன் வரு கிறானா என்று பார்ப்பதும் திரும்பி வந்து மதுக்குப்பியை எடுத்து ஒரு வாய் சுவைப் பதுமாக இருந்தான். புரவியொன்று வரும் ஒலியைக் கேட்டு மீண்டும் கூடார வாயி லுக்கு வந்தவன், மார்க்கியன் புரவி விட்டு

''இவ்வளவு பெரிய ஆஸ்பத்திரியில தனியா இருக்க எனக்குப் பயமா இருக்கு டாக்டர்... என்னை டிஸ்சார்ஜ் பண்ணிடுங்க...''

''உங்களையும் டிஸ்சார்ஜ் பண்ணிட்டு நான் எப்படி இங்கே தனியா இருப்பேன், சொல் லுங்க?''

- சீர்காழி வி. ரேவதி





''டார்லிங், அதே சுமா நம்ம கல்யாணத்துக்கு எங்க வீட்டுல ரொம்ப எதிர்ப்பு இருக் கும் போல எனக்குத் தோணுது!''

''நிஜமாத்தானே சொல்றீங்க? அப்புறம் சும்மா விளையாட்டுக் குச் சொன்னேன்னு என்னை ஏமாத்திட மாட் டீங்களே?''

- வி. ரெங்கநாதன்

அருள்வாக்கு



உடம்பு, மனசு ஆகியவற்றால் நாம் செய்கிற அத்தனை காரியங்களும் இப்போது நம்முடைய சொந்த ஆசை அபிலாஷைகளையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கின்றன. இதனாலேயே அவை நம்மை மேலும் மேலும் பாபத்திலே கொண்டு போய்த் தள்ளிக் கொண்டிருக்கின்றன. அப்படியானால் இனி காரியமே இல்லாமல் சும்மாயிருந்து விடலாமா என்று பார்த்தால் மநுஷ்ய ஸ்வபாவம் நம்மை அப்படியிருக்க விட மாட்டேன் என்கிறது.

'சித்தத்தை அடக்கியே சும்மாயிருக்கும் திறம் அரிது' என்று தாயுமான ஸ்வாமிகள் சொன்னார். உடம்பின் காரியத்தைக் கொஞ்சம் நிறுத்தினால் கூட சித்தத்தின் காரியம் நிற்க மாட்டேன் என்கிறது. அது, தான் காரியம் செய்வதோடு உடம்பையும் காரியத்தில் ஏவி விடுகிறது.

ஆசையை நேராக நிறுத்த முடியவில்லை; காரியத்தையும் நிறுத்த முடியவில்லை என்றால் நமக்கு கதிமோக்ஷமே இல்லையா? இந்தப் பிரச்னைக்குத் தீர்வே இல்லையா? இருக்கிறது. அதாவது இப்போது நாம் இருக்கிற நிலைமையில் காரியத்தை அடியோடு நிறுத்தி விட வேண்டுமென்பதில்லை. ஆனால் நம் சொந்த ஆசைகளுக்காகவே காரியம் செய்து கொள்கிறோம் என்ற நிலைமையை மாற்றி, நமக்கு லௌகிகமாக லாபம் தராத காரியங்களில் ஈடுபட வேண்டும். லோகோபகாரமாகவும் நமக்கே ஆத்மார்த்தமாகப் பலன் தருவதாகவும் இருக்கப்பட்ட காரியங்களில் இறங்க வேண்டும். இப்படிப்பட்ட காரியங்களில் ருசியை உண்டாக்கிக் கொண்டு மேலும் மேலும் ஈடுபடுகிற போது ஆசைகளும் குறைந்து கொண்டே வருகின்றன; பாபம் குறைகிறது; புண்ணியம் ஏறுகிறது. அதாவது இப்போது நாம் செய்ய வேண்டியது என்னவென்றால் ஆசையில்லாமல் காரியம் செய்யப் பழக வேண்டும். ஆசையில்லாமல் செய்வதுதான் புண்ணிய காரியம்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

இறங்கி, நிதானமாகத் தன்னை நெருங்குவதையும் அவன் வீசிய அலட்சியப் பார்வையையும் கண்டான். மாறவர்மனுக்குச் சூடு ஏறியது.

''எத்தனை நேரம் நான் காத்திருப்பது?'' என்று இரைந்தான்.

அதைச் சட்டை செய்யாமல், மாறவர்மனை இடித்துத் தள்ளாத குறையாக உள்ளே நுழைந்த மார்க்கியன், பதிலேதும் கூறாமல் இருக்கையில் அமர்ந்து நிதானமாக மதுவைச் சுவைக்க ஆரம்பித்தான்.

''நான் கேட்பது உன் காதில் விழவில்லையா?'' மீண்டும் இரைந்தான் மாறவர்மன்.

''நன்றாக விழுகிறது, மாறவர்மரே! நீங்கள் அமைச்சரைக் காணச் சென்றீர்கள். நான் எனது நண்பர்களைக் காணச் சென்றேன். என் வழியில் நான் பாண்டியன் மகளைப் பற்றி விசாரித்து வரச் சற்று தாமதமாகியது'' என்றான் மார்க்கியன்.

''உன் நண்பர்கள் என்ன கூறுகிறார்கள்?''

''நான் அறிந்தவை இருக்கட்டும். அமைச்சர் என்ன கூறுகிறார்?''

''அமைச்சரிடம் விஷயமிருக்கிறது. ஆனால் வெளியிட மறுக்கிறார். நீ அறிந்ததைக் கூறு'' என்றான் மாறவர்மன்.

''இன்னும் இரண்டு நாட்களில் பாண்டியன் மகளும் அம்மங்கையும் விக்கிரமனும் இங்கு வருகிறார்கள்.''

மாறவர்மன் பதற்றத்துடன் எழுந்தான்.

''பதற்றப்படாதீர்கள். உங்கள் பதற்றம் காரியத்தைக் கெடுத்து விடும். நிதானமாகத் திட்டம் வகுக்க என்னை என் போக்கில் விட்டு விடுங்கள்'' என்றான் மார்க்கியன்.

மாறவர்மன் முகத்தில் கொலைவெறி மின்னியது.

''பாண்டியன் மகளுடன் விக்கிரமனையும் சேர்த்து ஒழித்து விட்டால் என்ன?'' என்றான்.

மார்க்கியன் முகத்தில் வெறுப்புத் தட்டியது. ''விக்கிரமன் உண்மையான வீரன். அவனை நேரிடையான போரில்தான் கொல்ல வேண்டும். கோழையைப் போல் மறைந்திருந்து கொல்வது கூடாது.''

மாறவர்மனுக்கு மார்க்கியனின் போக்கு புதிராக இருந்தது.

''மாறவர்மரே, அரசு நடத்துவது மக்களுக்காக. ஆனால் அரசின் தலைமையில் ஏற்

ஆகாயக் கனவுகள்



சந்திரத் தட்டில்
சாப்பிட்டு விட்டு,
விண்மீன் விடிவிளக்கு
வெளிச்சத்தில் -
கார்மேகத்தைக்
கம்பளியாய்ப் போர்த்தி,
ஆகாய மஞ்சத்தில் - நான்
அயர்ந்து தூங்குகிறேன்!
ஏய்! யாரங்கே!
சூரியன் வந்ததும்
சொல்லி அனுப்பு!
பூமிக்கு நான்
புறப்பட வேண்டும்!
நாளை - எனக்கு
இருபத்தி ஐந்தாம்
'இண்டர்வியூ' இருக்கிறது!

- கே. சிவகுமார்

படும் குழப்பம் மக்களையும் பாதிக்கும். அதில் குழப்பம் ஏற்படக் காரணமாக இருப்பவர்களை நீக்குவது என் பணி. பாண்டிய நாட்டைப் பொறுத்தவரையில் ஜடாவர்மன் மகளை நீக்கி விட்டால் உங்களுக்குப் போட்டி ஏற்பட வாய்ப்பில்லை. ஆனால் சோழ இளவலைப் போரில்தான் வெல்ல வேண்டும். சதியிலிறங்கிக் கொல்வது தவறு'' என்றான் மார்க்கியன்.

மார்க்கியன் பேசிய வேதாந்தம் மாறவர்மனுக்குப் புரியவில்லை.

''கவலைப்படாதீர்கள். பாண்டியன் மகளை உயிருடன் உங்களிடம் ஒப்படைத்து விடுகிறேன். இதை முடிக்காமல் தமிழகத்தை விட்டுப் போக மாட்டேன்'' என்று உறுதி கூறினான் மார்க்கியன். மாறவர்மனுக்கு அப்போதைக்கு அதுவே போதுமானதாயிருந்தது.

''ஆயிரமாறுகளும் சுனைகள்
பலவாயிரமும்
ஆயிரம் பூம்பொழிலுமுடை
மாலிருஞ்சோலையதே''

- என்று ஆழ்வார் அனுபவித்துப் பாடிய படி குளிர்ந்த சோலைகளும், மலையும், வனமும் சூழ்ந்திருக்க ஆலயத்துள் ஏகாந்தமாக நின்றிருந்தார் அழகர். ''புருஷேஷு விஷ்ணு'' என்று புருஷர்களிலேயே அழகும் சிறப்பும் உடையவராக வர்ணிக்கப்படும் அந்த அழகர் பெயருக்கு ஏற்றபடி வெகு கம்பீரமான தோற்றத்துடன் தங்கக் கிரீடமும், மாணிக்கக் கற்கள் பதிக்கப் பெற்ற ஆரமும், குறுவாளும், நீண்டதொரு உடைவாளும், வில்லும் அம்பறாத் தூளியுமாய் உலகத்தையே மயக்கவல்ல புன்னகையுடன் நின்றிருந்தார்.

பூரண ஆயுதபாணியாய் நின்ற அழகருக்குச் சேவை செய்யும் துணிவினாலோ என்னவோ, அந்த வனப்பகுதியில், யாருமற்ற தனிமையில், அச்சமற்று அர்த்தஜாமப் பூஜையை நடத்திக் கொண்டிருந்தார் ஆலயத்துப்பட்டர். கிரமமாகப் பூஜையை முடித்தவர், திவ்ய தீர்த்தத்தை எடுத்துச் சிறிது அருந்தி, தலையிலும் தெளித்துக் கொண்டார். பிரசாதக் கூடையை ஒரு இலையைக் கொண்டு மூடி வெளியே வைத்தவர், மீண்டும் ஒருமுறை அழகரை ஏறெடுத்து நோக்கி ஆனந்தப்பட்டவாறே, நிதானமாகக் கதவைச் சாத்திப் பூட்டிக் கொண்டு சன்னிதியை விட்டு வெளியே வந்தார்.

பிரசாதக் கூடையை எடுத்துக் கொண்டு விரைந்து நடக்க முற்பட்டவரைப் பக்கவாட்டிலிருந்து ஒலித்த குரல் ஒன்று தேக்கியது : ''பட்டரே, பிரசாதம் ஏதேனும் இருந்தால் தருகிறீரா?''

அந்த நேரத்தில் அங்கு யாருமிருப்பதென்பது வழக்கமில்லையாதலால், ஆச்சரியத்தால் மலர்ந்த விழிகளுடன் திரும்பிய பட்டரின் பார்வையில், தூணுக்கு அருகில் ஒருவன் நிற்பதும், அவன் உடைகள் புழுதி படிந்தும் கண்கள் பஞ்சடைந்தும் இருப்பதும் புலனாகவே பிரசாதக் கூடையைச் சட்டென்று கீழிறக்கி, அதிலிருந்த புளியோதரையை அவன் முன் இலையுடன் வைத்தார்.

சம்மணமிட்டு அங்கேயே அமர்ந்த அவன், கடகடவென்று பிரசாதத்தை ஒரு பருக்கை விடாமல் உண்டு தீர்த்து விட்டதைக் கண்ட பட்டர், அவன் அகரப் பசியை அனுதாபத்துடன் உணர்ந்தார். பிரசாதத்தை உண்ட கையோடு தீர்த்தத்தையும் ஒரே மூச்சில் அருந்தியவன், எழுந்து நெடுஞ்சாண் கிடையாகச் சன்னிதியையும், பட்டரையும் ஒருங்கே சேர்த்துச் சேவித்தான்.

பட்டரின் கனிவான குரல் அவனை விசாரித்தது : ''யாரப்பா நீ?''

பதில் பணிவுடன் வந்தது : ''பட்டரே, நான் சோழர் படையைச் சேர்ந்தவன். பெயர் ஜெயந்தன்.''

(தொடரும்)



கல்கி

1993
ஏப்ரல் 25
மலர் : 51
இதழ் : 39
ஸ்ரீமுக
சித்திரை 12




தமிழ்த்திரு
நாடுதன்னைப்
பெற்ற தாயென்று
கும்பிடடி பாப்பா.
- பாரதியார்.

காட்டு வீரப்பனும் வீட்டு வீரப்பன்களும்!

சாண் ஏறினால் முழம் சறுக்குகிறது தமிழக போலீஸுக்கு! 'நக்ஸலைட்டுகளை ஒடுக்கி விட்டோம்' என்கிறார்கள்; திடீர் திடீரென்று குண்டுகள் வெடித்துச் சேதம் விளைவிக்கின்றன, பீதி கிளப்புகின்றன! 'விடுதலைப் புலிகளை அடக்கி விட்டோம்' என்கிறார்கள்; ஜெயிலர்கள் கண்களில் மண்ணைத் தூவி விட்டுப் புலிகள் தப்புகிறார்கள், கடலோரப் பகுதிகளில் புலிகள் சார்பான கள்ளக் கடத்தல் கனஜோராகத் தொடர்கிறது! 'வீரப்பனை ஒழித்துக் கட்டுகிறேன் பார்' என்று மார்தட்டிக் கொண்டு புறப்படும் கோபாலகிருஷ்ணன் படுகாயமடைந்து மருத்துவமனையில்; அவர் உடன் சென்ற 22 பேர்களை வீரப்பன் வைத்த கண்ணி வெடி பலி வாங்கி விடுகிறது! மொய்லியுடன் அவசரக் கூட்டம் நடத்தி, வீரப்பனைப் பிடித்துத் தருவோருக்கு வெகுமதி அறிவிக்கிறார் ஜெ; அதே தினத்தில் ஒரு சோதனைச் சாவடியில் காவலர்களைக் கட்டிப் போட்டு விட்டு ஆயுதங்களை அபகரித்துப் போகிறார்கள், வீரப்பனின் ஆட்கள்! இரு மாநிலங்களுக்கு மட்டுமல்ல, நாட்டுக்கே தலைகுனிவு!

எல்லாத் துறைகளிலும் புகுந்து விட்ட பப்ளிசிடி ஆசை, போலீஸ் துறையிலும் பரவி விட்டதுதான் அடிப்படைக் கோளாறு. போலீஸ் துறை பேச்சைக் குறைத்துச் செயலில் இறங்க வேண்டும். சவால் விடுதல், சாதனைகளைப் பறைசாற்றுதல் எல்லாம் இருக்குமானால் மக்களின் எதிர்பார்ப்பும் அதிகமாகும். எதிர்பார்ப்புக்கு ஏற்ப போலீஸ் உயர முடியாத போது மக்களுக்கு ஏற்படும் ஏமாற்றம் போலீஸைப் பலமாகத் தாக்கும். வெட்கமும் வேதனையும் சூழும். மேலும் பப்ளிசிடி, எதிர் தரப்பில்




எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்பதையும் யோசிக்க வேண்டும். 'சவாலா விடுகிறான், சவால்!' என்று வன்மத்தை வளர்ப்பதுடன், இந்த பப்ளிஸிடி மோகமே எதிரிக்கு எந்தவித முயற்சியும் இன்றி உளவறியவும் உதவுகிறது! ஒன்றும் அறியாதது போல் சுமுக்கமாக இருந்து திடீரென்று பாய்வதில்தான் போலீஸ் தரப்பின் வெற்றி தொக்கி நிற்க முடியும்.

கோபாலகிருஷ்ணன் இந்த விஷயத்தில் தவறு செய்தார். இப்போது மருத்துவமனையில் இருந்தாலும் 'குணமடைந்து மறுபடி பாய்வேன்; வீரப்பனைப் பிடிப்பேன்' என்று சூளுரைக்கும் அவரது வீரத்துக்கு நாம் தலைவணங்குகிறோம்; ஆனால் கையில் ஸ்டென்கன்னுடன் ஜீப் எதிரே நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டு, 'வீரப்பனைப் பிடிக்கக் கிளம்புகிறேன்' என்று முரசறைந்ததிலும் அது பத்திரிகைகளில் பிரசுரமாக ஆர்வம் காட்டியதிலும் நாம் புத்திசாலித்தனத்தைக் காண முடியவில்லை. இந்தப் போக்கு எதிரியின் உள்ளத்தில் எந்தவித குரோதத்தை வளர்க்கும் என்பதை கோபாலகிருஷ்ணன் உணராவிட்டாலும் போலீஸ் உயர் அதிகாரிகள் உணர்ந்து அறிந்து, அவரை ஓசைப்படாமல் ஓரம் கட்டி, வேறு ஒருவரை அமைதியாகப் படைத் தலைமைதாங்க அனுப்பியிருக்க வேண்டும். போலீஸ் துறைக்கு வீரம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவுக்கு உளவும் முக்கியம். உளவு இலாகாவை முடுக்கி விடாமல் வீரம் காட்டுவது விவேகமாகாது.

இப்போது கூட, ''ராணுவம் தேவையில்லை; போலீஸே போதும்; வீரப்பனைப் பிடிப்போம்'' என்று சினிமா பாணியில் சபதம் செய்கிறார் ஜெ. கர்நாடகா - தமிழக போலீஸ் கூட்டு முயற்சியில் வீரப்பன் பிடிபட்டால் நமக்கு மகிழ்ச்சிதான். இரு மாநிலங்களையும் சேர்ந்த எத்தனையோ உயர் போலீஸ் அதிகாரிகளையும் காவலர்களையும் பலிவாங்கியுள்ள வீரப்பனைப் பழிக்குப் பழி வாங்கியதாக ஆகும். ஆனால் அவசியமானால் ராணுவத்தை அழைக்கவும் இரு முதல்வர்களும் தயங்கக் கூடாது. இதில் வறட்டு ஜம்பம் முக்கியமல்ல; யதார்த்தப் போக்குத்தான் அறிவுடைமையாகும்.

வீரப்பனைப் பிடித்தால் மட்டும் போதாது. அவனது லஞ்ச லாவண்யங்களுக்குக் கட்டுப்பட்டு அவனுக்கு உதவி வந்துள்ள அதிகாரிகளையும் அரசியல்வாதிகளையும் அம்பலத்துக்குக் கொண்டு வர வேண்டும். மொய்லிக்கும் ஜெயலலிதாவுக்கும் அந்த நெஞ்சுறுதி இருக்குமா? இது மக்கள் விடுக்கும் சவால்!



நவரஸ நினைவுகள் - 14

பி.எஸ். ரங்கா தம்முடன் எடுத்து வந்த பார்சலைப் பிரிக்கச் சொன்னார். அதற்குள் இருந்தது என் தந்தையின் மார்பளவுச் சிலை! மிகத் தத்ரூபமாய் வடிவமைக்கப்பட்டிருந்த அதைப் பார்த்து பிரமித்துப் போய் விட்டேன். ஆழமும், கனிவும் கலந்த என் தந்தையின் பார்வையை அப்படியே வடித்திருந்தார் சிற்பி மணி நாகப்பா.

அந்த வெளிர் மஞ்சள் நிறச் சிலையை நெகிழ்ந்து போய் பார்த்துக் கொண்டே நின்றேன். பின்னர், ''உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியல்லை சார்...!'' என்று பி.எஸ். ரங்காவிடம் தழுதழுத்த குரலில் சொன்னேன்.

''உங்கள் தந்தை மீது நீங்கள் எத்தனை மதிப்பு வைத்துள்ளீர்கள் என்பது ஒரு பக்கம் இருக்க, அவர் எத்தனை உயர்ந்த மனிதர் என்பதையும் நீங்கள் சொன்னவற்றிலிருந்து உணர்ந்தேன். அதனால்தான் இந்தச் சிலையைச் செய்யச் சொல்லி ஆர்டர் கொடுத்தேன்'' என்றார் ரங்கா.

மணி நாகப்பாவுக்கும் உடனடியாக என் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்தேன்.

இப்போதும் அதைப் பொக்கிஷமாகப் போற்றுகிறேன். என் துக்கங்களையும் சந்தோஷங்களையும் அந்தச் சிலையின் முன்பு நின்று பகிர்ந்து கொள்கிறேன். குறிப்பாக, வருத்தங்களும் கவலைகளும் குறைந்து மனம் இலேசாவதற்கு அந்தச் சிலை எனக்குப் பலமுறை உதவியிருக்கிறது.

அப்பாவின் ஊக்கத்தால் அம்மா படித்தது போல் என் தங்கையும் நானும் கூடப் படித்தோம். முறையாகப் பள்ளி செல்லாவிட்டாலும் நாங்கள் மெட்ரிகுலேஷன் பரீட்சை எழுத வேண்டும் என்பது அவருடைய ஆசை. அப்போது அப்பா அஸ்ஸாம் மாநிலத்தில் இருந்தார். கௌஹாத்தி பல்கலைக் கழகத்தில்தான் கிருஷ்ணகுமாரியும் நானும் மெட்ரிக் பரீட்சை எழுதித் தேறினோம்.

இரண்டு பேருக்கும் தனித்தனியாகப் புத்தகங்கள் வாங்கித் தரக் குடும்பச் சூழ்நிலை இடம் தரவில்லை. எனவே ஒரே செட் புத்தகத்திலிருந்து இருவரும் படித்தோம். ஏறத்தாழ ஒரே வயது என்பதால் புத்தகங்களைப் பகிர்ந்து கொள்வது குறித்து எங்களுக்குள் அடிக்கடி தகராறு வரும்.

'நீதானே பெரியவள் - அதனால் நீ விட்டுக் கொடுத்து விடு' என்று அப்பாவும் அம்மாவும் சொல்வார்கள். ''எப்போதும் நானே விட்டுக் கொடுக்க வேண்டுமா...?'' என்று வாதாடுவேன்.

கொஞ்சம் நாட்கள் கழித்து நானே ஒரு திட்டத்தை வகுத்தேன். கிருஷ்ணகுமாரியிடம் ''நீ முதலில் படி'' என்று சொல்லிப் புத்தகங்களைக் கொடுத்து விட்டேன். அவள் தூங்கிய பிறகு, இரவு கண் விழித்து, நான் பாடங்களைப் படித்தேன்.


பரீட்சை ரிசல்ட் வெளியான போது நான் என் முதல் குழந்தைக்குத் தாயாகியிருந்தேன். முதல் வகுப்பில் நான் பாஸ் செய்த செய்தி எனக்கு அளவில்லாத மகிழ்ச்சியைத் தந்தது.

அஸ்ஸாமை நான் மறக்க முடியாமல் செய்த இன்னொரு சம்பவமும் இருக்கிறது: திருமணம் ஆன புதிதில் என் கணவரும் நானும் அப்பா அம்மாவைப் பார்க்க அஸ்ஸாம் சென்றோம். எங்கள் குடும்ப நண்பர்களும், உறவினர்களும் என் கல்யாணத்துக்குப் பல வெள்ளிப் பாத்திரங்களைப் பரிசாகக் கொடுத்திருந்தார்கள். அந்தப் பாத்திரங்களையும் வேறு சில விலையுயர்ந்த பொருட்களையும் எங்களுடனேயே எடுத்துச் செல்லத் தீர்மானித்தோம்.

பெட்டி நிறைய சாமான்களுடன் நாங்கள் வந்ததைப் பார்த்த அப்பா, எங்களை எச்சரித்தார். கிழக்கு பாகிஸ்தான் எல்லையில் பார்வதிபூர் என்ற ஊரில் திருட்டு பயம் அதிகம் என்றார். அதன் வழியே செல்லும் ரயில்களில் உள்ள பயணிகளின் பெட்டிகளிலிருந்து பொருட்களைத் திருடிக் கொண்டு அவற்றுக்குப் பதில் கற்களை வைத்து விடுவார்களாம்.

'நல்ல காலமாக எங்களுக்கு அத்தகைய அனுபவம் ஏதும் நேரவில்லை...' என்று நினைத்துக் கொண்டோம்.

கட்டியம் கூறிய கண்கள்!



● பார்த்தால் பசி தீரும்

ஆனால் நாங்கள் அவ்வளவு சீக்கிரம் சந்தோஷப்பட்டிருக்கக் கூடாதோ என எண்ணும்படி, சென்னை திரும்பும் வழியில் எல்லா விலையுயர்ந்த சாமான்களையும் இழந்தோம். அவை திருட்டுப் போனதே வீடு திரும்பி பெட்டியின் பூட்டைத் திறந்த போதுதான் எங்களுக்குத் தெரியும். பெட்டி முழுக்க கற்கள்! என் கணவருக்கு வேலையில்லாத நிலைமையில், என் முதல் பிரசவச் செலவுக்கு, அந்த விலையுயர்ந்த பொருட்களை விற்றுச் சமாளிப்பது என்று திட்டமிட்டிருந்த எனக்கு இந்தத் திருட்டு ஒரு பேரிடி! என் தாய் மாமனும், அவருடைய மனைவியும்தான் ஆபத்பாந்தவர்களாய் இருந்து என் பிரசவத்தின் போது உதவினார்கள்.

என் குழந்தைகளுக்காகத்தான் நான் நடிப்புத் தொழிலை மேற்கொண்டேன் என்றாலும், எனது வேலை நேரத்தில், அவர்கள் வீட்டில் என்ன செய்கிறார்களோ என்ற எண்ணம் என் அடிமனத்தில் இருந்து கொண்டேயிருக்கும். இதன் காரணமாகத் தானோ என்னவோ, குழந்தை நட்சத்திரங்களிடம் எனக்குச் சட்டென்று ஆழமான ஈடுபாடு வந்து விடும்.

தனது துறுதுறுப்பால் என்னை வியக்க வைத்த ஒரு குழந்தை நட்சத்திரம் கமல் ஹாசன். 'பார்த்தால் பசி தீரும்' படத்தில் கமல் எனக்கு மகன். அந்தச் சிறுவனின் அகன்ற கண்களின் ஜொலிப்பும் கட்டித்தனமான நடிப்பும் அவனது எதிர்காலத்துக்குக் கட்டியம் கூறின.

ஒரு சமயம் எம்.எம்.ஏ. சின்னப்பா தேவர், தமது 'துணைவன்' படத்தில் பால முருகன் வேடத்தில் நடிக்க ஒரு குழந்தை நட்சத்திரத்தைத் தேடுவதாகச் சொன்னார். நானும் அப்படியொரு குழந்தை அகப்பட்டால் சொல்கிறேன் என்றேன்.

ஒரு நாள் வாஹினி ஸ்டுடியோவில் நான் ஷூட்டிங்கில் இருந்த போது, ஐந்தாறு வயதுப் பெண் குழந்தையுடன் ஒரு பெண்மணி அங்கே வந்தார். குழந்தை சட்டென்று கவனத்தைக் கவரும் அழகோடு இருந்தது.

அந்தப் பெண்ணிடம் விசாரித்த போது, தம் குழந்தையை சினிமாவில் நடிக்க வைக்க விரும்புவதாகச் சொன்னார்.

உடனே, அதே வாஹினியில் ஷூட்டிங்கில் இருந்த சின்னப்பா தேவரிடம் போய் விஷயத்தைச் சொல்லி, அப் பெண்மணியையும் அறிமுகம் செய்து வைத்தேன்.

வஹிதா ரஹ்மானைப் பற்றி 'ரோஜாவு மாராயி' படப்பிடிப்பின் போது சொன்னது

“ குழந்தையோட கண்களைப் பாருங்க சார். என்ன பளபளப்பு! இந்தக் குழந்தைக்கு முருகன் வேஷம் போட்டால் ரொம்ப அழகாய் இருக்கும்.... ”

போல், அந்தக் குழந்தையின் எதிர்காலம் பற்றியும் ஓர் உள்ளுணர்வு உந்துதல் காரணமாக நான் சொன்ன போது ''எதை வைச்சு அப்படிச் சொல்றே...'' என்று கேட்டார் தேவர்.

''குழந்தையோட கண்களைப் பாருங்க சார். என்ன பளபளப்பு! இந்தக் குழந்தைக்கு முருகன் வேஷம் போட்டால் ரொம்ப அழகாய் இருக்கும்....'' என்றேன்.

தேவரின் 'துணைவன்' படத்தில் அறிமுகமான அந்தக் குழந்தை நட்சத்திரம் இன்று தம் காந்த கண்களால் ரசிகர்களைச் கட்டியிழுத்துக் கொண்டிருக்கிறார்.

அவர் யார் என்பதை நான் சொல்லியா தெரிய வேண்டும்?

(தொடரும்)

சௌகார் ஜானகி

படம் உதவி : ஃபிலிம் நியூஸ் ஆனந்தன்

குளுகோஸ் ஏற்றிக் கொண்ட தெம்பு!

◆ 'நான் வாழ்வதால் சமூகத்துக்குப் பயன் வேண்டாமா? எனக்கே தலைநிமிர்வு தேவையில்லையா?' என்கிற கேள்விக் கணைகள் தொடுத்து தன்னுடைய சுய முயற்சியால், தன்னம்பிக்கையோடு வாழ்ந்து காட்டும் சீதா விஸ்வநாதன், புதுமை ஆர்வலர்களாகச் சாதனை படைக்க எண்ணும் பெண்களுக்கு முன்மாதிரியாக இருக்கிறார்.

மதுரை - 14, ஆர். பழனி.

◆ "மனம் ஒரு குரங்கு" என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறேன். மனம், "எதையும் சமாளிக்கும் அமைப்பு" என்று கூறும் டாக்டர். எம்.எஸ்.யு வின் கட்டுரை அற்புதம்.

திருச்சி - 5, நா. பாஸ்கர்.

◆ தன்னம்பிக்கைச் சிறப்பிதழைத் தயாரித்த டாக்டர் எம்.எஸ்.யு. அவர்கள் அட்டைத்துடன் அவருடைய முத்திரையை அழுத்தமாகவே பதித்துப் பிரமாதப்படுத்தி விட்டார்.

காட்டூர், எஸ். அருள்மொழி.

◆ ஒவ்வொரு வெற்றிக் கதையும், குளுக்கோஸ் ஏற்றிக் கொண்ட தெம்பை எங்களுக்குத் தந்தது!

மொரட்டுப்பாளையம், இராஜேஸ்வரன்.

◆ அரவிந்தன் கதையில், 'வசதி உள்ளவர்கள் தொழில் தொடங்க வேண்டும்' என்ற கருத்து சரிதான். ஆனால், "சம்பளம் வாங்கிப் பழக்கப்பட்டவன் கோழை" என்றும் "காலண்டர் பார்த்துச் சம்பளம் வாங்குவது தவிர அவன் வேறு எதுவும் உருப்படியாகச் செய்வதில்லை" என்றும் கதாநாயகனின் தாயார் கூறுவது அறிவுரையல்ல; ஆணவம். மாதச் சம்பளம் பெறுவோரும் தேச முன்னேற்றத்துக்குத்தான் உதவுகிறார்கள்; முதல் போடுவோரின் முன்னேற்றத்துக்கும் அவர்கள்தான் முதுகெலும்பு. இந்த மாற்றுக் கருத்தையும் கதாநாயகன் தன்னம்பிக்கையோடு கதையில் வெளிப்படுத்தியிருக்கலாமே!

வாசுதேவநல்லூர், ஆர். வடிவு.

◆ தன்னம்பிக்கைச் சிறப்பிதழைப் படித்தவுடன் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட உணர்வு ஏற்பட்டது. ஒவ்வொரு கட்டுரையும் முத்துப் போல் பிரகாசித்தது.

கல்பாக்கம், பி.பி. ராஜூ.

◆ நாளைய பாரதம் பிரகாசமாக இருக்கப் போகிறது என்று இயக்குனர் பாலசந்தர் கூறுவது நடக்குமோ இல்லையோ, அவருடைய தாயக முன்னேற்ற தாகம் தெரிகிறது. அவருடைய நம்பிக்கையில் சிறிதளவேனும் நாட்டை வழி நடத்திச் செல்லுகின்ற நம் அரசியல் தலைவர்களுக்கு இருந்தால் நம் நாடு உருப்பட்டு விடும்.

திருப்பூர் - 2, கே. மணிகண்டன்.

◆ 'சார்! நிஜமாகவே சொல்கிறேன். எதைப் பாராட்டுவது? எதை விடுவது? ஒன்றுமே புரியவில்லை. கல்கியின் வரலாற்றில் "மணிமகுடம்"தான் தன்னம்பிக்கைச் சிறப்பிதழ்!

சென்னை - 17, க. அசோக்குமார்.

◆ இவ்வார கல்கி இதழை வாங்கி அட்டைப் பட மனிதரைப் பார்த்தவுடனேயே எங்கள் மனத்திற்குள் தன்னம்பிக்கை வந்து விட்டது. சிறுகதைகளும் அருமை. பாராட்டுகள்.

திருவாரூர், கே. எஸ். கடா.

◆ மானாவாரியில் கஷ்டப்பட்டுக் கொண்டு வாழ்ந்த சரவணன், சிந்தனை, சிக்கனம், உழைப்பால் கோழிப் பண்ணை வைத்துச் செல்வச் செழிப்பால் சிறந்து விளங்கும் கட்டுரை பயனுள்ளது.

கோவை - 9, இ. இ. நேரு.

◆ தன்னம்பிக்கைச் சிறப்பிதழைப் படித்த போது, வார இதழைப் படிக்கிறோம் என்ற உணர்வே இல்லாமல் 'தனித்த' புத்தகத்தைப் படிக்கிறோம் என்ற உணர்வே உண்டானது. நம்பிக்கைச் சின்னமான விவேகானந்தரின் படத்தை வெளியிட்டிருக்கலாம்.

பேரளூர், எஸ். பாபு.

◆ 'தன்னம்பிக்கைத் தலைவர்கள்' தலையங்கத்தின் ஒவ்வொரு வார்த்தையிலும் நகைச்சுவை மிளிர்ந்தது. கடைசி வரியில் கூறப்பட்டிருந்த புதிருக்கு யாராலுமே விடை கூற முடியாது!

ஆரூர், மு. மதிவாணன்.

◆ தன்னம்பிக்கையைப் பற்றிய கல்கியின் வித்தியாசமான முயற்சி பாராட்டத்தக்கது. எதற்கெடுத்தாலும் "புரட்சித் தலைவியால்தான் தமிழகமும், அதிலுள்ள அனைத்தும் வாழ்கின்றன; இப்பதவி தலைவி இட்ட பிச்சை" என்றெல்லாம் பேசும் அனைத்து அமைச்சர்களுக்கும் ஒவ்வொரு கல்கி இலவசமாக அனுப்பலாம். எதற்கெடுத்தாலும் மத்திய அரசைக் குறைகூறித் தப்பிக்கப் பார்க்கும் நமது முதல்வருக்கும் இலவசமாக ஒரு கல்கி அனுப்பலாம்.

மருங்கூர், பாலு. கிருஷ்ணமூர்த்தி.

◆ "தன்னம்பிக்கை" என்ற பெயரில் ஒரு பத்திரிகை மலேசியாவிலிருந்து வருகிறது என்ற செய்தி மிகவும் மகிழ்ச்சியளிப்பதாகும். நமது ஊரிலேயே 'தன்னம்பிக்கை' என்ற ஒரு மாத இதழ் நான்கு ஆண்டுகளாக வெளிவருகிறது. கோவை நகரிலிருந்து வெளிவரும் இப்பத்திரிகையின் நிறுவன ஆசிரியர் மறைந்த டாக்டர் இல. செ. கந்தசாமி. டாக்டர் உதயமூர்த்தியின் நெருங்கிய நண்பர். டாக்டர் இல.செ.கவின் மறைவுக்குப் பின் ஓர் இளைஞர் குழுவே இதனைக் கண்ணும் கருத்துமாகத் தயாரித்து வெளியிட்டு வருகிறது.

மதுரை - 1, க. அரவிந்தன்.

நீங்கள் கேட்டவை - தராசு

போக்குவரத்துக் கழகத்துக்குப் புரட்சித் தலைவியின் பெயராமே....?

● தாமல் கண்ணன், பெங்களூர்.

? பதன்வால் என்னுமிடத்தில் கோவிலில் நுழைய முற்பட்டதற்காக ஹரிஜனங்கள் மூவர் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளனரே? இதைப் படித்ததும் ஹிந்து மதம் பற்றி உங்களுக்கு என்ன எண்ணம் ஏற்பட்டது?

! ஹிந்து மதத்தைப் பற்றிச் சரியாகத் தெரிந்து கொள்ளாதவர்கள் பலர் அந்த அன்பு மதத்தில் இருக்கிறார்கள் என்பது ஒன்று. மக்களுக்குக் கல்வி போதிப்பதில் போதிய முன்னேற்றம் இல்லை; அவிக்கப்படும் கல்வியும் சரியானதாக இல்லை என்பது இரண்டு.



★ கூட்டணி...



★ ...அமைத்தால்...?

● கே. ஆர். உபேந்திரன், தஞ்சை.

? 'கரசேவை நடந்து கொண்டிருக்கும் போது பிரதமர் அதைத் தடுக்காமல் ஏன் இருந்தார்; ராணுவம் அருகில்தானே இருந்தது?' என்ற முதல்வரின் கேள்விக்குக் குமரிஅனந்தன், 'மகாமகத்தின் போது ஏற்பட்ட சாவுகளை அங்கேயே இருந்த முதல்வர் ஏன் தடுக்கவில்லை' என்று பதிலுக்குக் கேட்டிருக்கிறாரே, கவனித்தீர்களா?

! சபாஷ்! சரியான போட்டிக் கேள்வி! மசூதி இடிக்கப்படுவதைத் தடுக்க வேண்டிய பொறுப்பில் இருந்த முதல்வர் கல்யாண்சிங்குக்காவது ராஜினாமா செய்கிற தார்மிக எண்ணம் இருந்தது. நம்மவரிடம் விதண்டாவாதம்தான் இருக்கிறது.

● கே. ஆர். தேவேந்திரன், கொணவட்டம்.

? அ.தி.மு.க.வுடன் கூட்டு இல்லை என அத்வானியும் கூறி விட்டாரே?

! எம்பி எம்பிக் குதித்துப் பார்த்தும் எட்டாமல் போக, 'சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்!'

● மு. ரவிசந்திரன், சேலம்.

? நாமதமாகவாவது மத்திய அரசின் சிறப்புப் பரிசைப் பெற்று விட்டாரே, சிவாஜி?

! பெருமைகள் பரிசுகளால் மட்டும் நிர்ணயிக்கப்படுவதில்லை. அதை மக்களின் அன்பு என்றோ அவருக்கு அளித்து விட்டது. இது அவர் பொறுமைக்குக் கிடைத்த பரிசு!

● சுதாகர், போளூர்.

? கமலும் ரஜினியும் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டால் ஆட்சியைப் பிடிப்பார்கள் என்கிறேன் - நீங்கள்?

! போச்சுடா! நமது அரசியல் இருக்கும் லட்சணத்துக்கு இது ஒன்றுதான் குறைச்சல்!

● கவீட் ரவி, கும்பகோணம்.

? நடிகை திவ்யபாரதியின் மரணம் குறித்து?

! ஸ்ரீதேவிக்குப் போட்டியாக வந்த கவர்ச்சிப் புயல், கால் ஊன்றாமலே கரை கடந்து விட்டது. திரையிலேதான் இவர்களுடைய போலிக் குதூகலமெல்லாம். வாழ்க்கை எவ்வளவு சோகம்! ஏதோ தூக்க மாத்திரை விழுங்கிய மற்றொருவராவது தப்பிப் பிழைத்தாரே, அந்த மட்டில் ஆறுதல்.

● சேஷாத்திரி, சென்னை.

? 'பி.ஜே.பி. மாநாடு சென்னையில் நடந்த அனுமதித்தால் தமிழகத்தின் அமைதி



★ சபாஷ் கேள்வி!

கெட்டு விடும்' என்று வாய் கிழியப் பேசிய மாநில அரசியல்வாதிகளை எப்படி மூக்குடைத்தார்கள் இந்த பி.ஜே.பி.காரர்கள்? பி.ஜே.பி. என்ன ராஜீவ் காந்தியைக் கொன்ற கட்சியா அல்லது வெடிகுண்டு இயக்கமா?


! ரொம்ப உணர்ச்சிவசப்பட்டுப் போயிருக்கிங்க, மிஸ்டர் சேஷாத்திரி. உணர்ச்சிவசப்பட்டால் குழப்பமின்றிச் சிந்திக்க முடியாது. குழப்பமின்றிச் சிந்தித்தால் மாநாடு வேறு, பேரணி வேறு, பொதுக்கூட்டம்

வேறு என்பது புரியும். அவதூறு கமத்தா மலும் இருக்க முடியும். கவனியுங்கள், கல்கத்தாவில் பி.ஜே.பி. பொதுக் கூட்டத்துக்கு மாநில அரசு விதித்த தடை உத்தரவை நீதிமன்றம் செல்லாதென்று அறிவித்தது. ஆனால் சில நிபந்தனைகளையும் போட்டது. அந்த நிபந்தனைகளை மீறிப் பலர் அப் பொதுக்கூட்டத்தில் பேசியிருக்கிறார்கள். இதுதான் இன்றைய பி.ஜே.பி. காண்பிக்கும் கட்டுப்பாடு! நீதிமன்றத்துக்குக் காட்டும் மரியாதை!

● ஆர். மூர்த்தி, கல்லிடைக்குறிச்சி.

? 'நாட்டு நலனுக்காக ஒழுங்காக வருமான வரி கூட கட்டாத நடிகர்கள், தேசப்பற்று மிக்கவர்களாகக் காட்டிக் கொண்டு உண்ணாவிரதம் இருக்கிறார்கள்' என்று பால்தாக்கரே கூறியுள்ளாரே?

! அரசியல்வாதிகள் மட்டும் என்ன கிழிக்கிறார்களாம்? எல்லாம் ஒரே மோசடிக் கூட்டம்



★ ஜிவ்வென்று விண்வெளிக்கு

டையில் ஊறும் மட்டைகள்தாம்.

● ஜி. ஜெயராமன், கூந்தலூர். ❒

? பெண் விடுதலைக்காகப் பாடுபட்ட பாரதியார் இப்போது இருந்தால் தற்காலம் விதவிதமான உடை அணியும் பெண்களைப் பார்த்து என்ன பாடுவார்?

! 'எத்தனை [illegible] கள் அத்தனை விதசாதனைகள் என்று பட்டியலிட்டுப் பாராட்



★ பொறுமைக்குப் பரிசு!

டுவார். அவர் என்றும் அழகுணர்ச்சிக்கும் அலங்காரத்துக்கும் எதிரி அல்ல. ஆபாசத்துக்கும் அடிமைத்தனத்துக்கும்தான் எதிரி.

● டி. ஏஞ்சல் மேரி, கோவில்பட்டி.

? அரசு நிறுவனங்களுக்குத் தமது பெயரை வைக்கக் கூடாது என்று மறுத்தார் புரட்சித் தலைவர். புரட்சித் தலைவியோ, தமது பெயரில் போக்குவரத்துக் கழகம் உருவாக அனுமதித்துள்ளாரே?

! மாநிலத்தின் பதினான்கு போக்குவரத்துக் கழகங்களுமாகச் சேர்ந்து அறுபது கோடி


★ பட்டியலிட்டுப் பாராட்டுவோர்!

ரூபாய் நஷ்டம் என்று ஒரு செய்தி. இப்படி தலைவி பெயர், தலைவியின் அப்பா பெயர், அம்மா பெயர் எல்லாம் வைப்பதற்குப் பதில், 'தமிழ்நாடு நஷ்டப் போக்குவரத்துக் கழகம்' என்று ஒட்டுமொத்தமாக வைத்து விடலாம்.

● கே. சிவகுமார், மூவலூர்.

? சமீபத்தில் ரசித்துக் கேட்ட பாடல்?

! பி. சுசீலா, எஸ். ஜானகி, பம்பாய் சகோதரிகள், பாலமுரளி, மாண்டலின் சீனிவாஸ் என்று ஐவரது காஸெட்டுகளை ஒரு ஸெட்டாக வெளியிட்டிருக்கிறது சங்கீதா நிறுவனம். இந்த தெய்வீக வழிபாடு செய்யும் பாடல்களை ஒரு ஸெட்டாக வெளியிடக் காரணம் இதன் விற்பனை வருமானம் முழுதும் தமிழக அரசின் ஆலயத் திருப்பணி திட்டத்துக்கு நன்கொடை. எனவே நாம் காஸெட் ஸெட்டை வாங்கும் போது இரட்டிப்பு நன்மை அடைகிறோம். எல்லாப் பாடல்களையுமே ரசித்து மகிழலாம் என்றாலும் பாலமுரளியின் கம்பீரமான குரலில் ஸ்ரீராகத்தில் ஒலிக்கும் 'தோடுடைய செவியன்' நம்மை ஜெட் வேகத்தில் ஜிவ்வென்று விண்வெளிக்கே உயர்த்திச் செல்கிறது!

● ஆர். அப்துல் சலாம், திருச்சி.

? 'தாமரைக்கனியின் வரம்பு மீறிய செயல்களை இந்த அரசு ஆதரிக்கவில்லை' என்று ஜெயலலிதா கூறுகிறாரே?

! 'ஆனால் அவர் செயல்களுக்குத் நாம் பொறுப்பேற்க முடியாது; தடுக்க முடியாது' என்றும் சொல்கிறார். அப்படியானால் சு. சுவாமியின் சட்ட வரம்புக்கு உட்பட்ட செயல்களை மட்டும் பிரதமர் தடுக்க வேண்டும் என்று முதல்வர் எப்படி எதிர்பார்க்கிறார்? சு. சுவாமியின் செயல்களுக்குப் பிரதமர் எப்படி பொறுப்பாக முடியும்?

● எஸ். இராஜசேகரன், கொளப்பாடு.

? 'தமிழகத்தில் உள்ள குழந்தைகள் எல்லாம் இளம் சிங்கங்களாக வேண்டும் என்பதே என் நோக்கம்' என்கிறாரே ஜெ?

! முதலில் அவர் பொறுப்பில் விடப்படும் தொட்டில் குழந்தைகளின் பராமரிப்பு சரியாக இருக்கிறதா பார்க்கட்டும். சேலம் ஆஸ்பத்திரியில் மூன்று தொட்டில் குழந்தைகள் கண் மூடி விட்டன - நிரந்தரமாக. இந்த லட்சணத்தில் இளஞ் சிங்கங்களாவது.. புலிகளாவது...


❒ ரூ 25 பரிசு பெறுபவர் :
ஜி. ஜெயராமன்,
கூந்தலூர் B-O
எரவாஞ்சேரி - 609 501.

முளைக்கிறது இன்னொரு 'காவேரி' பிரச்னை!

கேரளாவில் உள்ள முல்லைப் பெரியார் அணைக் கட்டிலிருந்து தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் அனுப்புவது சம்பந்தமாக 1866 - ஆம் ஆண்டு ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தம் அப்போதைய திருவிதாங்கூர் மகாராஜாவுக்கும் மதறாஸ் பிரசிடென்ஸியை ஆண்ட பிரிட்டிஷாருக்கும் இடையேயானது. '999 வருடங்களுக்கான இந்த ஒப்பந்தம் இன்று செல்லுபடியாகுமா?' என்ற கேள்வி எழுந்துள்ளது.

அண்மையில், கேரள சட்ட சபையில் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் டி.எம். ஜேக்கப் இது பற்றிப் பேசினார். பழைய அமைப்பிலான மாநிலங்களுக்கிடையே நிகழ்ந்த ஒப்பந்தங்களை வாரிசு மாநிலங்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்று உச்ச நீதி மன்றமே ஒரு வழக்கில் தீர்ப்பு கூறியுள்ளது. தவிர 1956 இல் இந்திய மாநிலங்கள் மாற்றியமைக்கப்பட்ட போது உருவான State Reorganisation Act - (87) படியும் பழைய ஒப்பந்தங்கள் மதிக்கப்பட வேண்டும் என்பது தெளிவு. இருப்பினும் 127 ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த ஒப்பந்தம் இன்றைய சூழலில் எப்படி நியாயமாய் இருக்கும் என்று கேள்வி எழுப்புவோரும் இருக்கிறார்கள். இன்னொரு காவேரி பிரச்னை கிளம்புகிறதோ?!


●● கேரள அரசு போக்குவரத்துக் கழகம்தான் மாநிலத்திலேயே அதிக நஷ்டமடையும் அரசு அமைப்பு. இருந்தாலும் இந்தக் கழகம் தனது ஊழியர்களுக்குப் பிரதி மாதமும் முதல் தேதி சம்பளம் கொடுத்து வந்தது - இந்த ஏப்ரல் 1 வரை. அன்று சம்பளம் தர முடியாமல் போனதற்குக் காரணம், '31 மார்ச்சுக்கு முன்னதாகப் பழைய கடன்களை அடைக்காவிட்டால் டீசல் சப்ளை நிறுத்தப்படும்' என்று இந்தியன் ஆயில் கார்பரேஷன் விடுத்த கெடு. பழைய பாக்கி ரூ. 10.5 கோடி! ஊழியர்களுக்குத் தர வேண்டிய சம்பளம், பென்ஷன் மொத்தத் தொகை 8.5 கோடி. கடனை முதலில் தீர்த்தது கழகம். ஐந்து தேதி வரை சம்பளம் தர முடியாமல் கை பிசைந்து நிற்க,



முதல்வர் கருணாகரன் தலையிட்டால் ஏப்ரல் ஆறாம் தேதி சம்பளம் பட்டுவாடா ஆயிற்று.

கேரள போக்குவரத்து கார்ப்பரேஷனுக்கு உள்ள ஆஸ்திகளின் மதிப்பு 184 கோடி ரூபாய். ஆனால் மொத்த கடனோ (மார்ச் 31 1993 தேதி முடிய) 408 கோடி ரூபாய்! எங்கே போகிறது போக்குவரத்துக் கழகம்?!

– எஸ். எஸ். மணி



''நீங்க செய்யப் போற ஆபரேஷனுக்குப் போலீஸ் பாதுகாப்பு எதற்கு?''

''நான் செய்யப் போற ஆபரேஷன் தலைவருக்கு. ஏதாவது ஏடாகூடமாகத் தொண்டர்கள் உணர்ச்சி வசப்பட்டுட்டாங்கன்னா என்ன செய்யறது!''

- கே. வி.

சக்கரவர்த்தித் திருமகன்

33. களங்கமற்ற உள்ளம்

ராஜாஜி

பரதனும் பரிவாரமும் வெகு துரிதமாகவே புறப்பட்டு, வேகமாகப் பிரயாணம் செய்தார்கள். குதிரைகளுக்கு ஆங்காங்கே குளிப்பாட்டித் தீனி போட்டு இரவில் சில இடங்களில் தங்கி அயோத்தியா நகரம் எட்டாவது தினம் அதிகாலையில் வந்து சேர்ந்தார்கள்.

"இதென்ன சாரதியே, நகரம், நான் ஊரை விட்டபோது இருந்த மாதிரி இல்லை. எப்போதும் கலகல வென்று சந்தோஷமாக இருக்குமே? இன்று அப்படி இல்லை. காலையில் நகரத்திலிருந்து ஜனங்கள் வெளியே வருவதும் உள்ளே புகுவதுமாக எப்போதுமுள்ள காட்சி இன்று காணவில்லையே?"

இவ்வாறு பரதன் சந்தேகப்பட்டுச் சாரதியுடன் பேசிக் கொண்டே போனான்.

"ஊருக்கு வெளியே தோட்டங்களில் சந்தோஷ முகங்களுடன் இருக்க வேண்டிய மகளிரும் புவர்களும் இன்று ஏன் துக்கக் குறிப்புகளோடு காணப் படுகிறார்கள்? எல்லாம் ஏதோ துயர நிலையில் இருப்பதாகத் தோன்றுகிறது" என்றான்.


"மங்கள வாத்தியங்கள் ஏதும் முழங்கவில்லை; புஷ்பம் அணிந்து, சந்தனம் பூசி உல்லாசமாக இருக்கும் நகரவாசிகள் யாரையும் காணவில்லை. ஊரில் வழக்கமாகக் கேட்கும் பேரிகை மிருதங்க ஒலி காதில் விழவில்லை. இது என்ன ஆச்சரியம்! பல கெட்ட சகுனங்கள் காணப்படுகின்றனவே! என் கவலையை அடக்க முடியவில்லை" என்றான்.

வைஜயந்தம் என்ற கோட்டை வாயில் வழியாகப் பரதனுடைய ரதம் நகரத்துக்குள் பிரவேசித்தது. கடைத் தெருவுகளும் மாளிகைகளும் கோயில்களும் எவ்வித அலங்காரமுமில்லாமல் சரியாக மெழுகிக் கோலமிடாமலும் இருந்ததைப் பார்த்தான். ஜனங்கள் பட்டினி கிடந்த முகங்களோடு காணப்பட்டார்கள். கெட்ட நிமித்தங்களே மேலும் மேலும் காணப்பட்டன. எல்லாவற்றையும் பார்த்து பரதன், ஏதோ பெரும் விபத்து நடந்து விட்டிருக்கிறது என்று நிச்சயித்துக் கொண்டான். அதற்காகத் தான் இவ்வளவு அவசரமாக உடனே வர வேண்டும் என்று சொல்லி யனுப்பினார்கள் என்றும் கண்டான்.

தசரதனுடைய மாளிகைக்குள் பிரவேசித்தான். அங்கே தந்தையைக் காணவில்லை. கவலை இன்னும் அதிகரித்தது. உடனே தாய் கைகேயியைப் பார்க்கலாம் என்று அவளுடைய மாளிகைக்குள் புகுந்தான். ஊரிலிருந்து திரும்பி வந்த தன் மகனைப் பார்த்ததும் கைகேயி அவனைக் கட்டி யணைத்துக் கொள்ளத் தன் தங்க ஆசனத்தை விட்டுக் குதித்து இறங்கினாள்.

அவனும் அவள் கால்களைத் தொட்டு வணங்கினான். மகனை அணைத்து உச்சி மோந்து, "வந்தாயே, அப்பனே! மகாராஜனாக இருப்பாய்! பிரயாணம் சுகமாக இருந்ததா? அங்குள்ளவர்கள் எல்லோரையும் பற்றிச் சொல்!" என்று மடியின் மீது உட்கார வைத்துக் கொண்டு மிக்க பரிவுடன் கேட்டாள்.

"நான் வந்து சேர ஏழு நாள் ஆயிற்று. அங்கே எல்லோரும் சௌக்கியமாக இருக்கிறார்கள். பாட்டனார், மாமன் யுதாஜித் எல்லோரும் உன் சுகத்தை விசாரித்ததாகச் சொல்லச் சொன்னார்கள். நிறையச் சன்மானங்கள் கொடுத்தனுப்பியிருக்கிறார்கள். எல்லாம் பின்னால் வரும். நான் அவசரமாக முன் ரதத்தில் வேகமாக வந்தேன். மிக முக்கியமான காரியம், உடனே வர வேண்டுமென்று இங்கிருந்து வந்த தூதர்கள் என்னை மட்டும் வேகமாக முன்னால் அழைத்து வந்தார்கள். இதற்கென்ன காரணம்,



ஏதனாலே?

❂ தென்னை, பனை மரங்கள் போல மாமரம் உயரமாக வளருவதில்லையே! ஏன்?

அம்மா? மகாராஜாவைப் பார்த்து வணங்க அவருடைய மனைக்குச் சென்றேன். அவர் அங்கே இல்லை. இங்கேயும் அவருடைய ஆசனம் காலியாக இருக்கிறது. இங்கேதானே வழக்கமாகப் படுத்திருப்பார். ஒரு வேளை பெரிய தாயார் மனைக்குப் போயிருக்கிறாரோ? நான் உடனே அவரைத் தரிசித்து வணக்கம் செலுத்த வேண்டும்'' என்றான்.

நடந்த நிகழ்ச்சிகள் ஒன்றும் அறியாத தன் மகனுடைய இந்தக் கேள்விக்கு ராஜ்யாதிகார ஆசையால் மதியிழந்து போன கைகேயி பதில் சொல்லுகிறாள் :

''குழந்தாய்! உன் தகப்பனார் உலகத்தில் பிறந்தவர்கள் அடைய வேண்டிய சுக போகங்களையெல்லாம் அடைந்தார். அரசர் மகா பாக்கியவான். பெரும் புகழ் பெற்றவர். செய்ய வேண்டிய பெரிய வேள்விகளையெல்லாம் செய்து தீர்த்தார். நல்வழியில் நின்றவர்களுக்குப் புகலிடமாயிருந்தார். அவர் அடைய வேண்டிய பரம பதத்தை அடைந்து விட்டார்!'' என்றாள்.

இதைக் கேட்டதும் பரதன், ''ஐயோ நான் செத்தேன்'' என்று கதறி, அழகிய நீண்ட கைகளை விரித்துக் கொண்டு கீழே விழுந்தான்.

பின்னர் எழுந்து, அரசனுடைய படுக்கையைப் பார்த்து, ''இந்தப் படுக்கை சூனியமாகப் போயிற்றே!'' என்று அங்கவஸ்திரத்தால் முகத்தை மூடிக் கொண்டு கண்ணீர் தாரை தாரையாகப் பெருக, அரசகுமாரன் ஒரு ஏழை அநாதையைப் போல் அழுதான். இளம் யானையைப் போன்ற தேகமும், சந்திரனைப் போன்ற முகமும் கொண்ட வீரன் பூமியில் விழுந்து புரண்டு அழுதான். காட்டில் கோடாலியால் வெட்டித் தள்ளப்பட்ட பெரிய ஆச்சா மரம் போல் தரையில் கிடந்த மகனைப் பார்த்து கைகேயி, ''எழுந்து நில், அரசனே! எழுந்து நில்! தரையில் ஏன் கிடக்கிறாய்? இது அரசனுக்குத் தகாது. பெரியோர்களுடைய பெரு மதிப்பும் நல்ல கீர்த்தியும் பெற்றிருக்கிறாய். சனாதன வேத வழியில் நின்று தருமமும் வேள்வியும் செய்யும் பதவியை அடைந்திருக்கிறாய். உன் மதி ஜோதிமய சூரியனைப் போல் பிரகாசிக்கிறது. உனக்கு ஒரு குறையுமில்லை. மனக் கலக்கத்தை யொழித்து, தைரியம் பூண்டு எழுந்து நில்!'' என்றாள்.

களங்கமென்பது துளிக்கூட இல்லாத உள்ளத்தைப் பெற்ற மகான் பரதன். வெகு நேரம் அழுது புரண்டு அலறியபின் எழுந்து தாயைப் பார்த்து, ''அரசன் ராமனுக்கு யுவராஜ்ய அபிஷேகம் வெகு விமரிசையாகச் செய்வான்; திரும்பி வந்து அதையெல்லாம் பார்க்கலாம் என்கிற ஆசையோடல்லவா நான் மாமன் வீட்டுக்குப் புறப்பட்டுப் போனேன். இப்போது இப்படியாகி விட்டதே. ஐயோ! என்னால் பொறுக்க முடியவில்லையே! தந்தையின் பிரிய முகத்தைக் காணவில்லையே! என்ன வியாதி, எப்படி வந்து விட்டது? நான் பக்கத்தில் இல்லாமல் போய் விட்டேனே, என் அம்மா! ராமனும் மற்றவர்களும் அல்லவோ புண்ணியம் செய்தவர்கள். தந்தையை உபசரித்து நோயின் உபத்திரவத்தைத் தணித்து வந்தார்கள், அவர்கள் பாக்கியசாலிகள். எனக்கு அந்த பாக்கியம் இல்லாமற் போய் விட்டதே! என் உடம்பில் பட்ட மண்ணைத் தன் கையால் பிரியமாகத் துடைப்பாரே. அவர் கைகள் என் உடலில் படும்போது அந்த ஸ்பரிசம் சொல்ல முடியாத ஆனந்தத்தைத் தந்ததே! நான் அவருக்குக் கொஞ்சமும் உதவாமல் போய் விட்டேனே! அம்மா! அண்ணன் ராமன் எங்கே? அவனே இனி எனக்குப் பிதாவும் குருவும். உடனே அவனைக் கண்டு அவன் பாதத்தில் விழ வேண்டும். இனி அவனே அல்லவோ எனக்குக் கதி? அம்மா, கடைசியாகத் தந்தை எனக்காக என்ன சொல்லி விட்டுப் போனார்? அவருடைய கடைசிச் சொற்கள் என்னவென்று அவர் சொன்ன மொழிகளாகவே நான் கேட்க விரும்புகிறேன்'' என்று இவ்வாறு அழுது கொண்டு பரதன் கேட்டான்.

உண்மைக்கு மாறாக ஏதுமில்லாமல் தன் எண்ணத்தை நிறைவேற்றும் கருத்தாகவே கைகேயி பதில் சொன்னாள். பண்பாட்டின் தடை ஒருபுறம், ஆசை வேகம் ஒரு புறம் இவற்றின்

இடையில் பேசினாள். பரதனுக்காக அரசன் அந்திக் காலத்தில் ஏதும் சொல்லவில்லை என்கிற பொருள் படவும் இன்னும் சொல்லித் தீர வேண்டிய கொடிய நிகழ்ச்சிகளைச் சொல்வதற்கு வசதி ஏற்படவும் பேசினாள் :

''உன் பிதா, 'ஹா, ராம! ஹா, லக்ஷ்மண! ஹா, ஜானகி!' என்று கதறிக் கொண்டு பிராணனை விட்டார். உன் பிதாவானவர் அந்திய காலத்தில் சொன்னது இவ்வளவே. 'ராமனும் லக்ஷ்மணனும் சீதையும் திரும்பி வருவதை நான் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. பார்ப்பவர்கள் பாக்கியம் பெற்றவர்கள்' என்று சொல்லி அரசர் இறந்தார்'' என்றாள்.

இதைக் கேட்டதும், ''ஐயோ, பக்கத்தில் ராம லக்ஷ்மணர்களும் இருக்கவில்லையா?'' என்று பரதனுடைய துக்கம் இரு மடங்காயிற்று.

''அவர்கள் எங்கே, என்ன காரியமாகப் பக்கத்தில் இல்லாமல் போய் விட்டார்கள்?'' என்று பரதன் கைகேயியைக் கேட்டான்.

அதன் மேல் எல்லாவற்றையும் சொல்லி அவனைச் சமாதானப் படுத்தலாம் என்று எண்ணி, ''அப்பா, உன் அண்ணன் ராமன் லக்ஷ்மணனையும் சீதையையும் அழைத்துக் கொண்டு தண்டகாரணிய வனத்துக்குத் தவ வேஷம் பூண்டு சென்று விட்டான்'' என்றாள்.

அதைக்கேட்ட பரதன் வியப்படைந்து, ''இது என்ன எனக்கு ஒன்றும் விளங்கவில்லை? ராமன் என்ன குற்றம் செய்து இந்தத் தவம் செய்யச் சென்றான்? எந்தப் பிராமணன் சொத்தை அபகரித்தான்? அவன் எந்த நிரபராதியை இம்சித்தான்? அவன் எந்த அந்நிய ஸ்திரீயை விரும்பிப் பிழை செய்தான்? எதற்காக ராமன் தண்டகாரண்ய வனம் போக வேண்டியதாயிற்று? யார் இந்தப் பிராயச் சித்தம் விதித்தது?'' என்று கேட்டான்.

அந்தக் காலத்தில் வனம் போகும் தண்டனை இவ்வித பெருங் குற்றங்களுக்குத்தான் விதிப்பது முறையாய் இருந்தது. இதன் மேல் கைகேயி விஷயங்கள் எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லத் தைரியங் கொண்டு ஆரம்பித்தாள்.

''ராமன் எந்தத் தவறான காரியமும் செய்யவில்லை. யாருடைய பொருளும் அபகரிக்கவில்லை; யாரையும் இம்சிக்கவில்லை. எந்த அந்நிய ஸ்திரீ முகத்தைக் கண்ணெடுத்துப் பார்த்தது மில்லை. ராமனுக்குப் பட்டாபிஷேகம் நடத்துவதாக ஏற்பாடுகள் செய்வதையறிந்து நான் உனக்காக உன் தந்தையை வரம் கேட்டுப் பெற்றேன். உனக்கு ராஜ்யாதிகாரம் தந்து விட்டு ராமன் ஊரை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்று உனக்காக நான் கேட்டேன். சத்தியத்துக்கு உட்பட்டு முன் கொடுத்த தன் வாக்கை நிறைவேற்றித் தன் தருமத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மகாராஜா நான் சொன்னதுக்கு ஒப்புக் கொண்டார். சீதையையும் லக்ஷ்மணனையும் அழைத்துக் கொண்டு ராமன் வனம் சென்று விட்டான். அந்தப் பிரிவைப் பொறுக்க முடியாமல் தந்தை உயிர் நீத்தார். நீ இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்பதை யோசிப்பாய். தருமம் தெரிந்தவனாக இருக்கிறாய். ராஜ்ய பாரத்தை ஒப்புக் கொள்ள வேண்டும். உனக்காகவே இதையெல்லாம் செய்தேன். துக்கப்படாதே. மனத்தை நிலையில் நிறுத்திக் கொள். இந்த நகரமும் ராஜ்யமும் உன் ஆதீனத்துக்குச் சுகமாக வந்திருக்கின்றன. கிரமப்படி வசிஷ்டர் முதலிய பிராமண உத்தமர்களைக் கொண்டு தந்தையாரின் உத்தரக் கிரியைகளைத் தாமதமின்றிச் செய்து முடித்து ராஜ்யாபிஷேகம் செய்து கொள்ளுவாய். நீ க்ஷத்திரிய வீரன், தந்தை கையிலிருந்து ராஜ்யம் பெற்ற அரச குமாரன், உன் கடமையைச் செய்'' என்றாள்.

(தொடரும்)



நடுத்தர குடும்பங்களும் இப்போது பண்ணை வீடுகளை கட்டி அனுபவிக்கலாம்... நல்ல முதலீடாகவும் பயன்பெறலாம் !

காஞ்சிபுரம் அருகே அனைத்து வாழ்வு—வசதிகளுடன் பெரும் பண்ணை வளாகம்



சுலபமான தவணைகளில் பணம் கட்டி, பண்ணை-மனையையும் பின்பு பண்ணை வீடும் வாங்கிடும் வசதி - இந்த பரந்த பண்ணை-வளாகத்தின்

சென்னை — பொதுவாக பண்ணை வீடுகள் (Farm Houses) கட்டி வாழ்வது செல்வந்தர்களுக்கே முடியும், அது ஒரு ஆடம்பர வாழ்க்கை என்ற கருத்து இருந்து வந்துள்ளது.

ஆனால், இரைச்சல் மிகுந்த, மாசுபடிந்த, சுற்றுப்புற சூழ்நிலை மோசமான நகரங்களில் வாழும் மக்களுக்கு இவ்வாறான பண்ணை-வீடுகளை கட்டி, அதில் இப்போதும், பின்பு முதுமையிலும் வாழ்ந்திட வேண்டும் என்ற விருப்பம் அதிகரித்து விட்டது. இதை நனவாக்கிட ஒரு பெரும் பண்ணை வளாகத்தையே உருவாக்கிட முதன்முதல் முன்னோடியாக இருக்கிறது வீனஸ் ஹாலிடே ரிஸார்ட்ஸ் (பிரை) லிட். என்ற கம்பெனி. அதன் நிர்வாக இயக்குனர் திரு.ஆர்.தேவதாஸ் பிரபு கூறுகிறார்: "பலருக்கு தமக்கு என்று தனியாக பண்ணை வீடு அமைப்பதற்கு நேரமும், முழுப்பணமும் இல்லாத, பராமரிப்பு வசதிகள் உருவாக்கிட முடியாத கனவாகிவிட்டது. ஆகவே, அவ்வாறான மக்களுக்கு என எமது நிறுவனம் எல்லா வசதிகளும், பொழுதுபோக்கு அம்சங்களும், பாதுகாப்பும், உண்மையான பசுமையும், பண்ணை சூழ்நிலையும் கொண்ட பெரும் வளாகத்தை திட்டமிட்டு தயார் நிலைக்கு கொண்டு வந்துள்ளது. ஒவ்வொரு உறுப்பினருக்கும் 6000ச.அடி. முள் கம்பி மற்றும் 10 அடி இரும்பு கதவு போட்ட நிலமும், 14 தென்னை மரங்களும், 6 வகை பழ மரங்களும், நட்டு, 6 வருட சிறந்த சொட்டு நீர் பாசனம் மூலம் பராமரிப்பு செய்கிறது. அதற்கு பிறகும் அங்கத்தினர் விரும்பினால் இந்நிறுவனமே பராமரிப்பு செய்யவும் உள்ளது.பராமரிப்பு செலவு போக மாதம் 1000 ரூபாய் வருமானம் வரும். பாதுகாப்பு கருதி மொத்த வளாகத்தைச் சுற்றி 24 மணி நேரமும் பாதுகாப்பு அளிக்கிறது. பண்ணை வளாகத்தில மனை வாங்குபவர்களுக்கு பால் வழங்கும் நிலையம் முதல் மருத்துவ சாலையும், டிவி முதல் கேபிள் டிவி வரையும், ஃபோன் முதல் பொழுது போக்கு வசதிகளும் நிறைந்தது.

இந்த சிறந்த திட்டம் சென்னை-பெங்களூர் நெடுஞ்சாலையில் காஞ்சீபுரம் அருகே செயல்பட்டு வருகிறது. நிர்வாகம் வருங்காலத்தில் போக்குவரத்து வசதிகளையும் செய்கிறது. நடுத்தர மக்களுக்கான இந்த சிறந்த திட்டம் ஆரம்பத்திலேயே கிரயம் செய்வதுடன், மீதமுள்ள பணத்தினை 72 எளிய தவணைகளாக செலுத்தவும் வசதிகள் செய்துள்ளது. ஒவ்வொரு மாதமும் குலுக்கல் மூலம் பரிசுகளும் அளிக்கிறது. ஆகவே இந்த அரிய சந்தர்ப்பத்தினை நழுவ விடாதீர்கள்

"இந்த வாய்ப்பை விரைவிலேயே பயன்படுத்திட தமது கம்பெனியை உடனே அணுகலாம், மேல் விவரங்களும் பெறலாம்" என்கிறார் திரு. பிரபு." ஏனென்றால் இது ஒரு நல்ல பலன்களைத் தரும் முதலீடு கூட அல்லவா !" என்கிறார் திரு. பிரபு.

வீனஸ் ஹாலிடே ரிஸார்ட்ஸ் (பிரை) லிட்.

147, ரங்கராஜபுரம் பிரதான சாலை,

கோடம்பாக்கம், சென்னை-600 024

தூ....ர்தர்ஷன்!

புத்தாண்டு, பொங்கல், தீபாவளி இன்னபிற பண்டிகை நாட்களில் (மட்டுமாவது) நேயர்களை (அவர்கள் பாஷையில் அன்பர்களை) சந்தோஷப்படுத்தும் கைங்கர்யத்தைச் செய்ய, சென்னைத் தொலைக்காட்சி ரொம்ப வருஷங்களாக முயன்று வருகிறது.

ஆனால் நிகழ்ச்சிகளில் மாறுதல் ஏதும், எப்போதும் இருந்ததாகச் சரித்திரம் இல்லை. பிரபலமானவர் விலாசங்கள் அடங்கிய புத்தகம், ரயில்வே கைடு, டெலிபோன் டைரக்டரி போன்று இந்தப் பண்டிகை நிகழ்ச்சிகளையும் ஒரு 'கேட்டகரி'க்குள் அடக்கி விடலாம். காஞ்சிப் பெரியவர் அருள்வாக்கு, நாதஸ்வரம், ஒரு நாடகம், ஒரு கவியரங்கம் (அ) பட்டிமன்றம் ஒரு ஒலியும், ஒளியும், ஒரு சினிமாக்காரரின் மலரும் நினைவு...

தமிழ்ப் புத்தாண்டு நிகழ்ச்சிகளிலும் பெரிதான வித்தியாசம் ஏதுமில்லை.

நாடகம். 'டயரே டயரே நீ யாரோ' என்கிற அதி அற்புத நகைச்சுவைக் கவிதை மூலம் டீவியில் நுழைந்து அவ்வப்போது தலைகாட்டும் சந்தானத்தின் புத்தாண்டு நாடகத்தை நகைச்சுவை லிஸ்டில் சேர்க்கிறதென்றால், இந்த வருடத்தின் மகத்தான சோகம் அதுதான்! ஏனைய நிகழ்ச்சிகளுக்குத் திருஷ்டிப் பொட்டு.

பெண் சுதந்திரம் பற்றின வழக்காடு மன்றத்தில் வயிறு

✱ மலர்ந்த நினைவு.



வருஷம் புதுசு, நிகழ்ச்சிகள்..?

வெடிக்கச் சிரிக்க வைத்த டாக்டர் அறிவொளியின் நிஜ நகைச்சுவை. விக ஸ்டைலில் ஒவ்வொரு முறையும் அவர் வைத்த முத்தாய்ப்பு - ஒண்ணாங்கிளாஸ் ஹ்யூமராக்கும். இளம்பிறை மணிமாறனின் அதி சீரியஸ் வாதங்களுக்கு ரொம்ப லைட்டாக பதில் சொன்ன பாங்கு நயம். அறிவொளியின் ஓரட்டியில் சத்திய சீலன் அம்பேல்!

விஜயகாந்த் நினைவுகள். 'அவரது தமிழ் பற்றும் தளராத முயற்சிகளும்'. வரிசையாக இன்ஸ்டிடியூட் மாணவர்களின் படக் காட்சிகள். அநேகமாக எல்லாப் படங்களிலும் போலீஸாகவே வந்திருக்கிறார். ஏழெட்டு படங்களிலிருந்து சில காட்சிகள் பார்த்தது தவிர விசேஷம் வேறு இல்லை.

மாலை, தமிழ் சினிமாவில் நகைச்சுவை. ஆறே காலுக்கு ஆரம்பித்து, செய்திக்குப் பிறகும் நீண்ட சுவாரஸ்யம். ரொம்ப ஜாக்கிரதையாக, அநேகமாக யாரையும் விட்டு விடாமல் தொகுத்திருந்தார்கள். அசட்டுச் சிரிப்புடன் (ட்ரேட் மார்க்?) அவ்வப்போது விவேக்.

ஆனால், டீவிகாரர்களுக்கு சினிமாவை விட்டால் வேறு கதியில்லை என்ற நிலை எப்பத்தான் மாறுமோ...?! அதுவரை எதையும் புதுசாக எதிர் பார்ப்பது -

ரொம்பத் தப்பு!

- கிச்சா

எதனாலே? எதனாலே? எதனாலே? எதனாலே?




* கத்தத் தங்கம் மிக மிருதுவானது. இதில் செய்யப்படும் நகைகள் எளிதில் நெளிந்து விடும். தவிர, விரைவில் தேயும். இதனை 24 காரட் தங்கம் என்பார்கள். சுத்தத் தங்கத்துடன் தாமிரத்தைக் கலந்து, கடின மும், உறுதியும் கிடைக்கச் செய்து நகைகள் செய்வார்கள். இதற்கு 22 காரட் தங்கம் என்று பெயர்.



○ நம் கண்களை நகர்த்த மூன்று ஜோடி தசைகள் சுருங்கி விரிகின்றன. இவை ஒரே மாதிரி சுருங்கும் தன்மை உடையவை யாகையால், இரு கண்களும், ஒரு சமயத்தில் ஒரே திசையில்தான் நகர் கின்றன. அதாவது, இடது கண்ணை ஒருபுற மும், வலது கண்ணை ஒருபுறமும் நகர்த்து வது இயலாது. ஆகவே, நம் இரு கண்களும் ஒரே சமயத்தில், இரு வேறு பொருட்களைக் காண முடியாது. இப் பார்வைக்கு 'பைனா குலர் பார்வை' என்று பெயர்.



✪ வண்ணத்துப் பூச்சியின் வாய் உறுப்புகள் பூக்களிலுள்ள தேனை மட்டுமே உறிஞ்சும்படி அமைக்கப்பட்டுள்ளன. அது மட்டுமின்றி, தேன் கூட்டிலுள்ள தேன், பூக்களில் உள்ள தேனைப் போன்றதில்லை. தேன் கூட்டிலுள்ள தேன், தேனீக்களால் சேகரிக்கப்பட்டு, அவற்றின் இரைப்பைக்குச் சென்று அங்குதான் (நாம் உபயோகிக்கிற) தேனாக மாற்றப்பட்டு, பின் வெளியே கக்கப்பட்டு, தேனடைகளில் சேமிக்கப்படுகிறது.



* Microbes என்ற நுண்ணு யிர்தான் சேத்துப் புண்ணுக்குக் காரணம். இது மழைக் காலத் தில் மட்டுமின்றி, தண்ணீரி லேயே நெடுநேரம் வேலை செய்கிறவர்களுக்கும் வரும்.



❊ மருதாணி இலைகளில், ஆன்தோசயானின் என்கிற நிறமி உள்ளது. எனவே கைகளில் மரு தாணி இட்டுக் கொண்டவுடன் தோல் சிவப்பு நிறமாகிறது.



❁ தென்னை, பனை முதலியவை ஒரு விதையிலைத் தாவரங்கள். எனவே உயரமாய் வளருகின்றன. மா இரு விதை யிலைத் தாவரம். எனவே படர்ந்து வளருகிறது.



❊ வெங்காயத்தை வெட் டும் போது, அதன் இதழ்களில் காணப்படும் ஆலினேஸ் என்கிற ஒன்று, அந்த இதழ்களில் உள்ள ப்ரோப்பினிசிஸ்டைன் லல் பாக்ஸைடு என்ற பொருள் மீது வினை புரிந்து ப்ரோப்பின் லல்பினிக் அமிலமாக மாறுகிறது. இது எளிதில் ஆவியாகும் குண முடையது. இந்த ஆவி, காற்றில் கலந்து பரவும் போது, கண்களை உறுத்திட, இதன் விளைவால், கண்ணீர் சுரப்பியிலிருந்து நீர் சுரந்து வெளியேறுகிறது.



✣ குளிர்காலத்தில், சுற்றுப்புற வெப்பநிலை குறைவாக இருக்கும் போது, மனித உடல் வெப்பநிலையும் குறையத் தொடங்கும். இதனை சமன்செய்ய மனித உடலே வெப்பத்தை உற்பத்தி செய்யும். இதற்கு thermogenesis என்று பெயர். உடலின் தசைகள் சுருங்கி, விரிவதன் மூலம் வெப்பம் உண்டாகும். அப்போது, தாடைகளின் தசைகளும் சுருங்கி விரியும். இதனால் பற்கள் ஒன்றுடன் ஒன்று கிட்டிக் கொள்ளுகின்றன.

துளிர் இதழில் வெளியான விஞ் ஞானக் கேள்வி பதில்களின் தொகுப் பான 'எதனாலே? எதனாலே? எதனாலே?' என்ற புத்தகத்திலிருந்து :

மௌலக்ஷ்மி

வெளியீடு : சைன்ஸ் பப்ளி கேஷன்ஸ், சென்னை. விலை ரூ. 22.

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.



பல தேசப்
பெருமைகளை
முகத்திலே பிரதிபலிக்கும்
பேரெழில் பெண்மணி
குட்டிகூராவின் மூன்று இண்டர்நேஷனல் ப்யூட்டி டால்க்குகள். உலகிற் சிறந்த நறுமணங்கள் நிரம்பியவை. பட்டுப்போன்று மென்மை யானவை. உங்கள் முகத்திற்குப் பேரெழில் சேர்ப்பவை. பல தேசங் களின் பெருமைகளின் சிறப்பை உங்கள் முகத்தில் பிரதிபலிக்கச் செய்பவை.
Cuticura International Lavender Mist
Cuticura Springfresh
Cuticura International Classic
Cuticura International
BEAUTY TALCS
Chaitra Leo Burnett B MP 10/93 - TAM

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

அபரிமிதமான சுவை, கட்டுக்கடங்காத மகிழ்ச்சி.



வெயிலின் கொடுமையில் வாடுகிறீர்கள். செய்வதறியாது திகைக்கிறீர்கள். மனமோ கொந்தளிக்கிறது. • உங்கள் வாழ்க்கைக்கு சுவையூட்டும் தருணம் இதுவே. நீங்கள் செய்ய வேண்டியது — உடனே வோல்ஃபார்ம் எடுத்து கோப்பையை நிரப்புங்கள். தெவிட்டாத சுவையைப் மகிழ்ச்சியுடன் பருகுங்கள். • ஒரு புத்துணர்வு. ஒரு புது தெம்பு. எதையும் சாதித்திடும் உத்வேகம். உணருகிறீர்கள் அல்லவா ? • மற்றொரு பெரிய கோப்பை அளவைப் பருகவும். பறித்தெடுத்த ஆரஞ்சு, மாம்பழம் மற்றும் பைனாப்பிள் ஆகியவை கனிகளிலிருந்து தயாரிக்கப்படுகிறது. ஆகையால், அதிகம் பருகினால் அதிக மகிழ்ச்சியே. • ஒரு பாட்டிலிலிருந்து 32 கோப்பைகள் தயாரிக்கலாம். ஒரு பார்ட்டி நடத்த போதுமானது. இல்லையா ?



Volfarm
JUICE CONCENTRATE